# நோன்புக் கஞ்சி



திக்குவல்லை கமால்

# நோன்புக் கஞ்சி

திக்குவல்லை கமால்

கலாசார அலுவல்கள் திணைக்களம்

# நோன்புக் கஞ்சி

**(சிறுகதைகள்)**

**திக்குவல்லை கமால்**

**முதலாம் பதிப்பு**
**செப்டம்பர் 2007**

ISBN : 978-955-8377-97-0

**அட்டைப்படம் :**
**மும்தாஸ் ஹபீள்**

**பதிப்பு**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**அச்சகம்**
**தீபானி அச்சகம்**

2007 - திறந்த கையெழுத்துப்பிரதிகள் போட்டித் தெரிவில் வெற்றிபெற்ற படைப்பு

இதன் உள்ளடக்கம் எழுத்தாளர் சார்ந்தது என்பதோடு, அதன்பால் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கருத்துக்கள் பிரதிபலிக்கப்படுவதில்லை என்பதை கவனத்திற் கொள்க.

**பணிப்பும் ஆலோசனையும்**

ஈ.எம் அபயரத்ன
பணிப்பாளர் - கலாசார அலுவல்கள் திணைக்களம்
எப்.எம்.விஜித் கனகல
பிரதிப் பணிப்பாளர்
எச்.டி.டி.பெரேரா
பிரதிப் பணிப்பாளர்

**திறந்த கையெழுத்து போட்டிகள் நிகழ்ச்சித்திட்ட ஒழுங்கமைப்பும் ஒருங்கமைப்பும்**

கே.டி.டி.ஜி.சுமதிபால
உதவி பணிப்பாளர்

பி.சி.ஜீவனீ பியரத்ன
கலாசார அபிவிருத்தி உதவியாளர்

**பதிப்பும் ஒருங்கமைப்பும்**

என்.டி.பியரத்ன
முகாமைத்துவ உதவியாளர்

# ஆசியுரை

1956 ம் ஆண்டு கலாசாரத் திணைக்களம் அமைக்கப்பட்டதன் முதலாக இன்றுவரை தவறாமல் அரச இலக்கிய விழாக்கள் கிரமமாக நிகழ்ந்து வருகின்றன. இதனால் நாடளாவிய ரீதியில் பரந்து வாழும் சிறந்த இலக்கிய கர்த்தாக்களின் படைப்புக்கள் தேர்வுகளுக்குள்ளாகி காத்திரமானவைகள் அரச இலக்கிய விழாக்களில் விருதுகளை வென்றுவருகின்றன. இம்முனைப்பு கணிக்கத்தக்க வகையில் தரமான இலக்கிய படைப்புகளின் வருகைகளுக்கும் அவற்றைச் சிருஷ்டிக்கும் படைப்பாளிகளுக்கு உயரிய சமூக அங்கீகாரத்தை ஈட்டித்தரவும் வழிசமைத்துள்ளதெனலாம்.

இலக்கிய படைப்பாற்றல் வாய்க்கப் பெற்றிருந்தாலும் தமது படைப்புகளை அச்சுருவேற்றி வெளியிட முடியாதவர்களாக பலர் காணப்படுகின்றனர். இத்தகு கவலைக்குரிய நிலைக்கு காரணங்களிலொன்றாக அவர்கள் பொருளாதார வலுவின்மையும் அமையலாம். கனவுநிலைபாற்பட்ட வெளியீட்டு வாய்ப்புங்கூட அவர்களின் படைப்புலக வாழ்கையை அஸ்தமிக்க வைக்க காரணமாகலாம். இந்நிலைமையை சீரமைக்கவும் மென்மேலும் புதிய படைப்புகள் பிரவாகம் பெற வாய்ப்பாகவும் அமைய கலாசார அலுவல்கள் திணைக்களம் படைப்பாக்கங்களுக்கான கையெழுத்துப்பிரதிகள் போட்டிகளை நடத்திவருகின்றது.

கடந்த சில வருடங்களாக, இப்போட்டிகள் நடத்தி அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த பிரதிகளை வரையறுக்கப்பட்ட வகையில் பதிப்பிக்கும் முயற்சிகளை கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறு பதிக்கப்பட்டவைகளில் கணிசமானவை அரச இலக்கிய விருதுகளையும் வென்றுள்ளன. இச்செயற்பாடு தரமான படைப்புகளை ஆக்கும் பொருளாதார வளமற்ற எழுத்தாளர்களை ஆறுதல்கொள்ள செய்துள்ளதெனலாம். எனவே இக்கையெழுத்துப் பிரதிகள் போட்டி முக்கியத்துவமுள்ளதாகவும் புதிய படைப்புகளின் பெருக்கத்துக்கு வழிசமைப்பதாகவும் அமைந்துவிடுவது தெளிவாகின்றது.

சமகால இலங்கை சமூகச்சூழலில் வாசிக்கும் பழக்கமும் எழுதுமாற்றலும் குறைந்து வருகின்றமை குறித்து பிரலாபிக்கப்படுகின்றது. மேலும் தற்போது வெளிவரும் படைப்புகள் பெரும்பாலும் தரம் வாய்ந்தனவாக அமையவில்லை எனும் கருத்தும் நிலவுகின்றது. போட்டிகளுக்கு வந்த கையெழுத்துப் பிரதிகளும் அந்நிலையையே படம் பிடித்து காட்டியுள்ளன. கையெழுத்துப் பிரதிகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான படைப்புகள் ஏற்புடைய தரத்தை கொண்டிருக்கவில்லை என்பதை மதிப்பீட்டாளர்களின் அறிக்கைகள் காட்டுகின்றன. இது நாட்டின் வளர்ச்சிப் போக்குக்கு அனுகூலமானதல்ல என்தனையே உணர்த்துகின்றதெனலாம். எனவே, எழுத்தாளர்களை உயர்தரமான படைப்புகளை ஆக்க ஊக்கமளிப்பதற்கும் வாசகர்களுக்குத் தரமான நூல்கள் கிடைக்கும் ஒரு பின்புலத்தை ஏற்படுத்துவதற்குமான அவசியமேற்பட்டுள்ளது. அதற்காக இக்கையெழுத்துப்பிரதிகள் போட்டி ஏதோ ஒருவகையில் பங்காற்றியிருக்கின்றதென துணிந்து கூறலாம். வெறுமனே இரசிப்புமையமானதான இலங்கை முன்னெடுத்து, வாசகர்களை ஆரோக்கியமற்ற திசையில் ஆற்றுப்படுத்தும் போக்கை மாற்றி, இலட்சியபூர்வமான

யாதுமொன்றை முன்னெடுத்துச்செல்லும் நல்லோடையாக கையெழுத்துப் பிரதிகளுக்கான போட்டி தொடர்ந்து அமைந்துவிடும் என்பதை உறுதியாகக் கூறலாம்.

தேசிய மட்டத்தில் கவனத்திற்குரிய உன்னத இலக்கிய செயற்பாட்டின்பால் எங்களை இயக்கி புதிய புதிய படைப்பாளர்கள் தோன்றுவதற்கு வழிசமைக்கும் கலாசார அலுவல்கள் தொடர்பான கௌரவ அமைச்சர் மகிந்த யாபா அபயவர்த்தன அவர்களுக்கும், இச்செயற்பாட்டுக்கு ஊக்குதலளிக்கும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜி.எல்.எப். சமரசிங்க அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு படைப்புகளை அனுப்பியவர்களுக்கும் மதிப்பீடு செய்த நடுவர்களுக்கும், அச்சேற்ற துணை செய்த அனைவருக்கும் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஈ.எம்.அபயரத்ன
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்

2007.08.23

# திறவுகோல்

கலாசாரத்திணைக்களம் கலை இலக்கியத் துறைக்கு மகத்தான சேவையாற்றி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

வருடாந்தம் தேசிய சாகித்தியப் பெருவிழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் ஓர் அங்கமாக இலக்கியப் பெறுமானம் மிக்க நூல்களை போட்டி அடிப்படையில் தெரிவுசெய்து வெளியிட்டு வருகின்றது.

அந்த வகையில் 2007 ம் ஆண்டுக்குரிய, சிறுகதைத் தொகுப்பு பிரதியாக்கப் போட்டியில் எனது நோன்புக் கஞ்சி தெரிவு செய்யப்பட்டுள்ளமை பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

தென்னிலங்கை மக்களின் வாழ்க்கைக் கோலத்தை இயல்பாக சித்தரிக்க முயன்றுள்ளேன். இவற்றில் இடம் பெறும் கதா மாந்தர்கள் நிஜ வாழ்க்கையில் நாம் சந்திக்கக்கூடிய மனிதர்களே.

உலகமயமாதலென்ற மேற்கத்தேய மயமாதலை துரிதப்படுத்தும் தத்துவார்த்தங்களின் பின்னால், புதுமையென்ற மாயையில் எமது படைப்பாளிகள் ஓடிக்கொண்டிருக்கும் இந்நிலையில், இத்தகைய படைப்பு பரிசுக்குரியதாய் தெரிவு செய்யப்பட்டுள்ளமை, இன்றைய ஆக்க இலக்கியத்தின் தேவை எத்தகைய தென்பதை கட்டியம் கூறுவதாக உள்ளது.

இச்சிறுகதைத் தொகுப்பை தெரிவுசெய்து வெளியிடும் கலாசாரத் திணைக்களத்திற்கும், நூலாக்கத்தில் சம்பந்தப்பட்ட சகலருக்கும் இவ்வேளையில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இலக்கியதாகமே இமயதாகம்.

**திக்குவல்லை கமால்**
10.08.2007

104, Atulugama,
Bandaragama,
Sri Lanka.

T.P. 038-2292118

E-mail : dikkamal@yahoo.com

# கதவுகள்


01. நோன்புக் கஞ்சி

02. சகதி

03. ஆறு பரப்பு நிலம்

04. அந்தப் பழம் இனிக்கும்

05. சுயம்

06. தராதரம்

07. இனிய குடும்பம்

08. தெளிவு

09. மாமரம்

10. கல்யாணக் கடை

11. மார்கழி மலர்கள்

12. வருஷக் கத்தம்

13. தீர்வு

14. முற்றத்து மல்லிகை

15. ஆணி மான்மியம்

# நோன்புக் கஞ்சி

கந்தோரிலிருந்து களைப்போடு வந்து சேர்ந்தான் அத்தாஸ். சேட்டைக் கழற்றிவிட்டு எவ்வளவு நேரம் கட்டிலில் விழுந்து கிடந்தானோ தெரியவில்லை.

சுபஹு தொழுதுவிட்டு நித்திரை செய்தால் வேளைக்கு எழும்ப முடியாதுதான். கொஞ்சநேரம் குர்ஆன் ஓதிக்கொண்டிருக்க நேரம் போய்விடும். குளித்துவிட்டு அப்படியே வேலைக்குப் புறப்பட்டால் இந்த நேரத்தில்தான் வந்துசேரலாம்.

"டக் டக்" கதவில் தட்டும் சத்தம்.

"வா வா தொறந்துதான்" எழும்ப முடியாத சோம்பல்.

அஷ்ர.்.ப் தள்ளித் திறந்துகொண்டு அறைக்குள் புகுந்தான். அவன் மக்கள் வங்கியில் கடமையாற்றுபவன். ஒரே ஊரவர்கள் என்பதால் இப்படி அடிக்கடி சந்தித்துக்கொள்வார்கள். அவனது முகத்திலும் சோர்வு தட்டியிருந்தது.

ஆரம்ப நோன்பு நாட்கள் என்பதால் சற்றே சிரமம்தான்.

"மசான் டவுன் பள்ளீல நோம்பு தொறக்கியத்துக்கு ஏற்பாடீக்காம்" அவன் எப்படியோ விஷயத்தைத் தேடிப்பிடித்துக்கொண்டு வந்திருந்தான்.

அத்தாஸ் மகிழ்ச்சியோடு எழுந்தமர்ந்தான். முகமெல்லாம் முறுவல்.

"நாங்க போறது நல்லமா?"

"டேய் பள்ளீல கஞ்சி குடுக்கியென்டா தாருக்கன் பொகேலாத... எங்களப்போல ஊடு வாசலில்லாதவங்கள

யோசிச்சித்தானே இந்த ஏற்பாட்டச் செஞ்சீக்கி..” அஷ்ர.்.ப் அழுத்தமாகச் சொன்னான்.

முதல் மூன்று நோன்புகளையும் லீவு போட்டுக் கொண்டுபோய் பெண்சாதி பிள்ளைகளோடு பிடித்துவிட்டு வந்தவர்களல்லவா?

பயற்றுக் கஞ்சி, வெங்காயச் சம்பல். கட்லிஸ், பெற்றிஸ், சர்வத்.. இத்தியாதிகளோடு கழித்த நினைவுகள் நெஞ்சுக்குள் ஓடிமறைந்தது.

“அஞ்சரயாகீட்டு சீக்கிரம் எழும்பி ரெடியாகு” அஷ்ர.்.ப் அவசரப்படுத்தினான்.

“மெய்தான்டா பஜார் ஆக்கள் செய்தென்டா ஜாதியாஈக்கும்.. கோழிக் கஞ்சிதான்..” என்றவாறு சோப் கேஸையும் டவலையும் எடுத்துக்கொண்டு பைப்படிக்குச் சென்றான்.

இனியென்ன? நோன்பு முடியும் வரை தொடர்கதைதானே?

**********

“ஆ... வாங்க வாங்க...”

கஞ்சிமடுவச் சகபாடிகளின் வரவேற்பு.

அத்தாஸுூம் அஷ்ர.்.பும் மூன்றாவது நாளாக அங்கே வருகைதந்திருந்தனர்.

ஒரு அண்டாவிலே பிலாஸ்ரிக் கோப்பைகள் கிடந்தன.

அத்தாஸ் இரண்டு கோப்பைகள் எடுத்தான்.

“கழுகிக்கொண்டா நல்லம்”

கழுகிவைத்திருந்தபோதும் பிசுபிசுப்பு இருக்கத்தான்

செய்தது. கூலிக்கு மாரடிப்பவர்கள் அதற்குமேல் விம் போட்டா சுத்தப்படுத்தப் போகிறார்கள்.

“இதென்னடா கோப்ப கழுகியவேல”

அலுத்துக் கொண்டே அத்தாஸ் இன்னொரு தாங்கியிலிருந்த தண்ணீரால் கழுகினான். ஆனால் திருப்தி ஏற்படவில்லை.

கஞ்சூற்றும் பையன் தானே அந்த தர்பாருக்கு அரசன்போல் அடிக்கடி கத்தினான்.

“நெறச்சூத்தேல. எல்லாரும் குடிக்கோணும். மிஞ்சினாத்தாரன்...”

கோப்பையின் அரைவாசிக்குச் சற்று மேலே ஒவ்வொருவருக்கும் ஊற்றிக்கொண்டிருந்தான். அதில் முக்கால் பங்காவது ஊற்றினால்தான் எவருக்கும் மனத்திருப்தி ஏற்படும்.

அத்தாஸும் அஷ்ரஃபும் மாறிமாறி முகத்தைப் பார்த்துக் கொண்டனர்.

முன்பெல்லாம் மூன்று நான்கு ஈத்தம் சுளைகளை கடதாசியில் சுற்றி அழகாக பேஸனில் வைத்திருந்தார்கள். இன்று இரண்டிரண்டாக ஒவ்வொருவரது கையிலும் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

பள்ளிவாசலுக்கு அணித்தான குர்ஆன் மதரஸாவிலே பிலாஸ்ரிக் கதிரைகள் போடப்பட்டிருந்தன. அதில் இடம்பிடிப்பதற்கு கடுமையான போட்டி நிலவியது.

“ஹலோ எப்பிடி?”

பொலீஸ் சீருடையிலேயே வந்திருந்த கஞ்சி நண்பர் ஒருவரின் குரல்.

“வர வர மோசமாகிக்கொணுபோற” அத்தாஸால் சில விடயங்களை சகித்துக் கொள்வது கஷ்டமாகவிருந்தது.

“அந்தா அங்க பாருங்கொ” இன்னொரு வரும் அவர்களோடு இணைந்துகொண்டார்.

அவர் கண்களால் காட்டிய பக்கமாக ஓர் அறிவித்தல் தொங்கிக்கொண்டிருந்தது.

“கஞ்சி குடித்துவிட்டு கோப்பையை கழுகிவைக்கவும்.”

புதிய அறிவிப்பு. எல்லோரது கவனமும் அந்த அறிவித்தலில் நிலைகுத்தின.

பொதுவாக அங்கே டவுனிலுள்ள அரசாங்க நிறுவனங்களில் கடமையாற்றும் வெளியூர் வாசிகள் முப்பது நாற்பதுபேர் குழுமியிருந்தனர். பணிப்பாளர்கள் முதல் சிற்றூழியர்கள்வரை நோன்பாளிகள் என்றவகையில் ஒன்றுகூடியிருந்தனர்.

“எங்கடூரில எவளவு பஸந்தாச் செய்தன்” அத்தாஸ் அஷ்ர.்.பின் காதுக்குள் குசுகுசுத்தான்.

அவனும் தலையாட்டிக் கொண்டான்.

ஊரில்....

வெளிப் பள்ளிச் சாலையில் பாய்விரித்து வெள்ளை ஸுப்புரா போடப்பட்டிருக்கும்.

வரிசையாக ஆடைபடிந்த கெட்டியான கஞ்சிக் கோப்பைகள். சிறிய சிறிய தட்டுக்களில் ஈத்தம் பழங்கள். பெரிய தண்ணீர்க் கோப்பைகள். சுற்றிவர அள்ளிக் குடிக்க சிறிய கோப்பைகள். குளிர்ந்த சர்பத். கட்லிஸ், பெற்றிஸ் உள்ளடங்கிய ஆளுக்கொரு சொப்பிங் பேக்.

எல்லாவற்றையும் விட பள்ளிவாசல் ஹஸ்ரத், மோமியார், அன்றைய விருந்து வழங்கும் பிரமுகர், பள்ளித்

தலைவர் இப்படி அந்த மஜ்லிஸ் கலகலக்கும்.

“ம் எனத்தியன் யோசிக்கிய?” அஷ்ர.்.ப் தட்டிக் கேட்டான்.

“ஒன்டுமில்லப்பா” சலிப்போடு சொன்னான் அத்தாஸ்.

“அதுசரி இந்த கட மொதலாளிமார் நோம்பு தொறக்க வாரல்லியா?”

இடத்துக்கு புதிய ஒருவர் விசாரித்தார்.

“அவங்கெங்கியன் வரப்போற. மொதலாம் நொம்மர் கஞ்சி அவங்களுக்கனுப்பிய. மிஞ்சியதுதான் இப்படி எங்களுக்கு” இன்னொருவர் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் சிரித்துச் சிரித்தே சொன்னார்.

நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக வந்துசேரும் பிரகிருதிகள் வேறு.

கடைசி நேரத்தில் அவசர அவசரமாக வரும் நாலைந்து பேருக்கு ஒவ்வொரு நாளும் கஞ்சி கிடைப்பதில்லை. யாராவது அழைத்து பாதி கொடுத்தால் சரி. இதைக் கண்காணிக்க எவருமில்லை. எடுபிடிகளுக்கு அதுபற்றிய அத்தறையுமில்லை.

“கஞ்சி கிடக்குதப்பா... வந்து குடியப்பா.. இல்லாவிட்டால் திரும்பிப்போ அப்பா..” என்று யாரோ பாடுவதுபோல....

“கஞ்சி முடிஞ்சி கஞ்சி முடிஞ்சி” தனது கடமை முடிந்துவிட்ட களிப்பில் கத்தினான் அந்தப் பையன்.

“இங்க வாங்க”

இறுதி ஆளாக வந்த நோன்பாளியை பங்காளியாக்கி நன்மையைக் கொள்ளையடிக்க முனைந்துகொண்டிருந்தார் ஒருவர்.

“அல்லாஹு அக்பர்”

எல்லாக் கைகளிலும் ஈத்தம் சுளைகளை நோக்கி நகர்ந்தன.

**********

வழமைபோல் ஐந்தரைக்கு ரூமுக்கு வந்து விட்டான் அஷ்ர.்.ப். ஆனால் வழமைபோன்ற துடிப்பு இருக்கவில்லை.

"டைம் சரி... போமா?"

கலகலவென்று சிரித்தான் அத்தாஸ்.

விஷயம் பிழைத்துப்போய்விட்டதென்று அஷ்ர.்.புக்கு பட்டென்று புரிந்துவிட்டது.

"எனத்தியன்டா சிரிப்பு?"

"அந்தக் கஞ்சக் குடிக்கியத்தப் பாக்க தண்ணியக் குடிச்சிட்டு நோம்பு தொறக்கியது நல்லம்" அத்தாஸ் அர்த்த புஷ்டியோடு சொன்னான்.

அஷ்ர.்.ப் ஒன்றும் மறுத்துரைக்கவில்லை. சுயகௌரவம் யாருக்குத்தான் இல்லை.

"எங்கள பிச்சக்காரனுக்கு கணக்கெடுத்தீக்கிபோல. குடுக்கியத்த மொறயாக் குடுக்கோணும்.. இல்லாட்டி இழுத்துமூடச் செல்லி ரெஸ்டி போர்டுக்கு காயிதம் போடப்போறன்"

"நல்ல யோசின" அஷ்ர.்.பும் அதை ஆமோதிக்க வேண்டிய நிலை.

"ம்... ம்... "

இருவரும் வெளியிறங்கி நடந்துகொண்டிருந்தார்கள். தேநீர்க் கடையை நோக்கி...

"ஆ.. வாங்க ஸேர்.. இரீங்கோ இரீங்கோ"

எல்லா மேசைகளிலும் கஞ்சிக் கோப்பை, ஈத்தம் சுளைகள், சிற்றுண்டிகள் வைக்கப்பட்டிருந்தன. சிற்றுண்டிகளுக்கு மாத்திரம் காசு கொடுக்க வேண்டுமாம்.

ஃபேன்கள் சுற்றிக் கொண்டிருந்தன.

நோன்பு துறக்கும் நேர விசேட சேவை வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

அஷ்ரஃப் நிமிர்ந்து பார்த்தான். வழமையாக பள்ளிவாசலில் காணும் முகங்களில் முக்கால் வாசிக்குமேல் இங்கே...

ஒழுங்கு, மரியாதை, விருந்தோம்பல் எங்கு இல்லையோ, அது பள்ளிவாசலாக இருந்தாலும் புறந்தள்ளப்படுவது தவிர்க்க முடியாதுதான்.

❖

# சகதி

எனது பால்யகால நண்பன் அபூதாஹிர் வந்து கொண்டிருந்தான். விஷயமில்லாமல் வரமாட்டானென்று எனக்குத் தெரியும்.

கருவாடுபோல் முகம் காய்ந்துபோயிருந்தது. மழித்துவிட நேரமில்லையோ விருப்பமில்லையோ தெரியவில்லை. வெள்ளை மயிர்கள் முகமெங்கும் பரவிக் கிடந்தன. கண்களில் ஏக்கம் குடியமர்ந்திருந்தது.

ஒரு குமரைக் கரைசேர்ப்பதில் எவ்வளவு கஷ்டங்கள் உள்ளடங்கியிருக்கிறதென்பதற்கு அவன் சாட்சியானான்.

"மகளட கலியாணத்துக்குப் பொறகு இன்டக்கித்தான் ரோட்டு தெரிபட்டீக்கிபோல" முந்திக்கொண்டு நானே கேட்டேன்.

பெருமூச்சைக் கக்கியபடி சொல்லாமலேயே அமர்ந்து கொண்டான்.

"சும்மவாலும் எங்களுக்குச் செல்லாம மகளட கலியாணத்த செஞ்சேன்" பேச்சுக் குரலில் அடையாளம் கண்டு, உள்ளேயிருந்து வந்த மனைவி இப்படிக் கேட்டுச் சிரித்தாள்.

"சென்னாலும் செல்லாட்டீம் அதில ஒங்களுக்கு பங்கீக்கிதானே" நன்றிப் பொதியை மறக்காமல் சமாளித்தான் அபூதாஹிர்.

கல்யாணக் காட்கூட அடிக்காமல் எளிமையாகவும் சிக்கனமாகவும் காரியத்தை முடித்துவிட்டிருந்தான்.

அவனது உள்மன ஒலம் என் உள்ளத்தை உலுக்கியது.

"அல்லாட நாட்டம். மாப்பிள லேசாக் கெடச்ச... அதுக்கு

ஏன்ட புள்ளய வெறுங்கையோட அனுப்பேலுமா?” ஒரு தந்தைக்குரிய மனஉணர்வுகளோடு கேட்டான்.

அவனது கேள்வியில் நியாயம் தொக்கி நின்றது. நானும் இரண்டு பிள்ளைகளுக்கு கல்யாணம் செய்துவைத்து அனுபவப்பட்டவனல்லவா?

“சரி சரி இப்ப பிரச்சினயச் செல்லு”

“மிச்சம் பேர் ஒதவி செஞ்சாங்க. அப்பிடில்லாட்டி என்னால நெனச்சீம் பார்க்கேல. கடனும் பட்டன். அதும்போதாம வட்டிக்கும் கொஞ்சம் எடுத்திட்டன் மச்சான்.”

தவிர்க்க முடியாத நிலைமையில்தான் அந்த நிலைக்கு அவன் தள்ளப்பட்டிருக்கவேண்டும்.

கடைச் சிப்பந்தியாக பலகாலம் தொழில் செய்து சமாளிக்க முடியாமல், இப்பொழுது கொஞ்சம் கடைகளுக்கு சில உடுப்பு வகையறாக்களை விநியோகித்து மெல்ல மெல்ல முன்னேறிவருகிறான்.

“வட்டிக் கெடுத்த கடன் கொஞ்சமீக்கி. எப்பிடிச்சரி குடுத்திரோணும். மனம் உடுகியல்ல. ஈக்க ஈக்கப் பாவமேன்.” இலேசாகக் கண்கள் கலங்கியபடி....

எனது தலை கிறுகிறுத்தது. நான் என்ன சொல்கிறேனென்று ஆவலோடு அவன் எதிர்ப்பாத்து நின்றான்.

“நான் யோசிச்சிப் பாக்கியனே...”

“அல்லா கிருப செய்யோணும்... தாரிட்டச் சரி எடுத்துத் தாங்கோ.. நான் மாஸ்தக்கி ஆயிரம் ஆயிரம் தந்து முடிக்கியன்.”

“சரி ரெணுமுனு நாளேல நான் செல்லியனே”

அபூதாஹிர் விடைபெற்றுச் சென்றான்.

பாவம் இனியில்லை என்று சொல்லுமளவுக்கு நல்ல மனிதன். இளமைக் காலத்திலிருந்தே நல்லவிதமான போக்கு. பொது நன்மைக்காக அநேகம் செய்தவன்.

அல்லாஹ் எப்படியெல்லாம் மனிதனைச் சோதிக்கிறான் பாருங்கள்.

நான் பெரிய வசதியடைந்தவனல்ல என்று அவனுக்குத் தெரியும். அவனைவிடக் கொஞ்சம் பிரச்சினை குறைவு எனக்கு. அவ்வளவுதான்.

என்னை நம்பி இவ்வளவு பெரிய தொகையை அள்ளித்தர யார்தானிருக்கிறார்கள். ஆயிரம் இரண்டாயிமென்றால் ஒரு மாதிரி கேட்டுப் பெறலாம்தான்.

இரண்டு நாட்களாக மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டேன். எல்லோரும் போல ஏலவே உதவி செய்தவர்கள்தான். சிலரிடம் ஆலோசனை கேட்டேன். அரூஸ்தான் ஒரு ஐடியா தந்தான்.

சரி ஒரு முயற்சிதானே? விடயத்தை விரிவாக எழுதிக்கொண்டு அந்த அமைப்பாளரைத் தேடிக் கண்டுபிடித்தேன். பிரபல்யப்படுத்திக் கொள்ளாமல் இயங்கிவரும் வட்டியில்லாக் கடன்சங்க முக்கியஸ்தரைத்தான்.

“எனக்கு ஒரு முடிவும் செல்லேல. நான் மத்தவங்களோட மசூராப் பண்ணி பொறகு செல்லியனே.” அந்த வாலிபன் நிதானமாகச் சொன்னான்.

“அப்ப எப்பேக்கன் நான் வரோணும்”

“ஆ வெள்ளிக்கெழம மஃரிபுக்குப் பொறகு வாங்கொளே”

“அல்ஹம்துலில்லா” என்றவாறு விடை பெற்றேன்.

எனக்கு எப்போது வெள்ளிக்கிழமை வரும்

என்பதைத்தவிர வேறெந்த யோசனையும் ஓடவில்லை.

அபூதாஹிர் தவிர்க்க முடியாத கடனாளி. ஆனால் வட்டிக் கொடுமையிலிருந்து தவிர்த்துக்கொள்வதற்காகவே துடிதுடித்தான்.

வெள்ளிக் கிழமை வந்துசேர்ந்தது. மஃரிபு தொழுகையோடு வீடு தேடிச் சென்றேன். அவர் உள்ளே நின்றமை எனக்கு ஐம்பது வீத நம்பிக்கையை வார்த்தது.

“வாங்கொ”

அந்த வரவேற்பு இன்னும் பத்துவீத நம்பிக்கையை ஊட்டியது.

“ஓங்கட விஷயத்த கதச்சிப்பார்த்த எங்கட சங்கத்தில. அவரும் மெம்பரல்ல. நீங்களும் மெம்பரல்ல. எங்கட யாப்புப்படி மெம்பரில்லாத வங்களுக்கு கடன் குடுக்கேல... ம்.. ஒன்டும் செய்யேல” என்று கையை விரித்துவிட்டார்.

“ஓ.. மெய்யா.. அப்ப எனத்தியன் செய்த? சரி நான் வாரன்”

எனக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இந்நேரம் வீட்டில் வந்து நிற்கக் கூடும். என்னால் என்னதான் செய்யமுடியும்.

நான் நினைத்ததுபோல் வீட்டில் அபூதாஹிர் எனக்காகக் காத்திருந்தார். அந்த எதிர்பார்ப்பு சாத்தியப்படக்கூடிய நிலையிலில்லை என்பதை எடுத்துச் சொன்னேன்.

“வட்டி மட்டும் மாஸத்தக்கி ஆயிரத்துக்கு மேல கெட்டோணும். ரெண்டு மாஸம் எப்பிடிச்சரி கெட்டீட்டன். வார ஏழாந்தேதிக்கு மறுபேணம் கெட்டோணும். அதுக்குள்ள குடுத்துக்கொளத்தான் பாத்த”

“அபூதாஹிர் நீ ஒன்டுக்கும் யோசின பண்ணவாண.

இனுமொரு டிரய் பண்ணியன். அதென்டா எப்பிடீம் சரிவரும். மாஸம் மாஸம் குடுத்து முடிக்கோணும் சரியா”

நான் சொல்லி முடித்தேனோ இல்லையோ முழு நிலவாக அவன் முகம் பிரகாசித்தது.

அவனைவிட நான் கொஞ்சம் வசதி யானவன். எனவே எப்படியாவது இந்தக் கட்டத்தில் உதவியே ஆகவேண்டும். அவன் கண்டகண்டவர்களிடமெல்லாம் வாய்திறக்காத யோக்கியனாயிற்றே.

நான் மனைவியுடன் இது விடயமாக கலந்துரையாடினேன். எனது நியாயங்களை அவள் உள்வாங்கிக் கொண்டாள்.

அடுத்த நாள் காரியத்தை சாதிக்க வெளிக்கிட்டேன். யாரும் என்னைக் கவனிக்கிறார்களாவென்று சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டேன். ஏதோ பஸ்ஸெடுக்க அந்த இடத்தில் நிற்பதுபோல் கொஞ்ச நேரம் நடித்தேன்.

வீதியெங்கும் இளவெய்யில் பரவிக் கொண்டுவந்தது. டக்கென்று அந்த வங்கியினுள்ளே புகுந்தேன். வாடிக்கையாளர்கள் பெரிதாக இல்லை. உள்ள சிலரில் தெரிந்தவர்கள் எவருமில்லை.

எனக்கும் புதுஅனுபவம். நிறுத்தல், உராய்த்தலெல்லாம் அவசர அவசரமாக நிகழ்ந்து முடிந்தது.

ஆயிரம் ரூபாய்த்தாள்களாக எனது எதிர்பார்ப்பு ஈடேறியது.

அவன் எம்மீது வைத்த நம்பிக்கையை நான் காப்பாற்றி விட்டேன்.

வட்டிச் சகதியிலிருந்து அபூதாஹிரைக் காப்பாற்றி, அந்தச் சகதிக்குள் நான் விழுந்துவிட்ட விடயம் எவருக்குமே

தெரியக்கூடாது. கடைசிவரை அபூதாஹிருக்குத் தெரியக்கூடாது. அந்த எண்ணத்தோடு விறுவிறுவென நடந்தேன்.

அவனது மலர்ந்த முகம் என்கண்களுக்குள் தெரிவதுபோலிருந்தது.

❖

# ஆறு பரப்பு நிலம்

ஆதம் காக்காவுக்கு எண்பது வயது பூர்த்தியாக இன்னும் இரண்டொரு மாதங்களே இருந்தன. பத்தாண்டுகளுக்கு முன்பே அவரது மனைவி அவருக்கும் பிள்ளைகளுக்கும் விடைகொடுத்துவிட்டார்.

ஆதம் காக்கா பெரிதாக நோய் நொடியென்று மாதக் கணக்கில் கட்டிலில் விழுந்து கிடந்தவரல்ல. தோட்டம் துறவு செய்தே வாழ்ந்துவந்ததால் உடற்திட காத்திரம் கச்சிதமாக இருந்துவந்தது.

சூழ்நிலை மாற்றத்தின் விளையும் மனத் தாக்கங்களும் உழைப்பின்மையும்தான் படிப்படியாக அவரை நோயாளியாக்கியது.

"வாப்பா இந்த மருந்தக்குடீங்கொ வாப்பா..."

இளைய மகள் பஸ்மினா தலையைத் தடவி மருந்தைப் பருக்கினாள்.

சிறிது சிறிதாக தொண்டையால் மருந்து இறங்கியது. தொடர்ந்து இரண்டொரு கறண்டி நீரையும் பருக்கினாள்.

காலையில் பேசிய இரண்டொரு வார்த்தைக்குப் பின் அவர் வாய்திறக்கவேயில்லை.

இரண்டாவது மகன் செய்தியறிந்து வெலிகமையிலிருந்து வந்திருந்தான். மூன்று பிள்ளைகளை ஒரே பார்வையில் பார்க்க கிடைத்த பூரிப்பு அவரது முகத்திலே படர்ந்தது.

"ஒரு கொரேம் வெக்காம பஸ்மினாவ பாத்துக் கோங்கொ"

இதுதான் அவரது கடைசி வார்த்தைகள்.

கண்களின் தெளிவு படிப்படியாகக் குறைந்துவந்தது. நேர்சீரான பார்வை இருக்கவில்லை. மூச்சுக்காற்று பெரும் அவஸ்தையோடு ஏறிஇறங்கியது.

“வாப்பா ஏன்ட வாப்பா”

பஸ்மினா அகோரமாக ஓலமிட்டாள்.

“அழவாண அழவாண”

மூத்த சகோதரன் அவளைக் கைதாங்கிக் கொண்டான்.

இறுதிவரை வாப்பாவின் அருகிருந்தவள் அவள். கடைசி மகளின் காரியத்தை தன்கையால் நிறைவேற்றத் துடித்து முடியாமல் துவண்டுபோன வேதனையை ஆதம்காக்கா அடிக்கடி சொல்லியழுவார். என்ன செய்ய அவரது சகாப்தம் முடிந்து போய்விட்டது.

**********

சாம்பிராணி வாசம் குப்பென்ற பரவிக் கொண்டிருந்தது.

சிறிய வீடும் முற்றமும்தான்.

மையத்து சங்கத்தினர் எதிர்ப்புறமாக தகரக் கூடாரமடித்திருந்தனர். போதியளவு கதிரைகளும் போடப்பட்டிருந்தன.

ஊரவர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர்.

கபுறு வெட்டுவது போன்ற ஏற்பாடுகளை அயலவர்கள் ஓடியாடிச் செய்துகொண்டிருந்தனர்.

பஸ்மினா அழுதழுது கண்ணீரில் தோய்ந்து போய்விட்டாள். அவளது மனச்சுமையும் வேதனையும் தெரிந்தவர்களுக்குத்தான் தெரியும். மதினி ஆறுதல் கூறியவண்ணிருந்தாள்.

அவளது இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஸகராத்துச் செய்தியும் மையத்துச் செய்தியும் அடுத்தடுத்து தெரிவிக்கப்பட்டிருந்தன.

ஓடித்திரிய வாகனங்கள் இருக்கவில்லை. உடன் பிறப்புக்கள் வந்து சேர்வதைத்தவிர பஸ்மினாவுக்கு வேறு ஆறுதல் இல்லை.

இரவுச் சாப்பாட்டு ஒழுங்கையும் பெற்றோல்மெக்ஸ் வெளிச்ச ஏற்பாடுகளையும் உனக்கெனக்கென்று செய்துகொண்டிருந்தார்கள்.

ஊர் வழக்கப்படி பலபேர் இரவில் விழித்திருக்கத் தயாராக விருந்தனர்.

இரவு நகர்ந்து கொண்டிருந்தது.

**********

மறுநாள் புலர்ந்தது.

அஸர் தொழுகையின் பின் மையத்து அடக்கம் செய்வதாகத் தீர்மானம்.

“அங்க ஆட்டாவொண்டு வார”

மையத்து வீட்டுக்கு யாரோ வருவதான அனைவரதும் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. கண்டியிலிருந்து ஆதம்காக்காவின் இரண்டாவது மகள், மருமகள், பிள்ளைகள் வந்திறங்கினர். பஸ்மினாவுக்கு ஒரு பலம் கூடியதுபோலிருந்தது.

மையத்தின் முகத்தில் விழிக்கக்கிடைத்த பூரிப்பு அவர்களுக்கு.

இன்னும் இரண்டு பிள்ளைகள் வரவேண்டும். மாபோலையிலும் புத்தளத்திலும் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு தகவல் கிடைத்ததா? ஊரோடு இருந்தார்களா? என்பதெல்லாம் எவருக்கும் தெரியவில்லை. கிடைத்திருக்கும் வருவார்கள் என்ற நம்பிக்கை மாத்திரந்தான்.

“மூத்த தாத்தா நானாங்களெல்லம் வாரொன்டுமா” பஸ்மினா சகோதரியை அணைத்துக்கொண்டு கேட்டாள்.

குடும்பத்துக்கு அவள்தானே குழந்தை. அவளை எப்படித் தேற்றுவதென்று தெரியவில்லை.

“செய்தி கெடச்சா வாரொண்டும்தானே” அவள் தங்கையை சமாளிக்க முயன்றாள்.

நம்பிக்கையற்றுப்போய் பஸ்மினா அழத் தொடங்கினாள்.

அவளோடு சேர்ந்து ஜெஸ்மினாவும் அழுதாள்.

பஸ்மினாவை மடியில் வைத்துக்கொண்டு “இந்த ஊடு ஒனக்குத்தான்டீ” என்று செல்லம் காட்டும் வயதில் வாப்பா சொன்னது, இப்பொழுதும் ஜெஸ்மினாவின் கண்ணெதிரே தெரிவதுபோல...

அந்த வீடு... அந்த நிலம்... அந்த வாப்பா..’ இப்போது இல்லை.

“பாத்துப் பாத்தீக்கேல அஸரு தொழுதொடன மையத்தத் தூக்கோணும்...”

வெளியே யாரோ சொன்னது பஸ்மினாவை முள்ளாய்த் துளைத்தது.

**********

“அல்லாஹு அக்பர்....”

அஸருக்கு பாங்கொலித்தது..

“சீக்கரம் தொழுதிட்டு வாங்கோ... வந்தொடனே குளிப்பாட்டி .. கவன் செஞ்சி ... மையத்த எடுத்த...” வழமைபோல் ரெஸ்டி சின்னலெப்பை குரல் கொடுத்தார்.

“அப்பிடியேலுமன்! மையத்தட ரெண்டு புள்ளையள் வரோணும்.. இன்னம் கொஞ்சம் பாக்கோணும்” இன்னொருகுரல் இப்படி நியாயம் பேசியது.

“பாக்கோணும்தான். சீக்கரமா அடக்கின மட்டுக்கு நல்லம். ஸகராத்து டைமிலே செல்லியனுப்பி இன்னேம் வராட்டி இதூப்பொறகு வாரா” இன்னொரு குரல் ஒலித்தது.

மையத்து வீடென்று கவலைப்படுவர்கள் கவலைப் பட்டாலும் அழுபவர்கள் அழுதாலும் இப்படியொரு இறுக்கத்தன்மையும் தேவைதான்.

அப்படியும் இப்படியுமாக ஐந்துமணியும் நகர்ந்துவிட்டது. வந்தவர்கள் நீண்டநேரமாக காத்திருந்தனர். அஸருக்குப் பின்பு என்றது ம.்.ரிபுக்கு முன்பு என்றாகிவிட்டது.

“சரி சரி இனி குளிப்பாட்டுங்கோ குளிப்பாட்டுங்கோ”

லெப்பை சொல்லிவிட்டார். அதற்கு மேல் தாமதிக்க முடியுமா என்ன?

குளிப்பாட்டி, கபன் செய்தார்கள்.

சந்தூக்கு உள்ளே கொண்டுசெல்லப்பட்டது.

துஆவுக்கு எல்லோரும் கையேந்தினர்.

“ஏன்ட வாப்போவ்.. என்ன உட்டிட்டுப் போறா”

பஸ்மினாவின் ஒப்பாரி மெல்ல மெல்ல மங்கிக் கொண்டு வந்தது.

இறுதிப் பயணம் இடை நடுவே போய்க் கொண்டிருந்தது.

பெண்கள் வேலிக்கு மேலால் கடைசிப் பார்வை பார்த்து நின்றனர்.

பின்வரிசையிலே இரண்டு கிழவர்கள் நடந்துகொண்டிருந்தனர்.

"ஆதம் காக்கா புள்ளயளோட மிச்சம் எரக்கமான மனிசன்.. ஒத்தரும் செய்யாத ஒருவேலய அவரு செஞ்ச.." விஷயம் தெரிந்த குஞ்சலிக் காக்கா கதையை ஆரம்பித்தார்.

"அதெனத்தியன் செல்லுங்கொளே" நெய்னமரிக்கார் குடைந்துவிட்டார்.

"அவருக்கு ஆறு புள்ளயள். எல்லாப் புள்ளயளும் ஒத்துமயா வாழோணுமென்டு அவருக்கு ஆச.. நல்லோரு காணி வாங்கி ஆறு பேருக்கும் பிரிச்சிக் குடுத்திட்டாரு. கடசிப் புள்ளக்கெண்டு ஒரு துண்டில ஊடுகட்டி அதிலதான் வாழ்ந்துவந்தாரு..."

"மத்தப் புள்ளயள்"

"கலியாணம் புடிச்ச ரெண்டு புள்ளயள் தனித்தனிய ஊடுகட்டத் தொடங்கீட்டாங்க.. அதுக்குள்ளதான்.."

"செல்லுங்க காக்கா செல்லுங்கோ.."

"பிரச்சினவந்து ஊரவிட்டு எல்லாரும் ஓடிவந்திட்டாங்க.. நானுந்தான்.."

"மெய்யா"

"எல்லாப் புள்ளயளும் ஒன்டா இருக்கோணுமென்டு நெனச்சாரு.. ம்... தேங்கக் கொல புழுந்தமாதிரி ஒவ்வொரு திக்கில பெய்த்தாங்க.. கடசீல மையத்துக்காலும் ஒன்டு சேரேலாப் பெய்த்து."

"ம்.. இந்த மண்ணுக்குத்தானே எல்லாரும் சண்ட

புடிக்கிய... கடசீல ஆறடி மண்தான் மிச்சம்..” நெய்ன மரிக்கார் கதையைப் பூரணப் படுத்தினார்.

மையவாடி நெருங்கிக் கொண்டிருந்தது.

❖

# அந்தப் பழம் இனிக்கும்

“ரிஸல்ட் வந்தீக்காம்”

பாடசாலையிலிருந்து கிளர்ந்த ஆரவார அலை ஊர் எல்லையின் மரம்மட்டைகளிலும் முட்டிமோதியது.

எல்லோருமே எதிர்பார்த்ததுபோல் அபுலஸன் முதற்தரத்திலும் ராலியா, புவாது, அனிஸ் ஆகியோர் இரண்டாம் நிலையிலும் சித்திபெற்றிருந்தனர். சாதாரண தரத்தில் இன்னும் பலர் தேறியிருந்தனர். மொத்தத்தில் ஒரு நல்ல அறுவடைதான்.

“ரெனு மூனு வருஷம் பட்டகஷ்டத்துக்கு இப்பதான் எனக்கு நிம்மதி” அஸீஸ் மாஸ்டர் பலபேர் முன்னிலையில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

“அபுலஸன் இப்படி நல்லாப் பாஸானனென்டா அது அந்த மனிசன்ட கெட்டித்தனந்தான். பம்பாய் முட்டாய் வித்துக்கொண்டு திரிஞ்ச பொடியனயேன் கூட்டிக்கொணு பெய்த்துப் படிச்சிக்குடுத்த”

உண்மை தெரிந்தவர்கள் அதனை வாய்விட்டு உறுதிப்படுத்தினர்.

“கஷ்டமான புள்ளயள் படிச்சி முன்னுக்கு வந்தாத்தான் நாளேப்பின்னுக்கு ஊரு விஷயங்கள பாத்துச் செய்வானியள்.”

ஐம்பதைத் தாண்டினாலும் அஸீஸ் மாஸ்டர் இளமைத் துடிப்புடனேயே கதைப்பார். சமூகத்தின் போக்கை அவர் என்றுமே அங்கீகரித்ததில்லை. இளைய தரப்பினர்மீது மிகுந்த நம்பிக்கை வைத்தே அவர் செயற்பட்டுவந்தார்.

“ஆ.. அஸீஸ் ஸேர்.. புள்ளயள் நல்ல ரிஸல்ட் எடுத்தீக்கி.. இப்ப ஒங்களுக்குத்தான் பொன்னாட

போத்தோணும்."

ருஸ்தா டீச்சர் ஐஸ் மலையையே தூக்கி அவர் தலையில் வைத்தார்.

"அதொன்டும் வாண.. நாலு புள்ளயள் முன்னுக்கு வந்தா அது போதும்.."

வழமையான பாணியில் பதில் சொல்லிக்கொண்டு அவர் நகர்ந்தார். சித்திபெற்ற எல்லா மாணவர்களையும் ஒன்றாகத் சந்திக்கும் சந்தர்ப்பத்தையே அவர் பார்த்துக் கொண்டிருந்தார்.

✸ ✸ ✸ ✸ ✸ ✸ ✸

"இது.. ஷிப்லிஹாஜியார் வந்து சந்திக்கட்டாமென்டு செல்லியனுப்பீந்த"

"ஆ.. என்னயா?"

மனிசி சொன்னதை முஸ்தாபு நானாவால் நம்ப முடியவில்லை. பெரிதாக அவரோடு ஒரு பழக்கமுமில்லையே!

"எதுக்கும் பெய்த்துப் பாத்திட்டு வாரன்"

எப்படித்தான் அப்படியொரு வேகம் வந்ததோ தெரியவில்லை. வந்து சேர்ந்துவிட்டார்.

"ஹாஜியார்"

"ஆ வாங்கொ வாங்கொ"

முற்றத்து மாமரத்தடியில் பேத்தியை விளையாடவிட்டு பார்த்து இரசித்துக் கொண்டிருந்தார்.

"இரீங்கொ"

படிக்கட்டில் குந்திக்கொண்டார் முஸ்தாபு நானா. ஹாஜி என்ன சொல்லப் போகிறார் என்பதே அவரின் ஒரே எதிர்பார்ப்பு.

“எப்படிச்சரி மகனப் படிப்பிச்சிக் கொண்ட”

இப்பொழுதுதான் அவருக்கு மீற்றர் பிடிபட்டது.

“பொம்பாய் முட்டாய் வித்து திரிஞ்சவன அந்த அஸீஸ் மாஸ்டரேன் புடிச்சி ஸ்கூலுக்கு கூட்டிக் கொணுபோன. அந்த மனிசனுக்கு அல்லாட்ட கெடச்சிப் பொகோணும்”

ஹாஜியாருக்கு பிடிக்காத பேர்வழிகளில் ஒருவர்தான் அஸீஸ் மாஸ்டர். எந்த இடத்திலும் பச்சையாகப் பேசிவிடுவார். அவருடைய பேச்சுக்கள் பல சந்தர்ப்பங்களில் ஹாஜியாரை வந்து குத்திக் குதறியதுண்டு.

“சரி சரி இப்ப பொடியன படிக்குடுங்கொ. எத்தினயோ பேருவந்து ஒங்கட கஷ்டத்த எனக்கட்ட சென்னாங்க.”

உதவி செய்யும் தயார் நிலையில் பதில்மொழியை எதிர்பார்த்து நின்றார்.

“அதுதான் ஹாஜியார் பொடியனுக்கும் இப்ப ஆசவந்திட்டு போல. அல்லாதான் ஒங்கட மனசீல இந்த எண்ணத்தப் போட்டீக்கி.”

“சரி சரி எங்கசரி நல்லோரு ஸ்கூலுக்கு அனுப்புங்கோ.. நான் ரெண்டு வருஷத்துக்கு செலவத்தாரன்” புன்னகை பூத்தபடி சொன்னார்.

ஏழு வானத்தையும் ஏழு பூமியையும் வென்றுவிட்ட பூரிப்பு அவருக்கு. மனைவியின் காதில் ஊதும்வரை அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

‘அந்தாளப் பத்தி எத்தினஜாதி சென்னன். அதக் கேட்டுக்கேட்டு எனக்கும் அவரக் காணச் செல்லே கோவம்.. இப்பதான் வெளங்கிய.. ம்... தாரு எனத்த சென்னாலும் ஹாஜியார் நல்ல மனிசன்தான்.’

* * * * * * *

மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு மாலை வேளை.

"முஸ்தாபு நானா முஸ்தாபு நானா"

அஸீஸ் மாஸ்டருக்கு வீடுகாட்ட அழைத்து வந்த அனீஸ் சத்தமிட்டான்.

மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது மாஸ்டருக்கு.. மேடு பள்ளமான ஒற்றையடிப் பாதையில் ஏறிவந்த களைப்பு.

ஒரு காலத்தில் அரசாங்கத்தால் பகிர்ந்தளித்த காணிதானாம் இது. அப்பகுதியில் அமைந்திருந்த சின்னச்சின்ன வீடுகள் பூரண வசதிகொண்டதாக இருக்கவில்லை.

"தாரயன் மகன் தேடிய?"

வெறும் மேலுடன் கையில் வெட்டுக்கத்தியுமாக வந்தார் முஸ்தாபு நானா. ஏதோ வேலை செய்துகொண்டிருந்தவர் போலும்.

"அபுலஸனுக்கு படிச்சிக் குடுக்கிய ஸேர் வந்தீக்கி"

"ஆ.. மாஸ்டரா எனக்குத் திட்டமில்லேன்.. இரீங்கொ இரீங்கோ.." என்றவாறு ஸாராத்தைச் சரிசெய்து கொண்டு கத்தியை ஒரு பக்கமாக வைத்தார்.

இருப்பதற்கு ஒரு கதிரை இருக்குமா என்ற சந்தேகம் மாஸ்டருக்கு.

"இந்தப் பொக்கத்தில நல்ல மரம்மட்டீக்கி"

"ஓ மாஸ்டர்... எல்லம் நாங்க நாட்டினது... இந்த மரம்மட்டேம் இல்லாட்டி காலம் போறது மிச்சம் கஷ்டம்.."

"அதுசரி எங்கியன் அபுலஸன். ஸ்கூல் தொடங்கி ஒரு மாஸமாகிய ஆளக் காணல்ல"

“செல்லியது கேக்கியல்ல மாஸ்டர். எனக்கட்ட செலவழிக்க சல்லீமில்ல.. ம்.. இப்ப அவன் பொம்பாய்முட்டாய் யாவாரம். ஒரு நாளக்கி நூறு நூத்தம்பதுருவ சம்பரிக்கிய” பெரிய மகிழ்ச்சியோடு சொன்னார் முஸ்தாபு நானா.

“இப்பெங்கியன் அவன்?”

“அவன் வாரத்துக்கு ஆறுமணியாகிய”

“இங்க வா அனீஸ். நீ இங்கயே நில்லு. அபுலஸன் வந்தொடன எங்கடுட்டுக்கு கூட்டிக் கொணுவரோணும்.. இங்க நீங்களும் வாங்கொ. கெட்டித்தனமுள்ள பொடியன்.. ஒம்பது, பத்து, பதினொன்டு.. இன்னம் மூனு வருஷத்தில சோதின. உம்ம வாப்ப கஷ்டப்படாம புள்ளயள முன்னேத்தேல...”

“ஓ மாஸ்டர் நீங்க சென்னா கேப்பான்”

அன்று மாலையில் மகனோடு மாஸ்டரின் வீட்டைப் போயடைந்தார்.

அவர் நாலைந்து பிள்ளைகளுக்கு கணக்கு சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார். அது பாடத்தில் குறைவானவர்களுக்கான பரிகாரக் கற்பித்தல்.

“அபுலஸன் ஒனக்கீக்கிய புத்திக்கி நல்லோரு நெலமக்கி வரேலும்.. சும்ம ஒன்ட வாழ்க்கய நாசமாக்கிக்கொளாதே”

“நான் ஸ்கூலுக்கு வாரன் ஸேர்”

முஸ்தாபு நானாவுக்கு மனம் குளிர்ந்துவிட்டது.

இப்படித்தான் இடைநின்ற அபுலஸனின் படிப்பு மீண்டும் துளிர்விட்டது. இனி வீழ்த்த முடியாத அளவுக்கு சடைத்து வேருன்றியது.

* * * * * * *

“எங்கியன் அபுலஸனக் காணல்ல” அஸீஸ் ஸேர் கேட்டார்.

“ரிஸல்ட் வரங்காட்டீம் கடேல நிக்கிய. இன்னேம் வரல்ல” சகபாடி அனீஸ் சொன்னான்.

“மெய்யா.. வந்தொடனே ஓடிவருவான்..” அவரின் எதிர்பார்ப்பு.

சித்தியடைந்த மாணவர்கள் அஸீஸ் மாஸ்டரை சந்திப்பதும் உயர்படிப்பு தொடர்பாக அபிப்பிராயம் கேட்பவர்களாகவுமிருந்தனர்.

ஊரில் கலைப்பிரிவில் படிக்க மாத்திரமே வளமிருந்தது. சில மாணவர்களுக்கு வெளியில் போய்ப் படிப்பதே கௌரவமாகத் தெரிந்தது.

“அபுலஸன் இன்டக்கி வந்தீப்பான். போமா பாக்க?”

நாலைந்து பேரும் அங்கிருந்து புறப்பட்டனர். புதிய மனவெழிச்சி அவர்களை மிதக்க வைத்தது.

* * * * * * *

பெறுபேற்றைக் கேள்விப் பட்டதுமே துடியாய்த் துடித்தவன், மூன்று நாட்களுக்குப் பின்பே கடையிலிருந்து வெளிப்பட்டான்.

வந்ததும் வராததுமாக உம்மாவும் வாப்பாவும் சொன்ன புதியசெய்தி அவனுக்கொரு தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்திவிட்டது.

அவனது சின்ன வயதுப் புத்திக்கே ஹாஜியாரின் நடவடிக்கைகள் ஜீரணிக்கத்தக்கதாக இருக்கவில்லை. இந்த நேசக் கரத்தின் பின்புலம் அவனை சிந்திக்கவைத்தது.

“யோசிச்சிச் செல்லுங்கொ மகன்” வாப்பா நேரம் கொடுத்து நகர்ந்தார்.

ஒரு பக்கம் ஷிப்லி ஹாஜியாரின் நேசக்கரம். மறுபக்கம் அஸீஸ் மாஸ்டரின் இலட்சிய நெஞ்சம். இடைநடுவில் அவன்.

வெளிப்பாடசாலையொன்றுக்குப் போய் விடுதியிலே தங்கிநின்று டபள்மெட்ஸ் படிப்பதாக இருந்தால், செலவுக்கெதுவழியென்று மண்டையை உடைத்துக்கொண்டு வீட்டு வாசற்படியில் கால்வைத்தவனுக்கு அந்தச் செய்தி பால் வார்த்தது போலிருந்தது.

“மகேன் பெய்த்து மாஸ்டரப் பாத்திட்டு வாங்கொ. சரில்லேன்” இது உம்மாவின் குரல்.

அபுலஸன் தீவிரமாக யோசித்தான். அஸர்.. மஃரிபு.. இஷாவென்று நேரம் நகர்ந்தும் கூட வீட்டைவிட்டு அசையவே இல்லை.

“எனத்தியன் மகன் யோசின பண்ணிய?” வத்தபடியே வாப்பா கேட்டார்.

“ஒன்டுமில்ல..”

“அந்த மனிசன் தரச்செல்லே எனத்துக்கன் வாணான்டிய.. ம்.. எங்களுக்கு ஒதவிசெய்ய தாரனீக்கிய”

முஸ்தாபு நானா சிறகு கட்டிக் கொண்டு பறப்பதற்கான உத்தரவு வரும்வரை காத்திருந்தார், ஹாஜியார் வீட்டுக்கு.

* * * * * * *

அபுலஸன் வந்துள்ள செய்தி அடுத்த நாள் தான் அவனது நண்பர்களுக்கு தெரியவந்தது.

அவனுக்கு வாழ்த்துக் தெரிவிக்கவும் பரஸ்பரம் மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்ளவும் எல்லோரும் ஒன்றாய்ப்போய் ஸேரைச் சந்திக்கவும் அவனது வீட்டுக்கு எல்லோரும் புறப்பட்டுவிட்டார்கள்.

ஒரே குதூகலமாக இருந்தது.

முஸ்தாபு நானா இளநீர் வெட்டி எல்லோருக்கும் பரிமாறினார்.

"ஸேர்ட ஊட்டுக்கு போமா மசான்"

அனீஸ்தான் கேட்டான்.

"போம் போம்.." எல்லோரும் ஒரே குரலில் சொன்னார்கள்.

"எனக்கேலடா"

அபுலஸன் வெடுக்கென்று சொன்னான். யாருமே எதிர்பார்க்கவில்லை. மின்சாரம் தாக்கியதுபோல் உறைந்து போய்விட்டனர்.

"எனம்பன் அப்படிச் செல்லிய? ஸேர் பாத்துக்கோ நிக்கிய" புவாத் குறுக்கிட்டான்.

"அவரு எடுக்கிய சம்பளத்துக்கு படிச்சித்தந்த..."

"அது ஸ்கூல்ல... ஊட்டில...?"

"பேரெடுக்கியத்துக்கு"

"மோட்டுப் பேச்சி பேசாதேடா.. ஓஎல் பாஸானொடனே இப்படிப் பேசினா..."

"இங்க பாரு நானும் சோதின முடியங்காட்டீந்தான் நின்ட. அவரட ஜாதி எனக்குச் சரிவாரல்ல. சல்லிக்காரனியள் காட்டேல.. பொறாம புடிச்ச வரு... அவரு மட்டுந்தான் நல்ல மனிசன்.."

"எழும்பு எழும்பு இவடத்தில நிக்கியதே பாவம்.."

எல்லோரும் ஒரேயடியாக வெளியிறங்கி திரும்பிப் பார்க்காமல் நடந்தனர்.

“கண்டா பெருமய?”

“ஸோர்ட குத்தம். அவன பம்பாய் முட்டாய் யாவாரம் பண்ண உட்டிக்கோணும்”

பலரதும் அபிப்பிராயங்கள் அலை மோதின. அவனது மாற்றத்தின் உள்ளீடு என்ன என்பதுபற்றி அவர்கள் பெரிதாக யோசிக்கவில்லை. கால்கள் அஸீஸ் மாஸ்டரின் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தன.

‘பாவம் ஸோர்’

❖

# சுயம்

பத்தாண்டுகளுக்கு முன்பு குடும்ப சகிதம் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார் மன்சூர் மரிக்கார். அதிலே அவரது இளையமகள் புஷ்ரா கம்பீரமாகவும் கவர்ச்சியாகவும் தோற்றமளித்தாள்.

கடைக்குட்டி அவள். அவளுக்கு இரண்டு சகோதரர்கள். இரண்டு சகோதரிகள். ஏனையவர்களை விட நீண்ட இடைவெளியோடு பிறந்ததால் எல்லோருமே அவள்மீது அலாதியான அன்புகொண்டிருந்தனர்.

ஆண்-பெண் வேறுபாட்டின்றி உரிய வயதை அடைந்ததும் திருமணம் செய்துவைப்பதில் அவரது மனைவி மிகுந்த அக்கறையோடு செயற்பட்டாள். அடிப்படை வசதிகளை முடிந்தளவு செய்துகொடுத்தார்கள். தனித்தனி வீடுகளிலே சகலரும் வாழ்ந்துவருகிறார்கள்.

ஊர் வழக்கப்படி கடைசிப் பிள்ளைக்கே பெற்றார் வாழ்ந்த வீட்டைக் கொடுப்பார்கள். இதெல்லாம் புஷ்ராவுக்கு தெரியாத விடயங்களல்ல.

அவருடைய உறவினர்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் “புஷ்ரா” என்று கேட்டுக்கொண்டே வருவார்கள். எல்லோருடைய உள்ளத்திலும் அவள் எப்படி நாற்காலி போட்டுக் கொண்டாளென்பது அவர்களுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

புஷ்ராவுடைய சகோதரிகளும் படிக்கப்போனார்கள்தான். ஆனால் ‘பெரியமனிசி’ ஆனவுடன் அது தொடராத கதையாகிவிட்டது. வழக்கப் பிரகாரம் அனுப்பினார்களே தவிர, படித்து எதையும் அடையவேண்டுமென்ற எதிர்பார்ப்பு

இருக்கவில்லை.

புஷ்ராவும் ஒரு நாள் சாமத்தியப்பட்டுவிட்டாள்.

"ஒத்தருக்கும் செல்லவாண"

கூச்சப்படவில்லை. வெட்கப்படவில்லை. ஓரேயடியாக உம்மாவுக்குச் சொல்லிவிட்டாள்.

இந்தக் காலத்தில் இதெல்லாம் பொருத்தமில்லையென்பது உண்மைதான். இருந்தாலும் இனசனத்துக்குச் சொல்லும் சந்தோஷத்தைக்கூட அவளது உத்தரவு தடுத்துவிட்டது.

ஒரே வாரத்தில் புத்தகம் பையோடு பாடசாலைக்குப் புறப்பட்டுவிட்டாள் புஷ்ரா. யாரும் தடுத்து ஒன்றும் ஆகப்போவதில்லையே. அவளது போக்கு அப்படித்தான்.

ஒருவிதமான பிடிவாதமும் சுய எதிர்காலம்பற்றி யோசிக்கும் குணமும் அவளிடம் குடிகொண்டிருப்பதை பல தடவை மன்சூர் மரிக்கார் மனைவிக்கு எடுத்துச் சொல்லியிருந்தார்.

புஷ்ரா ஏஎல் படித்துக் கொண்டிருந்தாள். பல செயற்பாடுகளிலும் முன்னிலை வகித்தாள். மொத்தத்தில் தனக்கென்றொரு உலகத்தை உருவாக்கிக் கொண்டிருந்தாள்.

வீட்டில் "வாப்பா வாப்பா" என்று ஐந்து வயதுப் பிள்ளையின் உணர்வோடு சுற்றிக்கொண்டிருப்பாள்.

நேரம் அறிந்து சந்தர்ப்பம் பார்த்துக் காரியமாற்றுவதில் புஷ்ரா வல்லமை கொண்டவள். வாப்பாவுக்கு எந்த நேரத்தில் கோப்பி கொடுக்க வேண்டும். இஞ்சி போட்டு எப்போது கொடுக்கவேண்டு மென்பதெல்லாம் அவள் அறிவாள்.

நீண்ட காலமாக மன்சூர் மரிக்காருக்கு சீனிவியாதி. சிலவேளை அவருடைய நபுஸ" நோயாளியென்பதை மறக்கடித்துவிடும். அப்போதெல்லாம் அதை ஞாபக மூட்டி.. சிலவேளை கண்டித்து.. தேவைக்கேற்ப உணவு வழங்கும் தாதியாகவும் செயற்படுவாள்.

வாப்பாவின் ஆரோக்கியம் தொடர்பாக வழங்கும் ஆலோசனைகளைக் கேட்டு அவளது உம்மா ஆச்சரியமடைந்துபோன சந்தர்ப்பங்கள் ஒன்றிரண்டல்ல.

எதுகூடும் எது கூடாதென்று ஒரு உணவுப் பட்டியலையே தயாரித்துவைத்திருந்தாள். அதை தனது நண்பர்களிடம் சொல்லிச் சொல்லி மன்சூர் மரைக்கார் பெருமைப்படுவார்.

அவள் ஏஎல் பரீட்சையில் சித்தியடைந்ததோடு ஒருவித பயம் விசுவரூபமாய்வந்து மரிக்காரின் முன்நின்றது. மனைவியும் செய்வதறியாது திகைத்துப் போனாள்.

அவளுக்கு ரியுசன் வகுப்பெடுத்த பையனோடு அவளுக்கு ஏதோ தொடர்பாம் என்ற செய்திதான். இது ஒன்றும் நடக்கக் கூடாத காரியம் அல்ல.

அவர்கள் தேடிப் பார்த்தனர். பையன் படித்து திணைக்களமொன்றில் வேலை பார்ப்பவன். பார்ப்பதற்கும் இலட்சணமானவன். மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். முறைதவறி நடந்து கொள்வதாகக்கூட எவரும் சொல்லவில்லை.

புஷ்ரா தனது மௌனப் போராட்டத்தைத் தொடர்ந்தாள். வீட்டிலே கதைத்து சண்டை பிடித்திருந்தால்கூட அவர்களுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்திருக்கும். அல்லது ஆழ்ந்த மௌனமே அவர்களைப் பெரிதாக உலுக்கிக் கொண்டிருந்தது.

இவ்விடயத்தை அறிந்த மூத்த சகோதரி வருகைதந்து

புஷ்ராவுக்கு சொன்ன புத்திமதி அன்று பெரும் புயலைக் கிளப்பிவிட்டது. அவள் எழுப்பிய கேள்விகளுக்கு நியாயமான பதில்சொல்லாமல் வெறும் சொல்லாடல் நிகழ்த்தி உரிய அடைவை எய்தமுடியாமல் போய்விட்டது. மன்சூர் மரிக்கார் நரைத்த தாடியைத் தடவியபடி அங்கும் இங்குமாக நடந்தாரேதவிர வார்த்தைகள் எதுவும் வெளிவரவில்லை.

எத்தனையோ வளங்கள் தயார் நிலையிருக்கும்பொழுது, எனது அன்புச் செல்வம் காலமெல்லாம் ஒரு சம்பளக்காரனோடு வாழ்வதா? என்ற கேள்விதான் அவர் மனதில் எழுந்து நின்றது.

மற்றப் பிள்ளைகளெல்லாம் தனித்தனி வியாபாரக் குடும்பங்களாகத் திகழும்போது இவள் மாத்திரம் இப்படி அல்லற்படுவதை எப்படி அவரால் தாங்க முடியும்.

மன்சூர் மரிக்காரின் பால்ய நண்பன்தான் ஸுலைமான் ஹாஜி. இன்றைய நேற்றைய நட்பல்ல. ஐம்பது வருடம் பழமைவாய்ந்தது. அவர்கள் பள்ளிக்கூடம் போனதும் போகாமல் விட்டதும் ஒரே காலத்தில்தான்.

வாப்பாவின் வியாபாரத்தை பழக இருவரும் டவுனுக்குப் போனபோது, இரு கடைகளும் அருகருகேதான் அமைந்திருந்தன.

மன்சூர் மரிக்காருக்கு நான்கு சகோதரர்கள். அவர்களின் தகப்பன் எதிர்பாராத வேளையில் மாரடைப்பால் மௌத்தாகிப்போனார். சொத்துப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. அதனால் மிகவும் பாதிக்கப்பட்ட மரிக்காருக்கு கைகொடுத்துத் துணை நின்றவர் ஸுலைமான் ஹாஜிதான்.

அதுமாத்திரமல்ல மரிக்காருக்கு பெண் பார்த்து, மாப்பிள்ளைத் தோழனாகச் சென்று, சகல காரியங்களையும் செய்ததும் அவர்தான்.

இப்படி வாழ்க்கைப் பாதையில் ஒருவருக்கொருவர் துணைநின்று இன்றுவரை நட்பைப் பேணிவருபவர்கள் அவர்கள்.

ஹாஜிக்கு மூன்று ஆண்பிள்ளைகள். அவர்களில் இனிமேல்தான் திருமணமாகவேண்டிய ஒருவர்.

மரிக்காருக்கு திருமணமாக வேண்டிய நிலையில் புஷ்ரா இருக்கிறாள்.

நண்பர்கள் இருவருக்குமிடையே எழுத்தில் போடாததொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் இருந்து வந்தது. அதன் மூலம் நட்புறவை குடும்ப உறவாக ஸ்திரப்படுத்திக் கொள்ள இருசாராரும் உறுதிபூண்டிருந்தனர்.

அது நொறுங்கிச் சிதைந்து போய்விட்டது.

இப்பொழுதெல்லாம் ஸுலைமான் ஹாஜியின் முகத்தை அவரால் நேர்நின்று பார்க்க முடியவில்லை. எத்தனையோ வியாபாரத் தேவைகளிருந்தும் தொடர்புகொள்ள முடியவில்லை. வெட்கப்பட்டு இடிந்து போய்விட்டாள்.

"எப்படிச்சரி இத நிபட்டப்பாருங்கொ ஒங்கட குடும்பத்தில இதுக்குமுந்தி இப்படியொன்டு நடந்தில்ல"

இனசனத்தவர்கள், முஹப்பத்தானவர்கள், நண்பர்கள் என்று அடிக்கடிவந்து இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

மன்சூர் மரிக்கார் ஊமைப் பொம்மையாய்ச் சமைந்திருந்தார்.

"அடிக்கவா.. ஒட்க்கவா.." என்றுகேட்டு இன்னும் சிலர் வந்துநின்றார்கள்.

இப்படியான வம்புத் தனங்களில் அவர் என்றுமே ஈடுபட்டது கிடையாது. பொறுமை காக்கும்படி அவர் தன் ஆண்பிள்ளைகளுக்கு அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார்.

இப்பொழுதெல்லாம் மன்சூர் மரிக்கார் சனங்களுக்கு முகம் கொடுப்பதை தவிர்த்துவந்தார். கந்தூரி, கல்யாணம் களுக்குக்கூட போவதில்லை. வெள்ளிக் கிழமைகளில் மாத்திரமே பள்ளிவாசலுக்குப் போய்வந்தார். பள்ளிச்சங்கக் கூட்டத்திற்குக் கூட தொடர்ந்து போகாததால் நிர்வாக அங்கத்துவத்தை இழந்துவிட்டார்.

ஆறவிட்டு தீர்வுகாணும் முயற்சி படுதோல்வியில் முடிந்தது.

நள்ளிரவல்ல, விடிகாலையல்ல.. முற்பகல் பத்துமணிக்கெல்லாம் புஷ்ரா போய்விட்டாள்.

ஊர்வாய் திறந்துவிட்டது.

மன்சூர் மரிக்காரும் அவர் மனைவியும் ஆளுக்கொரு மூலையில் குந்தி அழுதுகொண்டிருந்தார்கள்.

மகன்மார், மருமக்களெல்லாம் ஓடியாடித் திரிந்துவிட்டு ஒன்றும் ஆகாத நிலையில் தலைகவிழ்ந்து நின்றனர்.

வீட்டுவேலைகளுக்கு உதவி செய்யவரும் மைமூனாச்சியின் மகள்வீட்டுக்கு புஷ்ரா போயிருக்கிறாள். அங்கே மாப்பிள்ளைக்காரனின் சகோதரிவர மூவருமாக ஒரு வாகனத்திலே புறப்பட்டிருக்கின்றனர்.

மாப்பிள்ளையும் சகபாடிகளும் இன்னொரு வாகனத்தில் சென்றுள்ளனர்.

காஸிநீதிபதியைச் சந்தித்து பெற்றார் விருப்பமில்லாதபடியால் சொந்த விருப்பத்தின்படி திருமணம் செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறாள். இதன்படி லெப்பை மூலம் நிகாஹும், திருமணப் பதிவும் செய்யப்பட்டுள்ளது.

சகல தகவல்களும் எவ்வித தடையுமின்றி வந்துசேர்ந்தவண்ணிருந்தன.

“எனத்தியன் இன்னேம் பாத்துக்கோ நிக்கிய பொலிஸ செட் பண்ணீட்டு... பொடியன்ட காலக் கைய ஒடச்சி மகளத்தூக்கி கொணுவரவா?”

சில உறவினரின் பின்னணியில் சண்டியர் குழுவொன்று உத்தரவு வேண்டி நின்றனர்.

இப்படியொரு சந்தர்ப்பத்திற்கு முகம் கொடுக்கவேண்டிவருமென்று மன்சூர் மரிக்கார் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

“பாஞ்சி பெய்த்து... கெழமக் கணக்கில ரெஸ்ட் ஹவுஸிலேம் அங்கேம் இங்கேம் ஹரபாகீட்டு வரல்ல.. ஏன்ட புள்ள பாஞ்சிபோனாலும் மொறப் படிதான் பெய்த்தீக்கி.. இதில் ஒத்தரும் தலபோட வரவாண”

மன்சூர் மரிக்கார்தான் பேசுகிறாரா?

தலையைத் தொங்கப் போட்டபடி ஒவ்வொருவராக நழுவிக்கொண்டிருந்தனர்.

❖

# தராதரம்

“ஹைதர் மௌலவி வந்தீந்த கண்டா?”

“இல்ல.. நான் இப்பதான் வார”

“அவருக்கு கலியாணமாம்.. கலியாணத்துக்கு செல்லத்தான் வந்தீக்கி.”

“மெய்யா.. அப்ப ஊட்டுக்கு காட்குடுத்தீக்கும்..”

“ஓ.. இனி ஒங்களுக்கு செல்லாமீக்கியா”

அந்த வார்த்தைகளில் ஆழ்ந்த அர்த்தம் பொதிந்திருந்தது.

அஸ்வர் நானாவிடம் விடைபெற்றுக் கொண்டு நான் வீட்டுக்கு நடந்தேன்.

* * * * * * *

“இது எனக்கு தாருசரி கலியாணத்துக்கு சென்னா?”

“இன்டக்கி ஒத்தரும் செல்லல்ல. நானில்லாத டைமில சென்னோ தெரிய...”

“மகனுக்கிட்ட கேளுங்கொ பாக்க”

“புள்ள வாப்பக்கு தாருசரி கலியாணத்துக்கு சென்னா?” என்று கேட்டபடி மனைவி உள்ளே சென்றாள்.

நான் ஒருமுறை மேசையை நுணுக்கமாக நோட்டமிட்டேன்.

“இல்லயாம். செலவங்க ஜனேலுக்குள்ளாலேம் காட் போட்டிட்டுப் போற” என்றவாறு குனிந்து குனிந்து எல்லாப் பக்கமும் பார்த்தாள்.

இல்லையென்பது உறுதியாகிவிட்டது.

“தாருக்கன் கலியாணம்?”

“எத்தின பேருக்கு கலியாணம் நடக்கியன்! நான் சும்ம கேட்ட.”

ஒருவாறு விடயத்தை மறைத்துச் சமாளித்துவிட்டேன். சொல்லிவிட்டால் அவளது கிண்டல் வேறு தொடர்ந்து கொண்டிருக்கும்.

‘மௌலவி எனக்கு செல்லாமீக்கமாட்டாரே!’ மனசு விடவில்லை.

* * * * * * *

சுமார் இரண்டு வருடத்துக்கு முன்பு... எங்களது பள்ளிவாசலுக்கு ஓதிமுடித்த கையோடு அவர் வந்து சேர்ந்தார்... துடிதுடிப்பாக அவரது செயற்பாடுகள் அமைந்தன. சற்று வித்தியாசமான போக்கு இளவட்டங்களை ஈர்த்ததில் வியப்பில்லை.

அவரது பயான்களில் எனக்கும் போகப் போக ஈடுபாடு ஏற்பட்டது. அதனால் சற்று நெருக்கமாகிவிட்டேன்.

ஆறு மாதங்கள்தான் நகர்ந்திருக்கும்.

அன்று நிர்வாக சபையும் நிர்வாகத்திற்கு உதவும் குழுவினரும் ஒன்றுகூடியிருந்தனர். புதிய ஏற்பாட்டின்படி மாதாந்தம் இப்படிக் கூடிக்கதைப்பது வழக்கம்.

“மௌலவீட போக்கு மோசம் போலீக்கி. அவரப் பத்தி எத்தினயோ ரிபோட் வந்தீக்கி.” தலைவர் விஷயத்துக்கு வந்தார்.

“வார மௌலவிமார எப்படிச் சரி நிபட்டிக்கொளப் பாருங்கொ. ஒரொரு ஜாதியச் செல்லி அனுப்பாம.

செல்லுங்கொ பாக்க இந்தப் பள்ளீல ஆறு மாஸ்தக்கி மிச்சம் நின்டொத்தர..." கோபத்தோடு கொதித்தார் சமூர்த்தி ஸாகிர்.

"நான் ஒத்தரேம் அனுப்பல்ல. மனிசரு தார மொறப்பாட்ட செல்லிய. மறுக அவங்க வந்து என்னத் தின்னியொன்டும்" தலைவர் சொல்வதிலும் நியாயமிருக்தான் செய்தது.

"சரி சரி செல்லுங்கொ"

"காஸிம் ஹாஜி காயிதமனுப்பீக்கி"

"எனத்தியாம்?"

"பளிக்கொடத்தில் அவரட புள்ளேட தலக்கடிச்சாம்"

"புள்ளயள் போடிய கூத்துக்கு அடிக்காம ஓதிக்குடுக்கேலுமா.. ம்.. அவரட புள்ளய ஊட்டில வெச்சிக்கொளச் செல்லுங்கொ.." பேங்க் நியாஸ் வெட்டொன்றாகப் பொரிந்து தள்ளினார்.

"ம்.. வேற வேற.."

"இஸ்மாயில் நானட மொறப்பாடு.. அவரட ஊட்டுக்கு மொளலிதுக்கு கூப்பிட்டும் பொகல்லியாம்."

"இப்பிடிக் கூப்பிடிய கூப்பிடியத்துக்கெல்லம் பொகத்தேவில்ல. அவருக்கு புரியமென்டா டைமீந்தாப் பொகேலும். அஞ்சி நேரம் தொழுவிக்கியத்துக்கும் பளிக்கொடம் நடத்தியத்துக்கும்தான் சம்பளம் குடுக்கிய" ஸாதிக் மாஸ்டர் விடவில்லை.

"வேற வேற..."

"கூட்டாளிமாரோட பெய்த்து டெக் பாக்கியாம். இது ஊருபேரில்லாத காயிதம்"

"நிபட்டுங்கொ நிபட்டுங்கோ.. நாங்க மூஸாநபி

காலத்தில நின்டுக்கொண்டு பேசிச்சரிவாரல்ல. ஒவ்வொத்தரும் செல்லிய செல்லிய ஜாதியெல்லம் செய்ய நாங்க வெச்ச அடியமல்ல மௌலவி. இப்பிடிப்போனா ஒத்தராலும் இங்கவந்து நிக்கமாட்டாங்க." மீண்டும் ஸாகிர்.

கலந்தாலோசனை படிப்படியாக சூடேறி மிக உச்சக்கட்டத்துக்கே போய்விட்டது. படித்தவர்களென்று ஒரு உதவிக் குழுவைச் சேர்க்கப்போய் ஹாஜியாருக்கு பெரிய கஷ்டமாய்ப்போய் விட்டதென்னவோ உண்மைதான்.

"இங்க பாருங்கொ நாங்க எனத்தச் சென்னாலும் நீங்க கேக்கப்போறல்ல. ரெஸ்டி போட் நெனக்கியதுதான் நடக்கிய. கடசீல நாங்களும் சோந்து செஞ்சென்டுதான் ஊரு மனிசரு செல்லியொன்டும். நான் ஒத்தரோடேம் கோவமுமில்ல இதுக்குப் பொறகு ஒங்கட கூட்டத்துக்கு வாரேமில்ல."

இப்படிச் சொல்லிவிட்டு உறுதியான முடிவோடு அங்கிருந்து வெளியேறினேன்.

அவர்கள் இறுதியாக எடுத்த தீர்மானம் மௌவிக்கு சாதகமாக அயைவில்லையென்பது அன்றே ஊருக்குத் தெரிந்துவிட்டது.

அடுத்த நாள் 'எனது சொந்த விருப்பத்தின் பேரில் விலகிக்கொள்கிறேன்.' என்று கடிதம் கொடுத்துவிட்டு ஹைதர் மௌலவி முந்திக் கொண்டு வெளியேறிவிட்டார்.

* * * * * * *

மௌலவி விலகிச் சென்ற மூன்றாம் நாள் நான் வீட்டினுள்ளே அமர்ந்திருந்தேன். மனைவி முற்றம் பெருக்கிக்கொண்டிருந்தாள். முன் ஒழுங்கைக் குள்ளால் பேரனைக் கையில் பிடித்தபடி ரைஹான் தாத்தா வருவது தெரிந்தது.

“பாருங்கொ பாக்க.. புதிசா வந்த மௌலவி ஜாதியா ஓதிக்குடுத்த.. இவனுக்கு ஜாதிபோல எழுத்துத் திட்டமாகிக் கொணுவந்த. இந்த நாசமாப் போனவனியள் அந்த மனிசன வெலக்கீட்டாமேன்”

“மெய்யா.. இவரோடேம் நல்ல கூட்டாளித்தனம். கேட்டுப் பாக்கோணும். நல்ல மனிசனெண்டு எத்தினயோ பேரு சென்னதான்.”

“நிக்குடுகியல்ல. இவனியளுக்கு பந்தம் புடிக்கியவனியளுக்குத்தான் காலம். பெரிய மனிசரட புள்ளயளுக்கு ஊட்டுக்குவந்து ஓதிக் குடுக்கச் சென்னாம்... எல்லாரட புள்ளேம் புள்ளதான். தேவயென்டா பளிக்கொடத்துக்கு அனுப்பச் சென்னாம்.. ம்... அப்படிச் சென்னதுதானாம் குத்தம்..”

“பாருங்கோ பாக்க.. ம்... இவனியள எனத்த செஞ்சாப் போதுமன்”

மீண்டும் முற்றம் பெருக்கம் சத்தம் கேட்டது.

* * * * * * *

“சா.. செவ்வாக்கெழம ராவு ஜாதி நாடகமொன்டேன் நீங்க எழுதீந்த.”

“ஆ கேட்டா?”

“ஹைதர் மௌலவீட செய்தியேன் எழுதீந்த”

“ஓ.. ஓ.. செரியான மனசி வருத்தம். பெரியவங்க செய்த அநியாயம்.. பொறுக்கேலாத மட்டில ரேடியோவுக்கு எழுதிப்போட்ட”

“எத்தினயோ பேரு டேப் பண்ணிக் கொண்டு போட்டுப் போட்டுக் கேக்கிய ஸோ்”

“மெய்யா”

பள்ளிவாசல் பக்கமே போகாத பதுறுதீனையும் நாடகம் தொட்டிருக்கிறது.

* * * * * * *

என்னைக் கண்டதும் சைக்கிளில் வந்த சகீட் குதித்து இறங்கினான். ஹெண்டலில் தினமலர் வார வெளியீடு சொருகப்பட்டிருந்தது.

“ஓங்கட கத வந்தீக்கி”

“ஓ நானும் இன்னேம் வாசிக்கல்ல”

“மௌவீட கதய அப்பிடியே எழுதீக்கி”

“இப்படியெல்லம் நடக்கியென்டு நாலுமனிகருக்கு தெரியட்டும்”

“வாசிக்கச் செல்லே மேல் பூரிக்கிய ஸோ்”

“மெய்யா அப்ப நல்லாத்தான் எழுதிப் பட்டீக்கிபோல. ம்.. எப்பிடிச் சரி எங்கடேம் மனிசீலீக்கிய ஆத்திரம் தீரோணேன்”

விடைசொல்லிக் கொண்டு சகீட் சைக்களில் ஏறினான்.

* * * * * * *

“தெரீமா செய்தி?”

“எனத்தியன் செல்லுங்கொ”

“முந்தி இங்க நின்ட ஹைதர் மௌலவி...”

“ஓ... ஓ.. இப்ப மூனு வருஷம்மட்டாகிய”

“அவருக்கு கலியாணமாம்...”

“அ.. அதுதான் நேத்து ஒங்களுக்கிட்டக் கேட்ட”

“வெள்ளண மூனு வேனுக்குப் பெய்த்தாம். பள்ளீ ரெஸ்டிமாரு ஹாஜிமாரியள்தான்.. ஒங்கடேம் கூட்டாளியேன். பாருங்கொ பாக்க சும்மவாலும் செல்லல்லேன்.”

“ஒவ்வொரு மனிசரட ஹாலாத்து இப்பிடித்தான். நாங்க ஞாயத்த பேசின எழுதின. செலபேரு இன்டவரக்கும் மொகத்தத் திருப்பிக் கொண்டுபோற... ஆனா அவருக்கு தொரோகம் செஞ்சவங்கதான் அவருக்குப் பெரிசி.”

“பொலன்னறுவக்கும் அங்கலயாம்.. ஒரு நாட்டூராம்.. இவங்க பெய்த்து வேனியல்ல எறங்கினா அவருக்கும் மதிப்பேன்...”

“ம்.. ஒங்களுக்கும் விஷயங்க வெளங்கியெனா”

இரண்டுபேரும் ஒன்றாகச் சிரித்தோம். இந்த உலகத்தையும் அதன் போக்கையும் பார்த்து.. நினைத்து..

❖

# இனிய குடும்பம்

அந்தப் பாடசாலை ஒரு முகாமாகச் செயற்பட்டது. பாதிக்கப்பட்ட மக்கள் அங்கு ஒன்று கூடியிருந்தனர். வசதிகள் குறைவாகவே காணப்பட்டன. அதிகமாக பெண்களும் சிறுவர்களுமே தங்கியிருந்தனர்.

அன்வர்கான் அடிக்கடி அங்கு வருவதும் போவதும் உதவிசெய்வதுமாக இருந்தார். அப்படி வந்தபோதுதான் அநாதரவான ஒரு பிள்ளையை எடுத்து வளர்த்தால் என்ன என்ற சிந்தனை அவருக்கு ஏற்பட்டது.

அவருக்கு மூன்று ஆண்குழந்தைகள். ஒரு பெண்குழந்தைக்கான தேவை இருந்து வந்தது. மூன்றாவது குழந்தையோடு இனிமேல் குழந்தை கிடைக்காதென்ற துர்பாக்கிய நிலை. இருவருக்குமே பெருந்துக்கமாகவும் மனக்குறையாகவும் அது நீடித்தது.

"இங்க பாருங்கொ. நாங்க ஒரு பொம்புளப்புள்ள எடுத்து வளத்தா நல்லந்தானே." அன்வர்கான் அன்று கேட்டார்.

"நானும் ஒங்களுக்கிட்ட செல்லோணுமென்டு நெனச்ச" அஸ்மிதா தனது விருப்பத்தை வெளிப்படுத்திவிட்டாள்.

"அல்லா இப்பிடியொரு வழியக் காட்டீக்கி. நாளக்கே பெய்த்துப் பார்ப்போம்."

அன்வர்கான் பெரிய வசதிகாரனல்ல. ஒரு நடுத்தர வியாபாரி. முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்ற கருத்தோட்டம் கொண்டவர்.

அடுத்தநாள் இருவரும் முகாமுக்குச் சென்றடைந்தனர். எல்லோரையும் இழந்து தனித்துப் போன பிள்ளைகள் பக்கம் அவர்களது கவனம் சென்றது.

நிரோஷா அவர்களது கவனத்தை ஈர்த்தாள்.

அரசவிதிமுறைகளுக்கமைய ·பொருத்தமான ஒழுங்கு நடவடிக்கைகளில் அன்வர்கானின் நாட்டம் சென்றது.

✸ ✸ ✸ ✸ ✸ ✸ ✸

நிரோஷா எல்லோருடனும் சொல்லி விடைபெற்றுக்கொண்டு காரிலே வந்து ஏறினாள். அங்கே அவளுக்காக மூன்று தம்பிமார் காத்திருந்தனர். தங்களுக்கொரு தாத்தா கிடைத்துவிட்ட பூரிப்பு அவர்களுக்கு.

அவளுக்கு ஒன்பது வயதுக்குமேல் போகாது. துருதுருப்பான கண்களிலே சோகம் கவிந்திருந்தது. அவளை அணைத்துக்கொண்ட அஸ்மிதாவுக்கு தாய்மை பூரணத்துவமடைந்துவிட்டதான உணர்வு.

கார் புறப்பட்டது.

முற்றாக அழிந்துபோன குடாவெல்ல கிராமத்தில் தப்பிப் பிழைத்தவர்களில் அவளும் ஒருத்தி. உற்றார் உறவினர்களென்று எவரும் வந்து அவளை அடையாளம் காணவில்லை.

கார் ஒரு பிடவைக்கடை அருகே நின்றது.

"நிரோஷாக்கு உடுப்பு வாங்கோம்." அவர் மனைவியைப் பார்த்துச் சொன்னார்.

அவளது உடலில் வைத்து அழகு பார்த்துப் பார்த்தே உடுப்புக்களைத் தெரிவுசெய்தனர். ஒரு பைநிறை உடுப்புக்கள் எடுத்தாயிற்று. நிரோஷாவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

எல்லோரும் முன்கடையில் குளிர் பானம் அருந்தினர்.

மீண்டும் பயணம் ஆரம்பித்தது.

* * * * * * *

நிரோஷாவுக்கு எந்தக் குறைபாடும் தென்படவில்லை. உணவு, உடை, பொழுதுபோக்கு இப்படி எல்லாமே அவளுக்கு அதிதிருப்தி.

"தாத்தா தாத்தா" என்று மூன்று தம்பிமாரும் அவளைச் சுற்றிச்சுற்றி வந்தனர்.

நிரோஷா உள்ளூர் சிங்களப் பாடசாலையில் சேர்க்கப்பட்டாள். ஒவ்வொரு நாளும் இன்னும் சில பிள்ளைகளோடு முச்சக்கர வண்டியில் அவள் பாடசாலைக்குச் சென்றாள்.

"நிரோஷா நாங்கதான் ஒங்களுக்கு உம்ம வாப்ப.. வெக்கப்படாம தேவயானத்த கேக்கோணும்" இப்படி அன்வர்கான் அடிக்கடி சொல்வார்.

"சரி வாப்பா" தம்பிமாரைப்போலவே அவளும் உறவு சொல்லப் பழகிவிட்டாள்.

நிரோஷா அவளது பெற்றோருக்கு ஒரே பிள்ளை. உடன் பிறப்புக்களென்று எவருமே இல்லையே என்று அவள் கவலைப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம்.

ஒரு சின்னஞ்சிறு ஓலைக்குடிசையில்தான் வாழ்ந்துவந்தார்கள். கடற்தொழில்தான் ஜீவனோபாயம். அதில் அவளது பங்களிப்பும் இருந்தது.

இப்பொழுது புதுவீடு. புதுப் பெற்றோர்.

"ஆ பஸந்தான குட்டியொண்டு. அஸ்மிதாட மகளா?"

இப்படி வீட்டுக்கு வருவோரெல்லாம் கேட்பார்கள். அவளைப் பார்ப்பதற்காகவே ஒவ்வொருநாளும் யார்யாராவது வந்துகொண்டிருப்பார்கள். இதனால் சுனாமி தந்த கவலையை

அவள் படிப்படியாக மறந்தாள்.

"நிரோஷா சோறு தின்ன வாங்கோ"

இப்படி அன்வர்கான் அழைக்கும்போது அவள் மனம் கசிந்துபோவாள். தம்பிமாரோடு சாப்பிடுவதா வாப்பாவோடு சாப்பிடுவதா என்று தர்மசங்கடமான நிலை அவளுக்கு.

சிலவேளை எல்லோரும் வட்டமாக அமர்ந்து ஒரே பேஸனில் சாப்பிடும்போது அவளுக்குப் புது அனுபவமாகவும் வெட்கமாகவும் இருக்கும்.

"நிரோஷா கலியாணூட்டுக்குப் போம்"

இப்படி ஒரு நாள் உம்மா கூப்பிட்ட போது அவளுக்கு ஆசையாசையாக வந்தது.

பளபளக்கும் சட்டையோடும் மினுங்கும் மாலை காப்புகளோடும் அவள் உம்மாவின் கையைப் பிடித்தபடி சென்றாள்.

கல்யாண வீட்டில் பெரிய பெரிய மனிதர்களெல்லாம் கூர்ந்து கூர்ந்து பார்க்கும்போது அவள் புது உலகிலேயே மிதந்தாள்.

* * * * * * *

"நிரோஷா ஒங்களப் பாக்க தாரோ வந்தீக்கி. ஓடி வாங்கோ."

அன்வர்கானின் அழைப்புக்குரல் கேட்டு முன்னே ஓடிவந்தவளுக்கு எதுவுமே புரியவில்லை.

முன்வாசலில் ஆணும் பெண்ணுமாக இருவர் அமர்ந்திருந்தனர்.

அவர்களால் நிரோஷாவையோ நிரோஷாவால் அவர்களையோ இனம்கண்டுகொள்ள முடியவில்லை.

முகாமுக்குச் சென்று கிராம சேவகர் மூலமாக முகவரியைப் பெற்றுக் கொண்டு வந்ததாக அவர்கள் கூறினார்கள்.

வந்திருந்தவர்களோடு அன்வர்கான் நீண்டநேரமாகச் சுமுகமாகக் கதைத்துக்கொண்டிருந்தார்.

அஸ்மிதா தேநீர் பரிமாறினாள்.

வந்துள்ளவர்கள் தன்னை அழைத்துக்கொண்டு போய் விடுவார்களோவென்று நிரோஷா பயந்து போனாள்.

“நிரோஷா”

அன்வர்கான் மீண்டும் அழைத்த போது அவள்சென்று அருகணைந்து நின்றாள்.

“இது தாரெண்டு தெரீமா புள்ள” என்றபடி ஒரு புகைப்படத்தை நீட்டினார்.

அதைப் பார்த்ததுமே அவளது கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் உதிர்ந்தது. விக்கி விக்கி அழுவதற்கு ஆரம்பித்து விட்டாள்.

அஸ்மிதா தலையைத் தடவி அணைத்துக்கொண்டாள்.

அது அவளது தந்தையென்பதும், இவர்கள் உறவினர்கள் என்பதும் உறுதியாகி விட்டது. இருந்தும் வதிவிடம் காரணமாகத் தொடர்பின்மை அவர்களைத் தூரமாக்கியிருந்தது.

“நிரோஷா புரியமென்டா நீங்க கூட்டிக்கொணுபோங்கொ. அத எங்களுக்குத் தடுக்கேல.” இப்படி இங்கிதமாகச் சொன்னார் அன்வர்கான்.

“நிரோஷா ஒங்கட வாப்ப ஏன்ட சொந்த நானா. எங்களோட பொக வாரா” அந்தப் பெண்மணி கைதொட்டு இரக்கமாகக் கேட்டாள்.

“நான் வரமாட்டன்” என்றபடி இன்னும் ஒருபடி உம்மாவை அணைத்து நின்றாள்.

இரண்டுபேரும் எவ்வளவோ சொல்லியும் அவள் இசையில்லை.

அவர்கள் தங்களுக்குள் மெல்லக் கதைத்துக்கொண்டார்கள். எந்தக் குறைபாட்டையும் அவர்களால் கண்டுகொள்ள முடியவில்லை. இங்கேயே இருப்பது நல்லதென்பதே அவர்களது கருத்துமாயிற்று.

“எங்களுக்கு மிச்சம் சந்தோஷம். இவளவு நல்ல குடும்பத்திலீந்து அவளப் பிரிக்கியது பாவம். எங்கீந்தாலும் புள்ள சந்தோஷமாக ஈந்தாச் சரி” என்றவாறு இருவரும் நிரோஷாவை முத்தமிட்டனர்.

“நீங்க வேண்டிய டைமுக்கு வாங்க. நிரோஷா ஒங்கடேம் புள்ள... எங்கடேம் புள்ள.. அவ விரும்பிய நேரத்துக்கு நீங்க கூட்டிக்கொணுபோங்க.”

அன்வர்கானின் நடவடிக்கைகளும் வார்த்தைகளும் அவர்களுக்கு முழுமையான நம்பிக்கையை ஊட்டியது. அந்த மகிழ்ச்சியோடு அவர்கள் விடைபெற்றார்கள்.

இந்த இனிய குடும்பத்திலிருந்து நிரோஷாவை இனி எந்த சுனாமியாலும் பிரிக்க முடியாதுதான்.

❖

# தெளிவு

ம.ஃ.ரிபு தொழுகைக்கான பாங்கோசை காற்றோடு கலந்தது. ஏற்கனவே ஒழு செய்துகொண்டு தயாராகியிருந்தாள் நஸ்ரினா.

தொழுது முடிந்தவள் பெற்றோருக்காகவும் கணவனுக்காகவும் துஆசெய்து முகத்திலே கைகளைத் தடவிக்கொண்டாள்.

முக்காட்டைக் கலைக்காமல் முன்வாசலில் வந்தமர்ந்தவள் யாஸீன் ஓதினாள். அந்த நேரத்தில் அவளுக்கு வேறெந்த வேலையும் இருக்கவில்லை. கணவன் வரும்வரையில் எதிர்பார்த்தபடி அப்படியே அமர்ந்திருந்தாள்.

இன்னும் இருபது வயதுகூடப் பூர்த்தியாகாத இளமை அவளுக்கு.

பார்த்த பார்வைக்கு பளிச்சென்ற தோற்றம். மெல்லிய உடல்வாகு.

கல்யாணச் செய்தி காதில் விழுந்தபோது அவள் துடித்துத்தான்போனாள். கல்யாணச் சந்தையில் விலைபோக இயலாத பிரச்சினை எதுவும் அவளுக்கிருக்கவில்லை. மீண்டும் ஒருமுறை அவளது கனவுகள், கற்பனைகளெல்லாம் நொறுங்கிச் சிதைந்தன.

அப்பொழுது அவள் பத்தாம் தரத்தில் படித்துக்கொண்டிருந்தாள். மிகவும் குதூகலமான கால கட்டம். பாடசாலைக்குப் போவதென்றால் அவளுக்கு அலாதியான மகிழ்ச்சி.

"நஸ்ரினா நீங்க படிச்சது போதும். ஒங்கள மத்ரஸாவுக்கு அனுப்பப்போற. எங்கட குடும்பத் திலீந்தும் ஒத்தருசரி ஓதினா

நல்லந்தானே”

வாப்பா சொன்னதை அங்கீகரித்தவாறு உம்மாவும் புன்னகை பூத்து நின்றார்.

வாப்பா தீர்மானித்து விட்டால் அதற்கு மேல் அவளால் ஒன்றும் செய்ய முடியாதுதானே. இதுவும் ஒரு படிப்புத்தானேயென்று சற்று ஆறுதலடைந்தாள்.

கறுப்பு ஃபர்தாவோடு அவள் ஒவ்வொருநாளும் மத்ரஸாவுக்குப் போய்வந்தாள். அங்கே புதுத் தோழிகள் என்றாலும் அவர்களும் இடைநடுவில் பாடசாலைவிட்டு வந்தவர்கள்தான். பாடசாலையில் காட்டிய அதே திறமையை அவள் இங்கும் காட்டத் தவறவில்லை.

மூன்று வருடம் ஓதியாகிவிட்டாள். இன்னும் இரண்டே வருடங்களில் பாடநெறி பூர்த்திடைந்துவிடும். பரீட்சையும் நடைபெறும். அதன்பின் ஒரு மௌலவியாவாக வெளியேறுவதை நினைத்தபோது அவள் பூரித்துப் போனாள். ஏதோ ஒருவகையில் மக்கள் மத்தியில் கொஞ்சம் சேவை செய்யும் எண்ணம் அவளுக்குள் உறுதிபெற்றது. அந்தவேளையில்தான்...

“நஸ்ரினா மூனுவருஷம் ஓதினது போதும்தானே. சும்ம காலம் போறேன்”

வாப்பாவின் குரல் உம்மா மூலம் ஒலித்தது.

“படிக்குடல்ல ஓதச்சென்ன. இப்ப ஓதேம் உடாம எனத்தியன் செய்யச் செல்லிய” ஒருவித வெறுப்பும் கோபமுமாகத்தான் அவள் பதில்சொன்னாள்.

“வாப்ப சென்னா அதுக்குமிஞ்சி எங்களுக்கு பொகேலவேன்.”

உம்மாவின் பேச்சு அவளுக்குப் பிடிக்கவேயில்லை.

ஓடிப்போய்த் தனதறைக்குள் புகுந்து கொண்டாள். மனம் சோகத்தால் கவிந்து நிறைந்தது. மீண்டும் உம்மாவந்து நியாயம் படுத்துவாள் என்றே எதிர்பார்த்தாள்.

கொஞ்சம் ஓய்வு கொடுத்துவிட்டு உம்மாவும் வாப்பாவும் ஒன்றாகவந்து கட்டிலில் அமர்ந்து கொண்டனர். அவள் தலையைக் கவிழ்த்தபடி நின்றாள்.

“நாங்க அவசரப்படல்ல. நல்லோரு விஷயம் வந்தீக்கி. லேசா வரச்செல்லே செஞ்சிக்கொண்டா நல்லமேன்” வாப்பா நியாயப்படுத்தினார்.

“இந்தக் காலத்தில் கொமரொன்டக்குடுக்கியென்டா லேசான வேலயா? லெச்சக் கணக்கில ஓணும். ஓதப்போனத்தால கண்டா அல்லா லேசாக்கின” உம்மாவும் அதற்கு ஒத்தடம் கொடுத்தாள்.

இனி எதைப்பேசியும் பயனில்லையென்பது அவளுக்குத் தெரியும்.

படிப்படியாகத் தனது மனோநிலையை சீர்படுத்திக்கொள்ளத் தலைப்பட்டால் நஸ்ரினா.

“ஒழுக்கமான பஸந்தான குட்டியென்டா சும்மெடுக்கிய”

இந்தத் தகவலை வெளியிட்டிருந்தார் மர்ஸுக்ஹாஜி. இதனைக் கருத்திற்கொண்ட புரோக்கர் பிஸ்தாமியின் தேடலில் சிக்கியவள்தான் நஸ்ரினா.

ஒரேயொரு மாத அவகாசத்தில் தடல்புடலாக திருமணம் நடந்தேறியது. இன்னும் ஒரு வருடம் கூடப் பூர்த்தியாகவில்லை.

படிக்கும் காலத்திலேயே மர்ஸுக் ஹாஜியார் கருத்தில் நஸ்ரினா பதிந்ததும், இத்தகவலை வாப்பாவுக்கு அறிவித்ததும், முற்பாதுகாப்புக்காகவே படிப்பை நிறுத்தி

ஓதவிட்டதும் பின்னர் அவர் சொல்லிச் சிரித்த விடயங்கள்.

வெளியே கார் வருவது தெரிந்தது.

கணவன் வந்துவிட்டார். வழமை போல் அவளுக்கான நொறுக்குத்தீன் கைமாறியது. அவர் வொஷ் எடுப்பதற்கிடையில் சுடச்சுடக் கோப்பி போட்டுக்கொண்டுவந்தாள்.

இந்த ஓராண்டு காலத்தில் அவரது அன்பில் நஸ்ரினா கரைந்து போனாள். அவளது ஒவ்வொரு விடயத்திலும் அவர் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டார்.

அடுத்தமுறை ஹஜ்ஜுக்கு அழைத்துச் செல்வதாக வாக்களித்திருந்தார். இவ்வளவு பெரும் பாக்கியம் தனக்குக் கிட்டுவதையிட்டு அவள் பெருமைப்பட்டுக் கொண்டார்.

எவருக்கும் உதவிசெய்யும் இரக்க சுபாவம் அவரிடம் குடிகொண்டிருந்தது. பொதுவிடயங்களுக்கெல்லாம் பங்களிப்புச் செய்வார். அவளது சிபார்சில் பயன்பெற்றவர்கள் பலர்.

“ம்.... இன்டக்கி மிச்சம் சொணங்கின”

“யாவார விஷயமாப்போன சொணங்கீட்டு”

“யாவாரம் யாவாரமென்டு செல்லிய. எனத்தியன் யாவாரமென்டு மட்டும் செல்லியல்ல” தேவையோடும் செல்லக்கோபத்தோடும் கடிந்தாள்.

“எனக்கெனத்துக்கன் யாவாரம்? நான் ஒரேயொரு புள்ள. வாப்பட சொத்தெல்லம் எனக்குத்தான்.. ம்... அதப்பாக்கவே நேரமில்ல” என்று கலகலவென்று சிரித்தான்.

“வாப்பட சொத்து சொத்தென்டு செல்லிய.. இன்னேம் ஒன்டேம் கண்ணால காணல்ல” மீண்டும் அவள்.

“இப்பதான் நெனவு வந்த. கோலொன்டு எடுக்கோணும்”

மணிக்கூட்டைப் பார்த்தபடி எழுந்தோடினார்.

பேச ஆரம்பித்தால் இப்படி டிரக்மாறிப்போய்விடும்.

நஸ்ரினாவின் மனதிலே மெல்லியபயம் குடியேறியிருந்தது. வாப்பாவிடம்கூட பலதடவை லேசாகக் கேட்டுவிட்டாள்.

அடிக்கடி வியாபார விடயமென்று வந்துபோகும் முகங்கள் அவளுக்கு ஆரோக்கியமாகத் தெரியவில்லை.

ஒவ்வொரு விடயத்தையும் நஸ்ரினா உன்னிப்பாகத் அவதானித்து வருவது இன்னும் அவரது கவனத்தை ஈர்க்கவில்லை.

'சல்லி'தான் அவரது ஒரே இலக்குபோலிருந்தது. ஒருவேளை அது உண்மையாக இருக்குமாயின் அதைத்தாங்கும் சக்தி அவளுக்கு இல்லவேயில்லை.

உழைப்பு எவ்வளவு தூய்மையானதாக இருக்கவேண்டுமென்பது அவள் ஓதித் தெளிந்த விடயம்.

"ஒங்கட யாவாரத்தப் பத்தி கொஞ்சம் செல்லுங்கொளே. எனக்கு செரியான ஆசப்பாடு"

சாப்பிட அமர்ந்தபோது இன்று எப்படியும் துப்புத்துலக்கிக்கொள்ள அவள் பிரயத்தனப்பட்டாள்.

"ஒரொரு சோத்துமணீம் ஹலாலா ஈக்கோணும்.. அல்லாட கேள்வீக்கி"

"இங்க ஒங்களுக்கு தின்னத்தாரன் உடுக்கத்தாரன்.. எல்லாத் தேவயளேம் ஒழுங்கா நெறவேத்தியன். ஒரு மாப்பிள செய்யவோண்டிய தெல்லாம் செய்தன். இதுக்குமிச்சம் எனத்தியன் பேச்சி"

கடுங்கோபத்தோடு சாப்பிட்டபாதி சாப்பிடாத பாதியாக

எழுந்து சென்றார்.

இதற்குமுன்பு இப்படிக் கோபம் வந்ததில்லை. வருமென்றும் நஸ்ரினா எதிர்பார்க்கவில்லை. குட்டை குழம்பித்தானே தெளியவேண்டும்.

"ஒங்களுக்கு கரச்சலென்டா நான் யாவாரம் செய்யாம நிக்கியன். எனக்கு சோத்துக்கு பஞ்சமில்ல. பொம்பிளயென்டா பொம்புளமாதிரி நில்லுங்கொ. எனக்குத் தேவயென்டா இன்னம் ஒம்பது பொம்புளேம் எடுக்கேலும்."

திரும்பி நின்று இன்னும் ஒரு பாய்ச்சல் பாய்ந்தான்.

அவள் வாய்மூடி நின்றாள். 'பொம்புள' கதையை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கண்கள் கசிந்தன.

அன்றைய இரவு அவளுக்கு வித்தியாசமான அனுபவமாகவே இருந்தது. எவ்வளவோ கெஞ்சியும் அவன் படுக்கைக்கு வரவில்லை. லைற்றை அணைக்காமல் அவள் தனிமையில் தவித்தாள்.

வாழ்க்கைப் பட்டுவிட்டாள் இனி சமாளித்துத்தான் போகவேண்டுமென்ற சாதாரண நடைமுறைக்கு அவள் இரையாக வேண்டுமென்ற கட்டம்.

இரவு நான்கு மணிகூட அவளுக்குத் தெரியும். இறுதிக் கட்டத்தில் களைத்துப்போய் அவளையறியாமலேயே நித்திரையாகிவிட்டாள்.

அவர் வந்து தட்டியெழுப்பிய போது அவள் தடுமாறிப் போனாள். இருந்தும் கோபம் தணிந்து விட்ட மகிழ்ச்சி வேறு.

கோப்பி போட்டுக் கொடுத்தாள்.

"வாங்க போம்"

எங்கேயென்று அவளுக்கு விளங்கவில்லை. வியாபாரத்தைக் காட்டி பிரச்சினையை தீர்க்கத் துணிந்துவிட்டாரோ என்ற எண்ணம்.

காரில் ஏறி அமர்ந்துகொண்டாள்.

பயணம் தொடர்ந்தது. அதிகதூரம் போகவில்லை. வாப்பா வீட்டின்முன் கார்நின்றது.

"ஊட்டில நில்லுங்கொ. அந்திக்கிவந்து கூட்டிக்கொணுபோறன்"

அவள் இறங்கினாள்.

வாப்பாவின் முன் அவளைக் குற்றவாளிக் கூண்டிலேற்றும் முயற்சியே இது என்பது அவளுக்குத் தெளிவாகிவிட்டது. சிக்கல் மேலும் தொடருமென்பது உறுதி.

எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத வரவு அவர்களைக் திக்குமுக்காடச் செய்தது.

"எனத்தியன் மகள்" இது வாப்பா.

"ஆ.. மொகமெல்லம் கருக்குளிச்சிப் பெய்த்து." உம்மாவின் வியப்பு.

"எல்லாரும் சேர்ந்து என்ன அநியாயத்தில போட்ட"

அவள் வாய்விட்டு அழுதுதீர்த்தாள்.

இருவரும் குழம்பிப் போனார்கள்.

"சல்லி சல்லியென்டு என்னக் கொணுபெய்த்துப் படுகுழீல போட்ட.. எனக்குப் படிக்குடேமில்ல ஓதுடேமில்ல.. ஒங்களுக்கிட்ட நான் மாப்பிள கேட்டா"

பிரச்சினை புரியாவிட்டாலும் கூட அவளது கேள்விக்கு அவர்களிடம் பதிலிருக்கவில்லை.

“எனத்தியன் மகள் நடந்த?”

உம்மா தலையைத் தடவினாள். வாப்பா கண்களைப் புரட்டிக்கொண்டு நின்றார்.

“அந்த ஹராமான சோத்தத்தின்ன நான் இனிப் போறல்ல.”

வாப்பாவுக்கு ஏதோ புரிவதுபோலிருந்தது. அவர் இருப்புக்கொள்ளாமல் தடுமாறினார்.

“செல்லுங்கொ மகள் எனத்தியன் நடந்த?”

“எனத்தச் செல்லவன்.. அந்தக் குடுயாவாரியோட எனக்குக் குடும்பம் நடத்தேல. அவளவுதான்.”

நஸ்ரினா ஒரே முடிவாகச் சொல்லி விட்டு எழுந்து கிணற்றடிக்குச் சென்றாள்.

“வாணா வாணான்டு சென்னத்தக் கேட்டா.. அந்தாளட ஜாதிய எத்தினபேரு வந்துவந்து சென்னன். புத்தியோசினுள்ளபுள்ள யோசிக்கியதானே”

இன்னொரு சண்டைக்கான அத்திவாரம் போடப்பட்டுக் கொண்டிருந்தது.

❖

# மாமரம்

ஸபுராச்சிக்கு எழுபது வயது கடந்துவிட்டது. நரை திரையெல்லாம் போதுமான அளவுக்கு அதனைப் பிரதிபலித்தன. தைரியம் மாத்திரம் எல்லாம் விஞ்சிக்கொண்டு முன்னின்றது.

தூக்கக் குழப்பநிலையோடு அன்று விடிந்திருந்தது ஆச்சிக்கு. எங்கிருந்து என்ன கெட்ட செய்தி வந்துவிடுமோ என்ற பதகளிப்பு. அப்படிப்பட்ட கெட்ட கனவுகள்.

இளைய மகளோடு பேத்தி பேரன்களோடும் ஆச்சியின் காலம் ஓடிக்கொண்டிருந்தது. சின்னதுகளென்று 'நெனச்ச மூப்புக்கு' நடந்துகொள்ள இடமளிக்காததால் அவர்கள் கடும்கோப வெளிப்பாட்டைக் காட்டத் தவறுவதுமில்லை.

முன்பக்கமாகக் கேட்ட பேச்சுக் குரல்கள் ஆச்சியை வீட்டுக்குள்ளிருந்து வெளித்தள்ளியது. மதில் கட்டும்வேலை நடந்துகொண்டிருந்ததால் பாஸ்மாராக இருக்கவேண்டுமென்று நினைத்தாள். கூடவே நின்ற இரண்டுபேரும் யாரென்றுதான் புரியவில்லை.

"தாரன் புள்ள வந்தீக்கி?"

ஓடிவந்த சின்னவனை இடை நிறுத்திக் கேட்டாள்.

"மாங்கமரத்த வெட்டப்போற" என்று பெரிய சந்தோஷத்தோடு சொல்லிக் கொண்டு ஓடினான்.

ஆச்சியின் உடலுக்குள் நெருப்பெடுத்தது.

"எல்லம் நாசமாக்கிய. எனத்துக்கோதெரிய மாங்க மரத்த வெட்டப் போற" என்றவாறு முந்தானையை இழுத்து இடுப்பில் சொருகிக்கொண்டு முன்னே வந்தாள்.

உண்மைதான். மரமேறி சைமன் வந்திருந்தான். மரத்தடியில் தடித்த கயிற்றுக் கட்டும் கோடாரியும் காணப்பட்டன. மூத்த மருமகன் அறிவுறுத்தல் வழங்கிக் கொண்டிருந்தார்.

"ம்.. சல்லிக்கார மருமகனாம். எல்லம் தலகீழாத்தான் நடந்துக் கொணுபோற" கருவிக் கொண்டாள் ஸபுராச்சி.

விஷயம் குழம்பப் போகிறதென்று வீட்டு வட்டாரத்தினருக்கு விளங்கிவிட்டது.

"இங்க பாருங்கொ.. இந்த ஊடு தோட்டத்துக்கு செஞ்செழிப்பா ஈக்கிய இந்த மாங்கமரம்தான். ஒத்தரும் அதத் தொடப்படாது. ஏன்ட உசிரீக்கங்காட்டிம் அந்த மரமீக்கோணும்."

ஆச்சி வைத்த சத்தத்துக்கு கப்சிப் பென்றாகிவிட்டது. அனைவரையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்ட பெருமிதத்தோடு உள்ளே திரும்பினாள்.

"இந்தக் கெழவி ஒன்டும் செய்யுடுகியல்ல" என்று புறுபுறுத்தபடி மருமகன் மெல்ல மறைந்தார்.

ஆச்சிக்கு இரண்டே இரண்டு பெண்பிள்ளைகள் தான். மூத்தவளுக்கு புதுவீடு கட்டிக்கொடுத்தே திருமணம் செய்து வைத்தார்கள். இளையவள் எட்டுவயது குறைந்தவள். பரம்பரை வீடு அவளுக்கென்றாகிவிட்டது. காலத்துக்கேற்ற திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டன. இரண்டு வீடுகளும் ஒரே காணியிலேயே அமைந்திருந்தன. காணி இருவருக்கு மென்பதே எழுத்து. இதற்குள் எந்தப் பிரச்சினையும் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கவில்லை.

"எந்த நாளும் இப்பிடீந்து சரிவாரல்ல. பொம்புளப் புள்ளயள் பெருக்கிய. ஊடு காணியக் காட்டித்தான் இந்தக் காலத்தில் கலியாணம் பேசோணும். பிரிச்சிக்கொளாட்டி

சரிவாரல்ல” இப்படி மகளுக்கு அடிக்கடி நெருக்குதல் கொடுத்துக்கொண்டிருந்தார் மருமகன்.

அதை ஸபுராச்சி அடியோடு விரும்பவில்லை. குடும்ப ஒற்றுமையில் கீறல் விழுந்துள்ளதாக ஊர் கதைக்குமேயென்று வெகுவாகக் கவலைப்பட்டாள். அது காலப்போக்கில் வலு விழந்து போய்விட்டது.

காணியின் நடுவே மதில் எழுந்து படிப்படியாக வளர்ந்து கொண்டுவந்தது. துரதிர்ஷ்ட வசமாக இடைநடுவில் மாமரம் மாட்டிக் கொண்டு நின்றது. எவருக்குமே அதுஒரு பொருட்டாக இருக்கவில்லை. வெட்டி வீழ்த்தத் துணிந்துவிட்டார்கள்.

ஆனால் ஸபுராச்சிக்கு...

திருமணமாகி இரண்டு வாரங்களிலேயே அந்த வீட்டுக்கு மருமகளாக வந்து சேர்ந்துவிட்டாள் ஸபுராச்சி. வீடும் பரந்த வீட்டுத் தோட்டமும் அவளுக்கு நன்கு பிடித்துவிட்டது.

மாமரத்திலே எப்பொழுதும் குருவிகள் வந்தமரும். அதிகாலையில் இனிய குரலெழுப்பும். அணில்கள் ஓடிவிளையாடும். சிலவேளை குரங்குகளும் வந்து கூத்துக்காட்டும்.

“ஸபுரா இந்த மாங்கமரம் தாரன் நாட்டினென்டு தெரீமா?”

ஒரு மாலைப் பொழுதில் மாமரத்தடியில் கதிரை போட்டு அமர்ந்திருந்த வேளையில் அவர் இப்படிக் கேட்டார்.

கொஞ்சம் யோசித்துவிட்டு “ஓங்கட வாப்பவாயீக்கும்.” என்றாள் அவள்.

சிரித்துவிட்டு “அஞ்சி வயஸில நான் நாட்டின மாங்கமரமாம் இது. வாப்போட சேந்து வேலி கெட்டினாம்.

கம்பொன்டெடுத்துக் கொண்டு ஆடு வெரட்டித் திரிஞ்சாம். ஒவ்வொருநாளும் தண்ணூத்தினாம். இந்த மரத்தக் காணச்செல்லே எனக்கு வாப்பவத்தான் நெனவுவார" என்றார்.

அவளது ஊகம் பிழைத்தாலும் அன்றுமுதல் அந்த மாமரத்தின் மீது அலாதியானபற்று ஏற்பட்டுவிட்டது.

அந்த ஆண்டில் மாமரம் வெகுவாகப் பூத்துக் காய்த்தது. ஒவ்வொரு வருடமும் இப்படியென்றுதான் அவள் நினைத்தாள்.

"ஒங்கட பரக்கத்துதான் இந்தப் பைணம்தான் ஜாதியா காச்சீக்கி" அவர் சொல்லிப் பூரித்தார்.

ஸபுராவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. மனசுக்குள்ளே மத்தாப்பு.

ஒருநாள் விழுந்திருந்த மாம்பிஞ்சொன்றை எடுத்துக் கடித்தாள். அந்தப் புளிப்பு அவளுக்குப் பிடித்துவிட்டதில் தன்னை மறந்தாள்.

"ஆ இதெனத்தியன் பிஞ்சிமாங்க தின்னிய? சென்னா நல்ல பழுத்தமாங்க கொணுவந்து தாரேன்" தற்செயலாகக் கண்ட கணவன் அன்போடு இப்படிக் கடிந்தார்.

"இல்ல எனக்கு பச்சமாங்கதான் நல்லம்" அவள் வெட்கித்துக்கொண்டு சொன்னாள்.

உடனே தடிகட்டி, மரக்கிளைக்கேறி முற்றிய பச்சை மாங்காய்களை தட்டி வீழ்த்தினார்.

அவள் தோல்சீவி உப்பும் மிளகாய்த் தூளுமிட்டு அரிந்து சாப்பிடத் தொடங்கினாள். அவருக்கு பார்க்கவே பல் கூசியது.

அன்று முதல் லொவிக்காய், பெரளிக்காய், விளாங்காய் என்றெல்லாம் நாளாந்தம் கொண்டுவரத் தொடங்கினார்.

மாம்பழசீசன் வந்துவிட்டால் இனி வியாபாரிகளின் படையெடுப்புத்தான். கூடியவிலை சொல்பவர்களுக்கு

கொடுத்துவிடுவார். அவர்கள் ஆய்ந்துகொண்டு செல்வார்கள்.

மூத்தமகள் பிறந்த புதிது. மாம்பழக் காசுக்குத்தான் தொட்டில், குளிப்பாட்டும் பேஸன் முதலான சாமான்கலெல்லாம் வாங்கினார்கள். அந்தத் தொட்டில் பிள்ளையின் பிள்ளைகளுக்கும் பாவித்து இன்னும் காட்சிப் பொருளாக இருந்துவருகின்றது.

அவருக்கு ஒரேயொரு தங்கச்சிதான். அதுவும் இருபது மைல்களுக்கப்பால் நளகாமத்தில் வாழ்ந்துவருகிறாள். மாம்பழ சீசன் வந்துவிட்டால் மாம்பழப் பெட்டியோடு ஒருமுறை தங்கையைப் பார்க்கப் போய்வருவார். ஒவ்வொரு தடவையும் மாம்பழத்தோடு வருவதால் பிள்ளைகள் 'மாங்கமாமா' என்று பெயரையே வைத்துவிட்டார்கள்.

"ஸபர தாத்தா மாங்கக் கொழுந்து கொஞ்சம் பிச்சிக்கொள்ளவா.. எங்கட ஆடு குட்டிபெத்தீக்கி.." இப்படியொரு குரல் இரண்டுமூன்று நாளைக்கொரு தடவையாவது அந்தவீட்டு வாசலிலே ஒலிக்கும்.

"ஆஆ பிச்சிக்கோங்கொ.." என்று சொல்லிவிடுவாள். குட்டி போட்ட ஆட்டுக்கு ஒரு மருந்தாக கொழுந்து கொடுப்பது வழக்கம். பெரும்பாலான வீடுகளில் இரண்டொரு ஆடுகளையேனும் வளர்க்கத் தவறமாட்டார்கள். அந்த வகையில் இந்த மாமரம் ஊருக்கே உதவிநின்றது.

"உம்மா மாங்க மரத்தில உஞ்சில் கெட்டித் தாங்கும்மா.. எனக்கும் தங்கச்சிக்கும் ஆடியத்துக்கு.."

"சரி சரி நான் கெட்டித்தாரன் புள்ள...

அதோடு விட்டார்களா?

"வாப்பா என்னக் கொஞ்சம் ஆட்டுங்கொ"

மாறிமாறி ஆட்டிவிடுவார்கள். எங்கே திருப்தி கண்டார்கள். அக்கம் பக்கத்துப் பிள்ளைகளும் வந்து விளையாடிக் களிப்பார்கள்.

"ஆ இந்தாங்கும்மா ஓங்களுக்கு எலக்கஞ்சி கொஞ்சம்.." மூத்தமகள் கஞ்சிக் கோப்பையோடுவந்திருந்தாள். உம்மாவின் மனநிலையையும் அறிந்து கொள்வதற்காக.

"ம்.. நல்லந்தானே.." என்று எடுத்த எடுப்பிலேயே ஒருமுறை உறிஞ்சி உப்புப் பார்த்துவிட்டு மேசையில் வைத்தாள் ஸபுராச்சி.

"இங்கபாரு ஓன்ட மாப்பிளக்கி எனத்தியன் புடிச்சீக்கிய. மாங்கமரத்தத் தின்னப் போற.. ஓன்ட வாப்ப நாட்டின மரம்.. அந்த மனிசன்ட கழுத்த வெட்டியமாதிரி வேலயேன்..."

"மகள் பெருத்திட்ட.. கலியாணம் பேசோணும்.. நாலு பொக்கத்தாலேம் அடச்சி பஸிந்தா வெச்சிக்கொன்டா நல்லமேன்.. சரிசரி இப்ப வெட்டியல்லயென்டு செல்லீட்ட தானே உம்மா" மகள் சமாளித்துவிட்டுச் சென்றாள்.

இரண்டு பக்கத்தாலும் கட்டிக்கொண்டு வரப்பட்ட மதில் மாமரத்தின் கழுத்தைப் பிடித்து நெரிக்கத்தயாராக நின்றது. எதுவுமறியாத மாமரம் இரண்டு பக்கமும் சலசலத்து சுகந்தம் பரப்பிக்கொண்டிருந்தது.

"மனிசி எப்ப மண்டயப் போடியோ தெரிய. அன்டக்கித்தான் மாங்கமரத்தட மண்டேல போடிய"

மருமகன் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இப்படிச் சொல்லி, அதையொரு பகிடியாகக் கொண்டாடிச் சிரித்து மகிழத் தவறுவதில்லை.

❖

# கல்யாணக் கடை

ஐஸம் தாத்தாவின் மூக்குத் தூளென்றால் அது எங்கும் பிரசித்தம். அவள் வீட்டு முன்படிக்கட்டில் எப்பொழுதுமே நாலைந்துபேர் குந்திக்கொண்டிருப்பார்கள். பெரும் பாலும் தூள் வாடிக்கையாளர்கள்தான். பக்கத்து பஸ் ஹோல்டுக்கு வருபவர்களும் சிலபோது அவ்விடத்திலே அமர்ந்து கொள்வார்கள். சும்மா இருப்பார்களா? ஏதாவது ஊர் பலாய் பேசி பொழுதைத்தள்ளுவார்கள்.

“தெரீமா செய்தி இந்தப் பைணம் பஸால் மக்கத்துக்கு பொகப்போறாம்”

அது ஹஜ் ஸீஸன். அதனால்தான் போலும் அக்கதை மெற்கிளம்பியது.

“மெய்யா அப்ப பொடியனுக்கு நல்ல லைனொன்டு புடிபட்டீக்கும்.”

“யாவாரம் புடிபடாட்டி ரெண்டு தட்டுக்கு அடித்தாளம் போட்டு கடகெட்டேலுமா.. லைன் கிளியரானா அப்பிடித்தான்.”

“நான் நம்பிய இந்த வருஷம் அவனாயீக்கும் கொறஞ்ச வயஸில மக்கத்துக்குப் போற”

“கொறஞ்ச வயஸ" கூடின வயஸெண்டில்ல ஹஜ்ஜி கடமயானா எந்த வயஸிலேம் போகேலும்.”

பலவாறாக மாறிமாறி அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொண்டு இடையிடையே தூள் உறிஞ்சிக்கொண்டனர்.

* * * * * * *

பஸாலின் வீட்டுக்கும் பாதைக்குமிடையே போதுமான இடைவெளியிருந்தது. அந்த இடத்தைப் புத்தியாகப் பயன்படுத்தி அவன் இரட்டைத் தட்டுக் கடையமைத்து

விட்டான்.

என்னகடை போடப் போகிறான் என்பதே பலரதும் எதிர்பார்ப்பாக விருந்தது. மணிச் சாமான்கள், அன்பளிப்புப் பொருட்கள், மின்சாரக் கருவிகள் இப்படி பல்தினிசுக் கடையாக அமைந்துவிட்டது.

அவனது வாப்பா அஸ்லம் நானாவும் கடையில் நின்று உதவினார். முன்றே மாதத்தில் தேடி வந்து, நம்பிவந்து சாமான் வாங்கும் கடையாக அது பிரபல்யமடைந்து விட்டது.

"சின்னப் பொடியனென்டாலும் யாவாரத்தில கெட்டிக்காரன்" இப்படியும் பலரும் பேசிக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

அது இன்னொரு வகையில் தொல்லையாக அமைந்துவிட்ட தென்னவோ உண்மைதான்.

பஸாலுக்கு திருமண கேள்விகள் நிரம்ப ஆரம்பித்துவிட்டது.

"வாப்போட பேசிக்கோங்கோ"

அவனை நோக்கிவந்த நீரோட்டத்தை மெல்ல அந்தப் பக்கமாகத் திருப்பிவிட்டான்.

"யாவாரம் தொழில் இப்பதான் பரகத்தாகிக் கொணுவார. இன்னம் ரெண்டு வருஷத்துக்காலும் கலியாணப் பேச்சிப் பேசவாண" இப்படி ஒரே வெட்டாக அஸ்லம் நானா போட்டுடைத்துவிடுவார்.

'பொறுப்பியள் வரமுந்தி ஹஜ்ஜிக்கு பெய்த்திட்டு வந்தா நல்லமேன்' என்ற அடிப்படையில்தான் அவன் ஹஜ் ஏற்பாடுகளைக் கவனிக்க ஆரம்பித்தான்.

* * * * * * *

புரோக்கர் புஹாரி அபூபக்கர் ஹாஜியார் வீட்டு வெளிவாசலில் அமர்ந்திருந்தார். ஜிலுஜிலுவென்று காற்று வீசியது. இயற்கையோடு ஒன்றிய மேட்டுப் பாங்கான அமைவிடத்தில் அந்தப் பெருவீடு காட்சிதந்தது.

“செல்லுங்கொ” என்றவாறு ஹாஜியார் வந்தமர்ந்தார்.

அவருக்கு இருபது வயதில் ஒரேமகள் நிஸ்மியா. பரீட்சை எழுதிவிட்டு இரண்டு வருடம் மத்ரஸா விலும் ஓதிய பிள்ளை. அழகுக்கும் குறைச்சலில்லை.

“நல்லோரு எடத்தில தேடிக்கொணுவந்திட்டன் ஹாஜியார்.”

“மெய்யா நான் சென்ன விஷயங்கள கவனிச்சிப் பாத்தா?”

“ஓஓ.. அப்பிடித்தான்.. சிகரேட்டாலும் வாயில வெக்கியல்ல.. அஞ்சி நேரமும் அவ்வல் தக்பீருக்கு தொழுகிய ஊருக்குள்ளதான்.”

“மிச்சம் நல்லம்”

“பொடியனுக்கு மிச்சம் மிஞ்சினா இருவத்தஞ்சி வயஸீக்கும். ஜெம்புக்கமாதிரி பொடியன். பாக்கப் பஸந்து.”

“அதுசரி யாவாரமியள்..”

“சொந்தக்கட.. எப்பிடீம் மூனுநாலு லச்சத்துக்கு சாமனீக்கி. பொய் செல்லியேத்துக்கன்.. டவுன்லயல்ல ஊருக்குள்ளதான் கட”

“ஹைறராயீக்கும். நாங்களும் கொஞ்சம் தேடிப்பாக்கிய... சரியென்டா சொணங்கத் தேவில்லேன். குடுக்கல் வாங்கல பேசி முடிச்சிக் கொளோம்...”

“ஹாஜியார் ஒரு விஷயம்.. பொடியன்ட வாப்பவென்டா இப்ப கிட்டவாக்கேல. ஹஜ்ஜிக்குப் பொறகுதானாம் எல்லம்”

“அல்ஹம்துலில்லா இப்பவே ஹஜ்ஜிக்கிப் போறெண்டா எவளது நல்லமன்..”

“அப்பநான் போறன். ஹஜ்ஜிப் பெருநாள் பிந்தி இங்கல வாரனே..”

“ஆ. அன்ன நான் சென்னாச் சென்னதுதான்”

“ஓங்களப் பத்தி எனக்குத் தெரியவா ஹாஜியார்.”

குடையும் கையுமாக விசுக்விசுக்கென்று நடந்தார் புரோக்கர் புஹாரி. அஸ்லம் நானாவைக் கண்டுபிடித்து அவரது காதிலே இவ்விஷயங்களைப் போட்டுவைக்கும் வரை அவருக்கு நிம்மதியில்லை.

அபூபக்கர் ஹாஜியென்றால் நிலபுலன்களென்று எவரும் எட்டமுடியாத உச்சத்தில் நிற்பவரல்லவா?

* * * * * * *

அஸ்லம் நானாவுக்கு அவசர அவசரமாக கடையில் மேல்தட்டைக்கட்டி, நாலுபேருக்குத் தெரிய அதிலே மனைவியோடமர்ந்து கதைத்துக்கொண்டிருக்க வேண்டும் போல் தோன்றியது.

“ஓங்கட யோசினயள் கொஞ்சம் கொஞ்சமாகச் சரியாகிக் கொணுபோற” மனைவி இடைக்கால அவதானிப்பு அறிக்கையைச் சமர்பித்தாள்.

அவருக்கு பெருமை பிடிபடவில்லை.

“இந்தக் காலத்தில புத்தியப் பாவிச்சிக் கொளோணும்.. நீங்க வாணான்டு செல்லிய தெல்லாம் கேட்டீந்தா வாயில மண்தான்.” சிரித்துச் சிரித்து அஸ்லம் நானா சொன்னார்.

“புரோக்கர் நான எனத்தியன் செல்லிய..?” அவளுக்கும் அறிந்துகொள்ள ஆசை இருக்காதா என்ன?

“பஸந்து.. நடத்த.. தொழில்தொறவு.. இதில தாருக்காலும் கொறகுத்தம் கண்டுபுடிக்கேல.. பொடியன் ஹஜ்ஜ முடிச்சிக்கொண்டு வரட்டே.. அல்லாட கிருபயால மூனுமாஸ்தேல கலியாணந்தான்”

“பேசிப்பேசி வார முடிவில்லேன்.. ம்.. மனிசரோட கோச்சிக் கொளவாகிய.. எனக்கென்டாத் தெரியா”

“மாப்பிளயொன்டீந்தா பேசிவாரதானே.. சரி நான் கேக்கிய ஒரு மாப்பிளய எத்தினபேருக்குக் குடுக்கவன்..”

“மெய்தான் நஸீபுள்ள எடத்தில நடக்கும்.. அதுசரி ஒங்களுக்குத் தெரீமா இந்த முடுக்கூட்டு முபீன்.. தொழிலில்லாமத் திரீதவன்... அவனுக்கே ஒரு லச்சம் குடுத்தாம்.. அப்பிடிப்பாத்தா எங்கடவனுக்கு பத்துலெச்சம் எடுத்தாலும் போத....”

இருவரதும் கால்கள் நிலத்தில் படவில்லை. பெரிய இடத்துச் சம்பந்திகளாகப்போகும் பெருமிதம் அவர்களை மேலுதைத்துக்கொண்டிருந்தது.

* * * * * * *

பஸால் ஹஜ்ஜை முடித்துக்கொண்டு வந்து ஒரு வாரத்துக்கும் மேலாகிவிட்டது. இந்த ஒரு வாரமும் சனங்கள் ஸலாம் சொல்ல வருவதும் போவதுமாக ஓய்வே இருக்கவில்லை.

எல்லோருடனும் அன்பாகப் பழகிவருகின்றமையும் மாப்பிள்ளை அந்தஸ்தும் வெகுவான ஆதரவை பெருக்கிவிட்டிருந்தது.

இரண்டாவது வாரத்தில் வியாபாரத்தில் இறங்கிவிட்டான் அவன்.

கல்யாண விடயங்கள் பற்றி அவன் பெரிதாக ஒன்றும்

அலட்டிக்கொள்ளவில்லை. உம்மா வாப்பா அவசரப் பட்டாலும் அவனுக்கென்னவோ இன்னம் இரண்டொரு வருடங்கள் கழிந்தால் நல்லது போலிருந்தது.

* * * * * * *

புஹாரி நானாவுக்கு அபூபக்கர் ஹாஜியார் அழைப்பு விடுத்திருந்தார்.

அந்தச் செய்தியை அஸ்லம் நானாவின் காதில் ஊதிவிட்டுத்தான் புறப்பட்டார்.

சிரித்துக் கோண்டே வரவேற்றார் ஹாஜியார்.

புஹாரி நானாவின் சேட்பைக்குள் இப்பொழுதே இருபதைந்துக்கு மேல் தனிக்கட்டாக விழுவது போன்ற பிரமை.

“எப்பிடியன் ஹாஜி நான் சென்ன விஷயத்த தேடிப்பாத்தா?” வாயெல்லாம் இனிப்பாக புரோக்கர் நானா கேட்டார்.

“அதுக்குத்தானே வரச்சென்ன... நான் பொடியனேம் பாத்திட்டன்.”

“எப்படியன் நான் சென்னது சரியா.. பொடியன் பட்டா..?”

“நல்ல பார்வயான பொடியன்.. அதபொழுக்கமும் நல்லம்.”

“ஹாஜியார் கலியாண விஷயத்தில பொய் செல்லியதான்.. நான் இந்த விஷயத்திலயென்டா ஒரு இம்மியளவாலும் பொய் செல்லல்ல.. செல்லத் தேவில்லேன்.”

“ஆனா ஒன்டு”

“அதெனத்தியன்?” என்றவாறு காதைக் கூர்மைப்படுத்தினார்.

“ஊட்ட வெலியாமத்து மொதலாளிக்கு அடவு வெச்சி அஞ்சி லெச்சம் எடுத்தீக்கி.. அதாலதான் கடகெட்டி யாவாரம் தொடங்கி ஹஜ்ஜிக்கும் பெய்த்தீக்கி.. ம்.. இதெல்லம் தேவயா.. இப்பிடி ஸோபன காட்டி பத்து லெச்சம் சீதனமெடுத்து அஞ்சி லெச்சம் நயம்புடிக்கியத்துக்கு மாப்பிளேட வாப்ப ஐடியா போட்டீக்கி.. எப்பிடிவேல.. நாளக்கி எங்கட மகளேம் விக்கியொன்டும்” ஒரே மூச்சில் சொல்லித் தீர்த்தார்.

புஹாரி நானாவின் கண்கள் உருண்டு புரண்டன. இப்படி எதுவுமே அவர் அறிந்திருக்கவில்லை. தான் நிரபராதி என்பதைச் சொல்லி உறுதிப்படுத்தவேண்டும் போலிருந்தது அவருக்கு.

“ஹாஜி.. இங்க இங்க..” என்று ஏதோ சொல்லிச் சமாளிக்கப் பிரயத்தனப்பட்டார்.

“அல்லாட காவல்.. பெய்த்திட்டு வாங்கோ..” என்றவாறு ஹாஜியார் எழுந்து உள்ளே சென்றார்.

குடையொரு பக்கமும் நடையொரு பக்கமுமாக புஹாரி நானா.

“அஸ்லம் நான அந்தக் காலத்திலீந்தே ஜில்மால் காரன்தான்.”

அப்படி யாரும் சொன்னார்களா? அல்லது அவரது குரலே அவருக்குள் எதிரொலித்ததா? எதுவுமே புரியவில்லை.

❖

# மார்கழி மலர்கள்

“நேரத்துக்கு வாரலல.. வந்தா ஒழுங்கா வேலசெய்தல்ல.. எனத்தியன் இது. ஓங்களியள நம்பி நாங்க எப்பிடியன் இந்த யாவாரத்தக் கொணுபோற.. ம்.. ஏலாட்டி அல்லாட காவல்ல பெய்த்திருங்கொ..”

மிலேனியம் ஹாஜி கோபத்தோடு கத்தினார். இப்பொழுதெல்லாம் அவருக்குக் கோபம் அடிக்கடி பொத்துக் கொண்டு வருகிறது.

ஹாஜி அங்கிருந்து போகும்வரை எவருமே வாய்திறக்கவில்லை.

“இப்ப எந்த நேரமுமே ஏச்சித்தான்டா. எனக்கென்டா போதுமாகீக்கிய...”

“அதென்டா மெய்தான். இங்க நிக்கியதப் பாக்க பேசாம மாறியதுதான் புத்தி..”

“பத்துமாஸம் நின்டதானே. இன்னம் ரெண்டு மாஸ்தக்கி பல்லக்கடிச்சிக் கொண்டு நிக்கோம்.”

தங்களுக்குள் கருத்துப் பரிமாறல் செய்துகொண்டனர். அவர்கள் ஒன்றும் பெரிய அனுபவ சாலிகள் அல்ல. இன்னும் இளம் பொடியன்கள்தான். டிசம்பரில் ஓஎல் எழுதிவிட்டு ரிஸல்ட் வரும்வரை விளையாட்டுப் போக்கில் வந்துசேர்ந்தவர்கள்.

பரீட்சை முடிவு நல்லபடியாக வரவில்லை. ஊரிலே ரஸ்தியாது அடிப்பதைவிட கடையிலேயே நிற்பது நல்லதென்று வாப்பாமாரும் வேறு சொல்லிவிட்டார்கள்.

ஒன்றாக இவ்வளவு காலமும் படித்தவர்களாயிற்றே. ஒரே இடத்தில் வேலை செய்யக் கிடைத்தமை அவர்களுக்குப்

பெரும் கவர்ச்சியாக அமைந்தது.

காலை எட்டுமணிக்கு முன்பே அவர்கள் கடைக்குவந்துவிடுவார்கள். தேநீர், சாப்பாடென்று ஒரு குறையுமில்லை. வேலை பழகும்வரை ஒரு நாளைக்கு நூறு ரூபா சம்பளம். ஒரு வருடத்தின் பின்பு மூன்று மடங்காக உயர்த்தித் தருவதாக ஹாஜியார் உத்தரவாத மளித்திருந்தார்.

“ஒழுங்கா வேல பழகிக்கோங்கொ. கஷ்டமான வேலயள தலப்புக்கே பழகிக்கொண்டா லேசி” ஒரு பயிற்றுவிப்பாளன்போல் அவர் அடிக்கடி விளக்கமளிப்பார்.

இரும்புக்கூறு... பட்டங்கள் அறுத்தல்.... தகடுவ கையறாக்களை எண்ணிக் கொடுத்தல்... சீமெந்து முள்ளுக்கம்பி ரோல்களை ஏற்றுதல்.. இப்படியான வேலைகளே மாறிமாறிக் கொடுக்கப்பட்டன.

தூக்கிப் புரட்டவேண்டிய தேவை பெரிதாக இல்லாவிட்டாலும் கூலிக்காரருக்கு பக்கபலமாக இயங்கவேண்யிருந்தது.

பெரும் கொந்தராத்துக் காரர்களெல்லாம் வந்துபோவார்கள். வாகனங்கள், லொறிகள் வரிசையாக வந்துநிற்கும். வியாபாரம் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவும் அமோகமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

ஹாஜியார் கலகலப்பாகவும் ஆதரவோடுமே சிப்பந்திகளோடு நடந்துகொள்வார். சிலவேளை ஜோக்காகவும் கதைப்பார்.

பொடியன்களுக்கு கஷ்டத்துக்கு மத்தியிலும் மகிழ்ச்சியே நிலவியது. நாளாந்தம் புதுப்புது அனுபவங்களைப் பெற்றுவந்தனர்.

“மசான் ஓடிவா.. மூனுநூல் இரும்புக் கூறு நூறு. இந்தா நீ மாக் பண்ணிக்கோ.. நான் எடுக்கியன்....”

மூன்றுபேர் சேர்ந்துவிட்டார்கள்.

* * * * * * *

“ஸல்மான் நானா இங்க வாங்கோ” ஹாஜியாரின் அழைப்பு.

ஸல்மான் நானா அந்தக் கடையில் முப்பது வருஷ சேவிஸ்காரரன். அவருக்கு இதுதான் வேலையென்றில்லை. ஒருபோது மேற்பார்வையாளர். இன்னொரு சந்தர்ப்பத்தில் ஆலோசகர் இப்படியிப்படி....

“எனத்தியன் ஹாஜி” என்றவாறு சிரிப்போடு வந்துநின்றார்.

“ஒங்களுக்கு மறந்து பெய்த்தா?” எதையோ ஞாபகமூட்டுவதுபோல் கேட்டுநின்றார்.

ஸல்மான் நானாவுக்கு மீற்றர் பிடிபடவில்லை. யோசித்து யோசித்துப் பார்த்தார். அதற்கு மேலும் அவரைத் திண்டாடவைக்க விரும்பவில்லை போலும்.

“இப்ப பத்தாம் மாஸம்”

“சரி சரி இப்பதான் நெனவுவந்த” ஸல்மான் நானா கண்டுபிடித்துவிட்டார்.

“இப்பவே ரெடியானாத்தான் ஜனவரிக்கி கணக்கா ஸெட்டாகிய” பல்வேறு விடயங்களை உள்ளடக்கி மனம் நிறைந்து சிரித்தார்.

“அதெல்லம் சரி ஹாஜி”

அதற்குமேல் கதைகொடுக்க இயலாமல் கடமை அழைத்தது போலும்.

மூன்று கடைக் காம்பரா, மேல்மாடி, பின் இனைப்பு, ஸ்டோர் என்று வெகுவாக வளர்ந்திருந்தது மிலேனியம் ஹாட்வெயார். பல உற்பத்தி நிறுவனங்களின் ஏக ஏஜென்டாகவும் செயற்பட்டனர்.

சகல கட்டிடம் சார் பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெறக்கூடிய இடமாக அந்தப் பிரதேசத்திலே பெயர் பெற்றிருந்தது.

ஹாஜியின் அணுகுமுறைகள் யோசிக்க யோசிக்க வியப்பூட்டுபவை. அவரின் நிழலில் நீண்டகாலம் நின்றவர்களுக்குத்தான் இந்த ராக தாளங்கள் புரியும்.

ஒன்பதாம் பத்தாம் மாதம் நெருங்கும்போது தாறுமாறாகப் பேச்சு விழத்தொடங்கும். அவரது சுபாவமே மாறிவிடும். இவரும் வேண்டாம் இவர்கடையில் வேலையும் வேண்டாமென்று பொடியன்கள் ஓடிவிடுவார்கள்.

அதேநேரத்தில் அங்கே இன்னொரு புதியகுழு வருவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கும்.

ஒரு கணம் இதையெல்லாம் நினைத்துப் பார்த்த ஸல்மான் நானா தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார்.

“ஸல்மான் நானா”

அவர் எதிர்பார்க்கவில்லை. கடைக்காரப் பொடியன்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

“நீங்கதான் எங்கள இங்க கூட்டிக்கொணுவந்த.. இந்த வருஷம் முடீதத்தோட நாங்க போற.. எங்களுக்கு சரிவாரல்ல...”

“அவசரப்படாம இன்னம் கொஞ்சம் யோசீங்கொ புள்ளயள். இந்தக் காலத்தில அப்பிடி லேசாத் தொழில் தேடேல..” நலம்விரும்பிபோல் புத்தி சொன்னார்.

“ஒங்களுக்கு நன்ம கெடக்கும் எங்கள உடுங்கொ..” ஒரே முடிவாகச் சொன்னார்கள்.

“சரி சரி ஒங்கட புரியம்”

இந்த அனுபவம் அவருக்குப் புதிதல்ல.

அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வருடாவருடம் நடப்பதுதான்.

* * * * * * *

மாலையில் கடைமுடியதும் தனது லொடலொட சைக்கிளிலே ஏறிவிடுவார் ஸல்மான் நானா. இடையில் கொஞ்சம் காய்கறிகள் வாங்கிக் கொண்டாரென்றால் வீட்டுக்குவர ஏழுமணிக்கு மேலாகிவிடும். பள்ளிக்குப் போய்வந்து சாப்பிட்டால், செய்திகேட்டுச் சிறிது நேரத்தில் படுக்கையில் விழுந்துவிடுவார்.

இந்த நாளாந்த நடைமுறையில் அன்று மாற்றம் காணப்பட்டது. பகல் சாப்பாட்டோடு பிள்ளை பிடிக்கும் வேலைக்காக அரைநாள் விசேட லீவு வழங்கப்பட்டிருந்தது அவருக்கு.

சில நாட்களாக வேலையோடு வேலையாக ஊருக்குள் கொஞ்சம் உலாவரத் தவறவில்லை அவர்.

பழைய நட்பைப் புதுப்பித்துக்கொண்டு ஐம்பத்தெட்டு வயஸிலும் வேலை செய்துகொண்டிருக்கும் காஸிம் மாஸ்டரோடு கலந்துரையாடினார். பாடசாலையில் பியோன்வேலை பார்க்கும் பாரியுடன் பிளேன்ரீ குடித்துப் பொழுதுபோக்கினார். படிப்பில் கவனமற்ற பிள்ளைகள் மீது அவருக்கு அப்படியொரு அக்கறை.

அன்று அஸர் தொழுதுவிட்டு பள்ளிவாசலிலிருந்து வெளியிறங்கும்போதே ஆதம் காக்காவோடு கைகோர்த்துக்

கொண்டார்.

“இன்டக்கி கடக்கி பொகல்லபோல..”

“மேலுக்குள்ள கொஞ்சம் வருத்தம். வயஸ¤ம் கொழப்பமேன்.. லீவொன்டடிச்ச...”

“வாங்கொளே மிச்சம் நாளேப் பொறகு”

“சரி சரி அப்ப கோப்பி கொஞ்சம் குடிச்சிட்டே போம்.”

பள்ளிக்குப் பக்கத்தில் கேற்போட்ட வீடு. முற்றத்தில் கொய்யாமரம் தலைவிரித்து நின்றது. அவர்களுக்கென்றே போட்டுவைத்ததுபோல் இரண்டு கதிரைகள் கிடந்தன.

அப்போது ரீசேட்டும் டெனிங்குமாக வீட்டுக்குள்ளிருந்து வந்து எட்டிப் பார்த்தான் ஆதம் காக்காவின் மகன்.

ஸல்மான் நானாவின் இலக்கு சரி.

“அது ஒங்கட மகனாயீக்கும்..”

“ஓ இந்தப் பைணம் சோதின எடுக்கிய. சாடயாலும் கணக்கில்ல. ஒரே போலயடிச்சித் திரீததுதான் வேல.” மகனைப் பற்றித் தன் கவலையை வெளிக்கக்கினார் ஆதம் காக்கா.

ஸல்மான் நானாவுக்கு சந்தர்ப்பம் நல்ல பதமாக வந்தமைந்துவிட்டது.

“அல்லாட நாட்டமீந்தா பாஸாகியொன்டும். பாஸானா எப்பிடிச்சரி புள்ளயள் இன்னமின்னம் படிக்கிய.. ∴பேலானா சும்ம ரஸ்தியாதடிச்சித் திரீததுதான் வேல..”

“அதுதான் எனக்கும் பெரிய பயமாயீக்கி. செல்லியத்தக் கேக்காத வயஸ¤. அவங்க செல்லியதுதான் சரி”

“ம்.. இப்பவே நல்லோரு கடயக்கிடயப் பேசிவெச்சா.. சோதின முடீதத்தோட சேத்துடேலுமேன்.. இல்லாட்டிப் பெரிய

கரச்சல். தேவில்லாத ஜாதியெல்லாம் பழகியேன்... ஒங்களோடீக்கிய மொஹப்பதுக்கு எனக்கோணுமென்டா ஒரொதவி செய்யேலும்..."

"ஏத்தியோ நான் செஞ்ச நலவொண்டு அல்லா ஒங்களக் கொணுவந்து சேத்தினத்தக் கண்டா.. செல்லுங்கொ செல்லுங்கொ.."

"ஹாஜியாரோட பேசி, மிலேனியம் ஹாட்வெயாரில சேத்துடேலும்... நானும் நிக்கியதானே.."

"நல்லோரு யோசின.. இஹ்ஸான் இங்கவா மகன்.." உள்ளே பார்த்து மகனை அழைத்தார்.

என்னவென்று தெரியாமல் ஓடிவந்து நின்றான்.

"சோதின முடீதத்தோட இவரோட நீ கடக்கிப் பொகோணும்.. சும்ம.. திரிஞ்சி வேலில்ல"

"எனக்கேலா"

ஒரேயடியாக வாப்பாவின் வேண்டுதலை அவன் மறுதலித்தான்.

"மகன் ஒனக்கு தனிய வரேலாட்டி இன்னம் ரெண்டு கூட்டாளிமாரேம் கூட்டிக் கொணுவா.. ஊருப்புள்ளயளுக்கு ஸபோட்டொன்டு குடுக்கச் சென்னா ஹாஜியாரு கேட்டுக்கொளுவாரு.." இடையில் குறுக்கிட்டார் ஸல்மான் நானா.

"ஆ.. அப்பிடியென்டா வாரன்.. எங்கியாலும் தனியப் போறல்ல நான்.." குழு ஒருமைப்பாடு அவனுக்குள் வேலைசெய்தது.

விடுவாரா?

"அஞ்சி பேரென்டாலும் குத்தமில்ல. நான் பொறுப்பெடுக்கியன். ம்.. இந்தப் புள்ளயள் நாளேப் பின்னுக்கு

நல்லாவந்தா எனக்கு அல்லாட்டச்சரி கெடச்சிப் போறேன்."

"அப்ப நான் மத்தாக்களோட பேசீட்டு ஒங்களோட வந்து செல்லியனே.." இஹ்ஸான் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்துவிட்டான்.

ஆதம் காக்காவின் மனசு ரொம்பவும் பூரித்துப் போய்விட்டது. மகன் பாஸாகப் போவதில்லையென்பது அவருக்கு என்றோ தெரிந்துவிட்ட விடயம். அவனை என்னசெய்வதென்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார். ஒரு கோப்பிக் கோப்பையோடு பிரச்சினை தீர்ந்துவிட்ட திருப்தி.

"சரி.. மறுபேணம் எனக்குக் குத்தம் செல்ல வாண. இன்னம் ரெணுமுனு மாஸமீக்கி. எடக்கெட நெனவூட்டிக் கோங்கொ. அப்ப நான் வரவா.."

"அல்லாட காவல்"

ஸல்மான் நானா வெற்றிவாகையுடன் வீரநடை போட்டார்.

* * * * * * *

அடுத்த வாரம் பரீட்சை ஆரம்பமாகவிருந்தது. அதற்கிடையில் ஸல்மான் நானாவை பொடியன்கள் சந்திக்கத் தவறவில்லை. ஐந்துபேர் கடைக்குவருவதாக உறுதியளித்திருந்தனர்.

உறுதியான தகவலை ஹாஜியாரின் காதில் போட்டுவிடும் வரை அவருக்கு நிம்மதியிருக்கவில்லை.

"சிரிச்சிக் கொண்டு வாரத்தப் பாத்தா நல்லோரு செய்திபோல.."

"ஓ.. ஹாஜி. அஞ்சிபேர மிச்சம் கஷ்டப் பட்டு ஸெட் பண்ணீட்டன்."

“அல்ஹம்துலில்லா... இவனியள் இன்டக்கி நாளக்கி பெய்த்திரருவானியள் போலீக்கி.. கணக்குப் புள்ளேக்கட்டச் செல்லி.. கணக்கு வழக்கப் பாத்து வெக்கச் செல்லுங்கொ..”

“சரி ஹாஜி”

* * * * * * *

பரீட்சை முடிந்து அடுத்த நாளே ஐந்துபேரும் ஸல்மான் நானாவின் வீடுதேடி வந்துவிட்டார்கள். அவர் மகிழ்ந்து போனார்.

“ஆ.. எனத்தியன் எல்லாரும்?” வரவேற்று விசாரித்தார்.

“நாங்க கொஞ்சம் ஹாஜியாரோடேம் பேசிக்கொண்டா நல்லமேன்..” இஹ்ஸான்தான் கேட்டான்.

“நல்லம் அப்பவாங்கொ இப்பவே போம் ஊட்டுக்கு”

ஸல்மான் நானாவின் தலைமையில் நடை பவனி ஆரம்பித்தது. இடையில் என்னென்னவோ பேசினார்கள் சிரித்தார்கள்.

நல்லவேளை ஹாஜியார் காரில் ஏறவில்லை.

“கலியாணூட்டுக்கு பொகப்பாத்த எனத்தியன் விஷயம்” அவசரமாக முடிப்பதற்காக முற்றத்துக்கே வந்துவிட்டார்.

“இவங்கதான் ஆள்கள். சோதின முடிஞ்சேன்.. ஒங்களோட கதக்கோணுமாம்...” ஸல்மான் நானா அறிமுகப்படுத்தினார்.

“இன்னம் ரெண்டுநாள்தானே.. ஜனவரி மொதத் தெய்தீலீந்து வாங்கொ.. வேறெனத்தின்?”

“சம்பளத்தப் பத்தீம் பேசிக்கொண்டால் நல்லமேன் ஹாஜியார்.”

“சாப்பாடு தேத்தண்ணியோட மாஸம் மூவாயிரம். ஒரு

வருஷம் ஒழுங்கா நின்டு எல்லம் பழகினாப் பொறகு.. இன்ஷா அல்லா ஆளுக்கு ஒம்பதாயிரம் தாரன்..” அடித்துச் சொன்னார் ஹாஜி.

“நாங்க வேண்டிய வேலக்கி ரெடி.. எங்களுக்கு ஏழாயிரம் தாங்கோ.. மத்தப் பெடியன்மாரு வேற கடயளுக்கு அப்பிடிப் பேசிக்கொணுபோறாங்க..” ஒருவன் மிக நிதானமாகச் சொன்னான்.

ஸல்மான் நானா சற்றுமே எதிர்பாராத சங்கதி.

“நான் பேசினா ஒரு பேச்சித்தான். வேல தெரியாதவங்களுக்கு பெரிய சம்பளம் குடுக்கேல. ஆளீக்கி வேண்டியமட்டும்.. எனத்தியன் செல்லிய..”

அடங்கிப் போவார்களென்றுதான் ஹாஜி எதிர்பார்த்தார்.

“அது சரிவாரல்ல.. நாங்க போம்.”

ஸல்மான நானாவுக்கு ஒரு சல்யூட் அடித்துவிட்டுத் திரும்பி நடந்தார்கள்.

ஏழெட்டு வருடகால நடைமுறை ஒரே நொடியில் நொறுங்கிச் சிதைந்தது. இருந்த பொடியன்களும் போய்விட்டார்கள். கடைவேலைகளை எப்படிச் சமாளிப்பதென்று யோசித்தபோது, ஹாஜியின் தலை வெகுவாகக் கிறுகிறுத்தது.

❖

# வருஷக் கத்தம்

குஞ்சுமூஸீன் என்றால்தான் அவரை எல்லோருக்கும் தெரியும். இழக்கவேண்டிய எல்லோரையும் இழந்து, ஒரேயொரு மகளோடு ஒன்றி நிற்பவர். எந்த சுனாமியும் அவர் வாழ்வில் அடித்துவிடவில்லை. ஆனால் முதுமை என்ற பேரலை இருக்கின்றதே அது யாரைத்தான் விட்டுவைத்தது.

இந்த வயதில் அவரைப் பார்த்து ஒரு தத்து வார்த்தம் சொல்லுங்கள் என்றால், எதையும் இழக்கலாம் எவரையும் இழக்கலாம் ஆனால் மனைவியை மாத்திரம் இழந்த விடக்கூடாது என்றுதான் சொல்வார்.

“வாப்பா பதினொரு மணியாகீட்டு கறிக் கெனத்தியாலும் கொணுவந்தா நல்லம்” பகல் சாப்பாட்டுக்கான முன்யோசனையை மகள் எகீனா தெரிவித்தாள்.

“மெய்தான் மகள். எனத்தியன் கொணுவரோணும்?” முகம் சுழித்து என்னதான் பயன். அவரை விட்டால் வேறுயார்தான் அங்கே இருக்கிறார்கள்.

“ஆணத்துக்கு கெலவல்லன் சரி பார சரி எடுத்தா நல்லம். அலகடுவன், பலயனியள் கொணுவர வாணம். செரிச்சூடு.”

“ஆ.. சரிசரி..” அவருடைய அபிப்பிராயத்துக்கு எந்த இடமும் இருக்கவில்லை.

“பருப்பும் முடிஞ்சிபோல. பருப்பில்லாட்டி புள்ளயள் சோத்த வாயிலயாலும் வெக்கியல்ல.”

பத்தடிக்கு மேல் கால் வைத்திருக்க மாட்டார். ஏதோ சொல்வது போலிருந்தால் திரும்பிப் பார்த்தார்.

“தக்காளிக்க பச்சக் கொச்சிக்க கருவேப்பில ஒன்டுமில்ல ஊட்டில”

“ஆ.. ஆ..” என்றபடி வேகவேகமாக நடந்தார். கேற்றைத் தாண்டுவதற்கிடையில் எத்தனை முறை இடைநிறுத்தி விடுவாளோ என்ற எதிர்பார்ப்போடு.

மின்கம்பத்துக்கருகில் நாலைந்து பொம்பிளைகள் வட்டமாக நின்றனர். நடுவிலே மீன்காரனிருப்பான் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. மீன்காரருக்கும் ஆம்பிளைகளென்றால் சற்றே கோபம்தான்.

பெரிய கல்லுமீனொன்றை வெட்டிக்கொண்டிருப்பது கால்களுக்கிடையால் தெரிந்தது. போகிற போக்கில் மீன் பெட்டியை நோட்டம் விட்ட போது மொறல் மீன்குட்டிகள் பளபளத்தன. எகீனாவுக்கு இதெல்லாம் சரிவரும் மீன்களல்ல.

நல்ல மீன்காரன் வருவதற்கிடையில் மற்றைய சாமான்களை வாங்கிக்கொள்வது நல்லதல்லவா? அஸிக்கடைக் கேறினார் குஞ்சு மூஸீன். மகள் சொன்னவற்றை நினைவூட்டி நினைவூட்டி ஒவ்வொன்றாக வாங்கிக் கொண்டார். திடீர் திடீரென அது இல்லை இதுஇல்லை என்றால் அதற்கெல்லாம் அடிக்கொருதரம் அவர்தான் ஓடியோடி வரவேண்டும்.

இன்னொரு சைக்கிள் மீன்காரன் வந்து சேர்ந்தான். அவன் சின்னமீன்காரன். நெத்தலி, சால, காரப்பொடி அதற்குமேல் போனால் கொரமூறுவன், போலன் இத்தியாதிகளே அவனிடமிருக்கும். இருபது முப்பது ரூபாவுக்குக்கூட வாங்கிக் கொள்ளமுடியும். அவனுக்கென்றொரு கூட்டம் சூழ்ந்துவிட்டது.

அதற்கிடையில் பீப்பிப் அடித்துக்கொண்டு நல்லமீன்காரன் வந்துவிட்டான். விலையைப் பற்றிப் பிரச்சினைப்படாத வாடிக்கையாளர்கள் அவனுக்குண்டு.

"ஆ முதலாளீ" என்று தனது அறிமுகத்தை உறுதிப்படுத்திக் கொண்டான்.

கெலவல்லன் ஐநூறுடன் தேவைகள் பூர்த்தியான நிலை குஞ்சுமூஸீனுக்கு.

பன்னிரண்டு மணி வெய்யில் முதுகுப் பக்கத்தை பதம்பார்க்க ஆரம்பித்திருந்தது. அதற்கு சற்று ஈடுகொடுப்பதற்காக ஒழுங்கை வழிக்கு இறங்கினார். சிறிது தூரம்தான் போயிருப்பார்.

"ஆ.. குஞ்சுமூஸீன் நானா வாங்கொவாங்கொ"

வரவேற்பு எதிர்பாராததாக இருந்தது.

"இந்தக் காலத்து மனிசருக்கு இந்த மீன்ட அரும தெரீமா.. தின்னச் செல்வே ரெத்தமூறிய"

அப்பொழுதுதான் சின்னப் பொடியன்களை விலக்கிக்கொண்டு கீழே எட்டிப் பார்த்தார். பாக்குப் பட்டையில் கறுப்பும் வெள்ளையுமாக மின்னமின்ன நாலைந்து விறால்மீன்கள் வைக்கப்பட்டிருந்தன.

"சா"

தன்னை அறியாமலேயே சப்புக்கொட்டிக் கொண்டார் குஞ்சுமூஸீன்.

இப்பொழுதெல்லாம் இந்த மீன்களை பிடிப்பது விற்பதெல்லாம் அபூர்வமாகிவிட்டவிடயம். ஒரு காலத்தில் நெய்னா முகம்மது, அத்துரகீம் காக்கா போன்றவர்கள் இதனை ஜீவனோபாயமாகவே கொண்டிருந்தனர்.

"இன்டக்கி மட்டுந்தான். எனக்கு தின்ன நெனவுவந்த.. தாருக்கட்ட வாங்கவன்.. நானே களப்படிக்கிப் பெய்த்துப் புடிச்ச."

"விறால் தின்ட நாளாலும் நெனவில்ல. ம்.. கண்டா

எடுக்காமீக்கேலுமா”

பாக்கும் பட்டையில் கட்டிக்கொடுத்த விறால் முழங்கையளவு பருமனானது. பார்க்கப் பார்க்க அவரது கண்கள் குளிர்ந்துபோயின. மனைவிக்கு குழந்தை கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேடித் தேடிக் கொண்டுவந்து கொடுத்ததை அவர் இன்னும் மறந்துவிடவில்லை.

குளத்துமீனில் விறால்தான் இராசா. அதற்கென்று தனிச்சுவை. வறுத்த மிளகாயில் இறுக்கமாக ஆக்கியெடுத்தால் இனிச் சொல்லத் தேவையில்லை. அதற்கு அடுத்த ஸ்தானத்தை மண்டாரனுக்குக் கொடுக்கலாம். சுங்கன் கையைக் குத்தினாலும் சப்பும்போது கோழி இறைச்சிதான். காவையன் சட்டியில் கொதிக்கும் போதும் துடிதுடிக்கும்.

குஞ்சு மூஸீன் பொடியன் காலத்தில் ஒருநாள் வழமைபோல் போக்கடிக் கடையில் கதைத் துக்கொண்டிருந்தார்.

“மீன் புடிக்கப் போமா?”

என்ன செய்வதென்று தெரியாமலிருக்கும்போதுதான் அத்தாஸ் இந்த யோசனையைப் போட்டான்.

கமர், ஹஸதுல்லா, யாஸின் எல்லோரும் தயாராகிவிட்டார்கள்.

மாலை மூன்று மணியிருக்கும். கோணிச்சாக்கு, கூடை, சவல் இத்தியாதிகளோடு புறப்பட்டுவிட்டார்கள்.

வயலும் குளமுமாய் இரண்டறக் கலந்து விரிந்துகிடந்த பால்வத்தைப் பகுதி செகத்து மீனுக்கு பெயர்போன இடம்.

சேறும் சகதியுமான சின்னச் சின்னக் குழிகளைக் கண்டுபிடிப்பதில் சிரமம் இருக்கவில்லை. முழங்காலளவுக்கு

அமிழ்ந்துபோய்விடும் அந்தப் பதநிலைதான் காவையன் மீனுக்கு சிம்மசொப்பனம்.

மெல்ல மெல்ல குழியை இறைக்க மீன்கள் துடிதுடித்து நெளிந்தன. இறுக்கிப் பிடித்தாலும் வழுக்கிப் பாய்ந்துவிடும். போதாக்குறைக்கு முதுகுச் செட்டை கூர்கூரானது. பழக்கப்பட்டவர்கள்தான் சரியான கோணத்தில் பிடித்து வெளியே போடுவார்கள்.

“மச்சான் நூறு குட்டியாவது புடிக்காம இவடத்தால போறல்ல சரியா”

“வந்தா வந்த வேல முடியோணும்.. அனம்மனம் பேசப்படாது.”

எல்லோரும் சேறாபிஷேகம் செய்தவர்களாக காரியத்தில் கண்ணாயிருந்தனர். கோணிச்சாக்கு தூக்கமுடியாத அளவுக்கு நிறைந்துவிட்டது.

“போதும் போதும் போம்..”

வரப்புகளுக்கூடாக விஜேமான்ன கிணற்றடிக்கு வந்துவிட்டார்கள். முதலில் பலதடவை மனச் சவர்க்காரம் போட்டு உடலைத் தூய்மைப்படுத்திக் கொண்டனர்.

மீன்கோணிக்கு மாறிமாறித் தண்ணீர் வார்த்து சேற்றுத் தன்மையை போக்கினர். மீன்கள் துடிதுடித்த வண்ணமிருந்தன.

குஞ்சுமூஸீனின் வீட்டில்தான் மீன் ஆக்கும் படலம் நடை பெற்றது. பெண்களின் உதவியோடு இவர்களே எல்லாம் செய்து முடித்தனர். சுடச்சுடப் பாண் பத்து றாத்தல் வந்துசேர்ந்தது. பெரிய முட்டியில் மீன்குழம்பு தாளிதத்துடன் மணம் வீசியது.

புதிதாகச் சில நண்பர்களும் சேர்ந்து கொண்டனர். நல்ல குதூகலம்தான். ஒரே தடவையில் அன்று சாப்பிட்ட அளவுமீன் அதற்கு முன்போ பின்போ அவர்

சாப்பிட்டதேயில்லை. குஞ்சுமூஸீனுக்கு ஆற்றுமீனில் என்றுமே ஒரு பற்றுத்தான்.

"வாப்பக்கு பழய கூட்டாளிமாரியள் அம்புட்டா?"

சுணக்கத்தைச் சுட்டிக்காட்டி மகள் எகீனா கேட்டபோதுதான், தான் இன்னொரு உலகத்தில் சஞ்சரித்து நேரத்தை போக்கிவிட்டேனே யென்று ஆதங்கப்பட்டார் குஞ்சு மூஸீன்.

கொண்டு வந்த கறிகாய், மீன்கள் கைமாறின.

"இதெனத்தியன்?"

பட்டையில் கட்டிய விறால்மீனையும் குப்பென்றடித்த அதன் குமட்டல் மணத்தையும் சகிக்க இயலாமல் அவளது முகம் கலவரமடைந்ததை அவர் கவனிக்கத் தவறவில்லை.

"மிச்சம் காலத்துக்குப் பொறகேன் விறால் மீனக் கண்ட.. யோசின பண்ணாம எடுத்திட்டன் மகள்"

"இங்க தாரனீக்கிய இத ஆக்கியத்துக்கு...! சொணங்கல்லேன் சீக்கிரம் கொணுபெய்த்துக் குடுத்திருங்கொ"

மகளின் வார்த்தைகளால் அவர் மனமுடைந்துபோனார். அவரது அபூர்வ ஆசையை நிறைவு செய்யாமல் விடுவது வேறுவிஷயம். புரிந்துகொள்ளக்கூட இல்லையே.

போய்ச் சேர்ந்த கஷ்டத்தோடு கஷ்டமாய் மீண்டும் மீனைச் சுமந்தபடி திரும்பினார் குஞ்சுமூஸீன். என்ன செய்வதென்று அவருக்குப் புரியவில்லை. திருப்பிக் கொடுக்க அவனை இனியெங்கே தேடுவது!

"எனத்தியனிது விறாலும் கையுமா?" எதிர்ப்பட்ட கையூம் நானா ஆச்சரியப்பட்டு விசாரித்தார்.

"அதுதானே மிச்சம் நாளக்கிப்பொறகுவிறால் குட்டியொன்டு கெடச்ச.. ம்... கைக்கெட்டினது வாய்க்கெட்டடல்ல"

"ஒங்களுக்குத் தேவில்லாட்டித் தாங்கோ.. ரெண்டு கையாலேம் எடுத்துக் கொளுகியன். இந்தக் காலத்தில இப்பிடியொன்டு கெடக்கியத்துக்கு பாக்கியம் செஞ்சீக்கோணும்."

இறால் கைமாறியது. கொடுத்த காசைக் கூட அவர் வேண்டிக்கொள்ளவில்லை.

விடை பெற்றுக் கொண்ட குஞ்சு மூஸீன் தொழுதுவிட்டே போவோமென்ற எண்ணத்தில் பள்ளி வாசல் பக்கமாக நடந்தார்.

* * * * * * *

ளுஹருக்கு இன்னும் நேரமிருந்தது. இரண்டு முறை அலைந்த களைப்பு வேறு. கொஞ்சம் சாய்ந்துகொண்டால் நல்லதுபோல்பட்டது.

பெரிதாக எதையும் இழந்துவிடவில்லை தான். இருந்தும் விறால்மீன் சாப்பிட இயலாமல்போனமை பெரிய மனக்கஷ்டத்தைக் கொடுத்தது அவருக்கு.

அவரது மனைவி மரியம்பீபி மாத்திரம் இன்று இருந்திருந்தால் கைமணம் மாறவே குறைந்தது மூன்று நாளெடுக்கும்.

மீன்ஆணம் தயாரிப்பதில் பெயரெடுத்தவள் அவள். தூரம் தொலைக்குச் செல்பவர்கள், உறவினர் வீடுகளுக்குச் செல்பவர்கள் மீன்தீய்த்துக் கொள்வதென்றால் அந்த வட்டாரத்திலேயே மரியம் பீபியைத் தான் நாடிவருவார்கள். அவளுக்கும் ஆற்று மீனென்றால் அலாதிப் பிரியம்.

சட்டிக் கணக்கில் சமைத்துக்கொண்டு, இருவரும் பாய்விரித்தமர்ந்து மணிக்கணக்கில் ருசித்து ருசித்துச் சாப்பிடுவார்கள்.

"நெய்னா மகமது நீ மீன்புடிச்சிக் கொணுவந்தா எங்களுக்கு ஒரு கோர்வ கட்டாயம் தரோணும்."

இப்படி நிரந்தர வாடிக்கையாளராகத் தன்னைப் பதிவு செய்துகொண்டவள் மரியம்பீபி.

அந்நாட்களில் கொறகா, வடுபுளி, சரக்கு சாமான்களெல்லாம் சற்றும் குறைவில்லாமல் கொண்டுவந்து கொட்டுவார் குஞ்சு மூஸீன்.

குறைபாட்டோடு மீன்குழம்பு செய்து தனது மதிப்பெண்ணைக் குறைத்துக்கொள்ள மரியம்பீபி என்றுமே விரும்பியது கிடையாது.

அவர்களது மகன் கண்டிக்கு வேலைக்குப் போன நாட்களில் இரண்டொரு மாதத்துக்கு மேல் வாடகை கொடுத்திருக்கமாட்டான். அதை ஈடுசெய்ய போகும்போதெல்லாம் விதம்விதமாக மீன்சமைத்துப் பதப்படுத்திக் கொண்டுபோவது வழக்கம்.

"இப்படி மீனாக்கிய ஒங்கட உம்மவ பாக்க ஆசயாயீக்கி மகன்"

வீட்டுக்காரர்கள் அடிக்கடி இப்படிச் சொல்லிவிடுவார்கள். அது கடைசிவரை நிறைவேறாதது வேறு விடயம்.

அப்படி மகன்வந்து சொல்லும்போதெல்லாம் மரியம் பீபிக்கு பெருமைபெருமையாகவரும்.

சாய்ந்துகொண்டிருந்த குஞ்சுமூஸின் பாங்குச் சத்தம் கேட்டு, காவையன் மீன்போல் துடித்துக்கொண்டெழுந்தார்.

* * * * * * *

“நல்ல காலம் நெனவுவந்த வாப்பா. கையூம் நான வருஷத் கத்தத்துக்கு சொல்லீட்டுப் போன. இப்ப ராவக்கி.

மஃரிபு தொழுதுவிட்டு ஸிக்ரு செய்துகொண்டிருந்த குஞ்சு மூஸீனுக்கு மகளது அறிவிப்பு எதிர்பாராததுதான்.

கையூம் நானா அவரது சமகால சகபாடி. இரவு என்று சாக்குப் போக்கு எதுவும் சொல்லமுடியாத அளவுக்கு நெருக்கம். புறப்பட்டுவிட்டார்.

“சொணங்காம வாங்கொ. இன்னேம் மச்சன் வரேமில்ல”

“சரி மகள்”

எதற்கும் ரோச்லைட்டையும் கையிலெடுத்துக்கொண்டார்.

வயது மூத்த தம்பதியாக இருவரும் வாழ்ந்து கொண்டிருக்கும்போது, வருஷக் கத்தம் யாருடையதென்று தான் தெரியவில்லை.

“சே.. வருஷக் கத்த நாளப் பாத்து விறால் மீனச் குடுத்திட்டனே... அவரும் மனச நோவிக்காம எடுத்துக்கொணுபெய்த்தாரு” ஒரு மெல்லிய சோகம் அவர் மனதில் இழையோடியது.

தான் பெறாத இன்பத்தை தனது நண்பனாவது பெறட்டுமென்றுதானே கொடுத்தார். அவர் யாருக்குத் தான் கொடுத்து விட்டாரோ தெரியவில்லை.

“வாங்கொ வாங்கொ மூஸீன் நானா”

வரவேற்பு பிரமாதமாகவிருந்தது.

முற்றத்துக்கு ஏறிய குஞ்சு மூஸீன் நானாவுக்கு ஆச்சரியமாகவிருந்தது. அங்கு எந்தத் தடல்புடலையும் காணவில்லை. வெளிச்சம்கூடப் பெரிதாகப் பரவவில்லை.

“எனத்தியன் லெப்ப .. மோதீன் இன்னேம் வரல்லியா?” விளக்கத்துக்காகக் கேட்டுவைத்தார்.

“கத்த மொன்டு ஓதிப்போட லெப்ப மோதீன் வரோணுமா.. எங்களுக்கே ஒதேலும்தானே” கையூம் நானாவின் பேச்சு வித்தியாசமாக இருந்தது.

“அதும் மெய்தான்..” குஞ்சு மூஸீன் சமாளித்தாலும் ஒன்றும் தெளிவாகவில்லை.

“சரி சரி வாங்குள்ளுக்கு. இரீங்கோ”

மூடியிருந்த பேப்பர் தாள்களை எடுத்த போது சாப்பாட்டு வகையறாக்கள் பாயிலே பரத்தப்பட்டிருந்தன.

இருவரும் அமர்ந்து கொண்டனர்.

சுள்ளென்று மூக்கைத் துளைத்த விறால்மீன் குழம்பு மணம் அவரைத் திக்குமுக்காட வைத்தது.

“மரியம் பீபியப்போல எனக்காக்கத் தெரிய. தின்டு பாத்திட்டுச் செல்லுங்கொ” என்றவாறு நோனஸமீனா தண்ணீர்க் கோப்பையைக் கொண்டுவந்து வைத்தாள்.

“விறாள்மீன் தின்ன நீங்க ஆசப்பட்டத்துக்கு ஓங்கட மகளுக்கு அதெல்லாம் கரச்சலேன்.. இந்தக் காலத்துப் புள்ளயளுக்கு அதுபோல உப்புப்புளியா ஆக்கேம் தெரிய.. அதுதான் மூனாம் கத்தமென்டு சும்ம செல்லீட்டுவந்த.. சரி சரி ரெண்டு பேரும் சேந்து ஒரு புடிபுடிக்கோமே...”

“பிஸ்மில்லா” என்றவாறு விறால் மீன் துண்டொன்றைப் பெயர்த்து வாயிலே போட்டார் குஞ்சுமூஸின்.

❖

# தீர்வு

“எனக்கு தலக்குத்து. சோறு தின்னேல” என்று சொல்லிவிட்டு பகல் படுத்தவள் ம∴ரிபுக்கு பாங்கு சொன்ன பின்பும் எழுந்திருக்கவில்லை.

மகளின் நெற்றியில் கைவைத்துப் பார்த்த பாத்திமுத்துவுக்கு வித்தியாசமெதுவும் புலப்படவில்லை. ஆயினும் முகம் என்னவோ கறுத்துக் கவிழ்ந்துபோய்கிடந்தது.

“ஒழும்பு புள்ள புட்டுச் சுட்டீக்கி.. ராவக்காலும் ரெண்டுமணியத் தின்டிட்டுப் படே”

“எனக்குவாண நான் தின்னியல்ல” சடக்கென்று மறுபக்கம் புரண்டு படுத்துக் கொண்டாள்.. ∴பர்ஹா.

இது தலைவலியல்ல, எதிர்ப்பியக்கம் நடத்து கிறாளென்பது பாத்திமுத்துவுக்கு உறுதியாகிவிட்டது.

“அடியேய் ஓண்ட நலவுக்குத்தான் நாங்கெல்லாம் செய்த”

காம்பராவிலிருந்து வெளிச்சென்ற பாத்தி முத்து மிகவும் துக்கித்துப் போனாள். ஒரே மகளின் வாழ்க்கையை மேம்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள் அறுந்துபோய் விட்டதை தலநஸீபில் சேர்ப்பதைத் தவிர வேறென்ன செய்யஇயலும்!

கடந்த இரண்டு நாட்களாக ∴பர்ஹாவின் கணவன் வீட்டுக்கு வரவில்லை. இந்தக் கொடுமையை இன்னும் நீடிக்கவிடக்கூடாதென்றுதான் இப்படிப் போராட்டத்தில் குதித்து விட்டாள் அவள்.

ஆக மூன்றே மூன்றுமாத வாழ்க்கைதான். அதற்கிடையில் இப்படியொரு பிரிவு வந்துவிட்டபோதும் உண்மையில் அவர்களுக்கிடையே எந்தக்

கோபதாபமுமில்லை என்பதுதான் மிகப் பெரிய உண்மை.

"நீங்க ஒங்கடுட்டில நில்லுங்கொ.. ஃபர்ஹா நான் எங்கடுட்டில நிக்கியன்."

இப்படித்தான், கண்ணீர் மல்கநின்ற அவளின் தலைதடவி அவர் அன்பாகத் சொல்லி விடைபெற்றார்.

இந்த இளம் தம்பதியின் மொத்தவயதே நாற்பதுக்குமேல் போகவில்லை.

திருமணப் பேச்சு ஆரம்பித்தபோதே ஃபர்ஹா கூனிக்குறுகிப் போனாள். வெட்கம் அவளைப் பிடுங்கித்தின்றது. இன்னுமொரு ஏழெட்டு வருடத்துக்குமேல் நடக்கவேண்டிய காரியமென்றே கருதினாள். அவளது சின்ன உடல் அதற்கெல்லாம் தயார்தானா என்பதைக்கூட அவளால் ஊர்ஜிதப்படுத்த இயலவில்லை.

"மாப்புள சின்னப் பொடியனொன்டாம்"

இப்படி யார்யாரோ சொல்லக் கேட்ட போது, 'சீனிப் புள்ளக் கலியாணமா உம்மாங்க செய்யப்போற' என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டாள்.

பேச்சுவார்த்தை.

ஃபாத்திஹா.

கல்யாணம்.

எல்லாம் ஒழுங்காக நடந்தேறின. 'மாப்பிள மச்சான' பார்த்துக்கொள்வதைத் தவிர அவளுக்கு வேறெந்த ஆர்வமுமிருக்கவில்லை.

அதே ஊர் மாப்பிள்ளையென்றாலும் எப்பொழுதாவது கண்டஞாபகம் எதுவும் அவளுக்கிருக்கவில்லை. தாடி, மீசைகூட இன்னும் அடர்த்தியாக முளைத்திருக்கவில்லை. பளிச்சென்ற தெளிவான முகம் 'ஜாதிஜோடு' என்பதே

பரவலான அபிப்பிராயம்.

பத்துவருடப் பாடசாலை வாழ்க்கையை முடித்துக்கொண்டு வீட்டோடு அடங்கிப்போனவள் ஃபர்ஹா.

மாலைவேளையில் அயல் வீடுகளில் கதைக்துக் களைப்பதைத் தவிர, வேறெந்தப் பராக்கும் அவளுக்கில்லை. ரேடியோவில் பாட்டுக்கள் நாடகங்களென்று கொஞ்சம் பரிச்சயம். அவ்வப்போது பெரியம்மா வீட்டுக்குப்போய் ரீவீ பார்ப்பதுண்டு.

திருமண இரவில் "ஃபர்ஹா" என்ற முதல் வார்த்தையைக் கேட்டு அவள் கண்ணிமிர்ந்து பார்த்தாள்.

அர்த்தமும் குறும்பும் நிறைந்த அந்தச் சிரிப்பு வாழ்வில் என்றுமே அவளால் மறக்கமுடியாதது. அவரது தொடுகையும் அரவணைப்பும் அவளை எங்கெங்கோ புதுப்புது உலகங்களுக்கு அழைத்துச் சென்றது. ஒவ்வொரு நொடியும் அவர் தன் அருகிலேயே இருக்கவேண்டுமென்று ஆராதித்தாள்.

காலையில் எழுந்துகுளித்து அத்தர் பூசிப்கொண்டு வெளியே போனாரென்றால் ளுஹருக்கு வருவார். சாப்பிட்டுவிட்டு கொஞ்சநேரம் ஒரு குட்டித்தூக்கம். கோப்பி பருகிவிட்டுப் போனால் இஷாவுக்குப் பின்பு வருவார். இந்த நேரசூசி கிரமமாக ஓடிக்கொண்டிருந்தது.

அன்று அவர் குளித்துவிட்டு வருவதற்கிடையில் கடகடவென முட்டைக் கோப்பி அடித்துக் கொண்டிருந்தாள் ஃபர்ஹா.

"ஆ.. நல்லா அடிச்சடிச்சிக் குடு.. ஹராமாயீக்கும் எப்பசரி பத்துமுட்டய.. கோப்பியொரு கிலோவ கொணுவந்து தந்தீக்கா" பாத்திமுத்து மகளைப் பார்த்து இப்படிச் கொதித்தாள்.

“எனத்தியன் எனத்தியன்” என்றபடி ஓடிவந்தார் அம்ஜத் நானா.

“இல்ல ஓங்கட மருமகனப் பத்திச் சென்ன”

“வாயப் பேணுங்கொ” என்ற கடுமையாகச் சொன்னார் வாப்பா.

அவள் கோபத்தோடு காம்பராவுக்கு வந்தாள். அந்த அதிர்விலிருந்து அவள் விடுபடவில்லை.

இரண்டுநாள்தான் நகர்ந்திருக்கும்.

“எனத்தியனும்மா எந்தநாளும் எறச்சி. மீன் கொணுவரச் செல்லி வாப்பக்கு செல்லுங்கொளே”

“ஓன்ட மாப்பிளக்கிச் செல்லு.. சும்ம தின்டுதின்டு படுத்து வேலில்ல.. மத்த ஊடுவாசல்ல மருமகனியள் கறிசாமான் மீனெறச்சென்டு கொணந்து கொணந்து கொட்டிய.. கொஞ்சம் கண்ணத் தொறந்து பாரு”

“எனத்தியன் எனத்தியன்?” அம்ஜத் நானா வந்து தலையைப் போட்டார்.

“ஓ நீங்களும் மருமகன்ட ஜாதியள் மூடிமூடி வெச்சிக் கோங்கொ.. வாயத் தொறந்து பேசினாத்தானே வெளிசாகிய”

“ஸபூர் செய்ங்கொ. வாயப் பேணிக் கோங்கொ.”

அவள் கோபத்தோடு காம்பராவுக்குள் புகுந்தாள். தாறுமாறான அதிர்வுகள் அவளது மூளையைக் குழப்பிவிட்டது. தனது கணவனைப் பற்றித் தரக்குறைவான மதிப்பீட்டுக்கு உம்மாவும் வாப்பாவும் வந்துகொண்டிருப்பதை அவளால் சகிக்க இயலவில்லை.

இரண்டுநாள்தான் கழிந்திருக்கும்.

“அடி எனத்தியன் ஓன்ட மாப்பிள செய்த தொழில்?”

இது உம்மாவின் அதட்டலான கேள்வி.

"எனேத்தெரியா" உண்மையில் அவளுக்கு அதுவொரு பிரச்சியையாகவே படவில்லை.

"தொழில் செய்யாம காலம் பொகேலுமாடீ?"

"நீங்க அதெல்லாம் பார்த்துதானே கலியாணம் பேசீக்கும்"

"ஓ... அந்த டைமில சென்னது ஒரு ஜாதி.. இப்ப நடக்கிய வேறஜாதி.. இன்டக்கி பொஞ்சாதி.. நாளக்கிபுள்ளகுட்டி.. குடும்பக் காரனானாப் பொறகு உம்மட முந்தானேக்குள்ள பூந்துக்கொண்டீக்கேலுமா?.. இந்தக் கூத்தியள் எனக்குச் சரிவாரல்ல. அன்ன செல்லீட்ட"

யார் என்னதான் சொன்னாலும் ஃபர்ஹாவால் இந்த எதையுமே உள்வாங்க முடியவில்லை. அவர் ஆயிரமாயிரம் கொண்டுவந்து கொட்டாதது உண்மைதான். ஆனால் கைப்பிடி அளவுக்காவது எதுவும் கொண்டுவராமலிருந்ததுமில்லை.

என்னதானிருந்தாலும் அவரது அன்பும் அரவணைப்பும் நெருக்கமும் அவளுக்கு மிகமிகத் தேவையாக விருந்தது. அதை அவள் இழக்கவிரும்பவில்லை. புதுமையையும் புத்தெழுச்சியையும் வழங்கிநிற்கும் அந்த உறவை ஆயிரம் காலத்துப் பயிராக தனக்குள் வேர்பாயவைத்துவிட்டாள்.

பல்வேறு மட்டங்களில் குசுகுசுப்பு தொடர்ந்தது. உம்மாவின் இந்த குசுகுசு மந்திரம் குடும்ப வட்டாரத்தையே உசுப்பிவிட்டிருந்தது. அதன் விளைவான உச்சி மாநாடு அன்று வீட்டுமண்டபத்தில் நடைபெற்றது. பெரியப்பா, பெரியம்மா, சின்னமாமா போன்றோர் முக்கிய பிரதிநிதிகளாய் கலந்துகொண்டனர். யார் பேசுகிறார்களென்பதையல்ல என்ன பேசிகிறார்களென்பதையே அவளது செவிகள் பதிவு செய்தன.

“தொழில் செஞ்சி பழக்கமில்ல. இனிச் செய்யப் போறேமில்ல. குடுத்த சல்லிய கொஞ்சம் கொஞ்சமா முடிச்சிட்டு.. அங்கீந்து காது கழத்துக்கு எறங்கியொன்டு”

“ஒரு கூலிக்கடேல நின்டாலும் இருநூறு முன்னூறு கெடக்கிய.. அதுபோதும் வேண்டிய மட்டும்.. எத்தினயோ பெடனுக்க செல்லிச் செல்லிப் பாத்த ஒன்டும் சரிவாரல்ல.”

“எங்கட ஊட்டு எலுஹமானத்துக்காலும் அடிவெக்க வாணான்டு நான் செல்லீட்டன்.. கடசீல மாப்பிளேமில்ல குடுத்த சல்லி சாமனும் இல்லாப்போற.. அவளொன்டும் கெழவியாப் பொகல்ல.. நல்லோரு மாப்பிளக்கி ஜாதியாக் குடுக்கேலும்”

செய்தி உரிய இடங்களுக்கு உடனுக்குடன் பறந்தது. காதியாரையும் போய்ச் சந்திப்பதென்று தீர்மான மெடுத்திருந்தார்கள்.

ஃபர்ஹாவிடம் எதுவும் கேட்காமல் திருமணத்துக்கு முடிவெடுத்ததுபோல், அவளுடன் எதுவும் கதைக்காமலே அதை விடுவிப்பதற்கான முயற்சியிலும் இறங்கியிருந்தார்கள்.

“மகேள் ஒழும்பித் தின்டிட்டுப் படுங்கொ” இது வாப்பாவின் குரல்.

வாப்பாவின் வேண்டுதலுக்கு மரியாதை கொடுத்து எழுந்தமர்ந்தாள். உண்ணாமல் பருகாமல் பன்னிரண்டு மணி நேரத்துக்குமேல் படுத்திருந்ததால் சோர்ந்து பலவீனமுற்றிருந்தாள்.

கஷ்டப்பட்டு இரண்டுதுண்டு பிட்டு சாப்பிட்டாள். தனித்துச் சாப்பிடுவது இப்பொழுது அவளுக்கு கஷ்டமாகவே இருந்தது. கணவர் எங்கே என்ன செய்கிறார்? சாப்பிட்டாரா இல்லையா? என்றெல்லாம் யோசிக்கும்போது அவளது தொண்டை அடைத்துக்கொண்டது.

மீண்டும் முகம் அலம்பிக்கொண்டு படுக்கைக்கு வந்தாள். உடைமாற்றிக் கொண்டாள். கட்டில் தனிமை அவளை வாட்டியது.

இரவு வளர்ந்து சென்றது.

தூக்கம் வரவில்லை அவளுக்கு. தலையணைகளோடு போராடினாள். அவரது நினைவு எல்லாக் கோணங்களிலும் அவளை அலைக்கழித்தது. இதமான தொடுகை.. இங்கிதமான முத்தம்.. அந்த அரவணைப்பு.. இனிக் கிட்டாமலேயே போய்விடுமா? அதுகூடப் பரவாயில்லை. அந்த இடத்தில் இன்னொருவன்.. அவளால் நினைக்கக்கூட முடியவில்லை.

சுபஹ் தொழுதுவிட்டு வாப்பா மாத்தறைக்குப் புறப்பட்டுச் சென்றார். உம்மா கிணற்றடியில் பிடவை கழுவிக் கொண்டிருந்ததையும் ஃபர்ஹா அவதானித்தாள்.

ஃபர்ஹாவின் மாப்பிள்ளையின் உம்மா தைரியமான பொம்பிளை. மகனுக்கு பத்து வயதிலேயே கணவன் அகால மரணமடைந்தார். தாய்வழி வீட்டில் ஒருபக்கம் அவளும் மகனும் மறுபக்கம் தங்கை குடும்பமும் வாழ்ந்துவருகின்றனர்.

எடுபிடி வேலைகளில் கைதேர்ந்தவள். வசதியான வீடுகளே வாலாயமாய் போய்விட்ட நிலை. சாப்பாட்டுக்கோ கைச்செலவுக்கோ பஞ்சமிருக்கவில்லை. ஒரே மகனை 'தொழில் தொரவென்று' ஊருக்கு வெளியே அனுப்ப அவள் துளிகூட விரும்பவில்லை. இந்த நிலையில்தான் திருமணம் நடந்தேறியது. சம்பந்தி வீட்டார் மகனைச் செல்லமாகச் பாக்கவேண்டுமென்பதுதான் அவளது ஒரே எதிர்பார்ப்பு.

குளித்துவிட்டு வந்த பாத்திமுத்து இடியப்பம் அவித்து காலைச் சாப்பாட்டை ஒழுங்குபடுத்தினாள். எட்டுமணி நகர்ந்தும் எழும்பாத மகளைப் பார்க்க காம்பராவுக்குள்

சென்றபோது அவளுக்கு துக்கிவாரிப்போட்டது.

சுற்றுப்புற வீடுகளிலும் தேடிக்களைத்துப்போய்விட்டாள்.

“ஃபர்ஹாவக் காணல்ல தாத்தா..” என்றவாறு தாத்தா வீட்டுக்கு ஓடினாள்.

“அப்ப மாப்பிளுட்டுக்கு பெய்த்தோ தெரிய” சந்தேகத்துக்கு வலுவூட்டினாள்.

இனிப் பார்த்துப் பார்த்து இருக்க முடியுமா என்ன?

தாத்தாவும் தங்கச்சியும் உடுத்த உடுப்போடு வெளிக்கிட்டனர். அவர்களது அவசரத்துக்கு ஆட்டா ஒன்றுகூட கண்ணில் படவில்லை. அவள் உண்மையில் அங்குதான் போயிருந்தால் குடும்பரீதியாக எடுத்த முடிவில் இடிவிழுந்து போல்தான்.

வெலிஹிடி, பள்ளியடி, மரக்கவளவென்று நடை நீண்டுகொண்டிருந்தது. தனியே எங்கும் போய்ப் பழக்கமில்லாத ஃபர்ஹா இவ்வளவு தூரத்தைக் கடந்துவந்திருப்பாலா வென்று அவர்களால் நம்பவும் முடியவில்லை.

மேல்மூச்சி கீழ் மூச்சோடு வந்துசேர்ந்துவிட்டார்கள். சுற்றுப்புற வீட்டவர்கள் பார்த்த பார்வை.. சிலதுகள் ஓடியோடித் தகவல் கொடுத்ததையெல்லாம் பார்க்கும்போது மகளை வெளியே இழுத்தெடுத்து செம்மையாக முதுகில் சாத்த வேண்டும் போலிருந்தது பாத்திமுத்துவுக்கு.

“எங்கியனிவள்... எறங்குடீ வெட்டக்கி... வெக்கம் கெட்டவள்.. மாப்புளப் பெய்த்தியம் புடிச்சிக் கொணுவந்தா.. நல்ல பொறுமதியான .. சம்பரிச்சிக் கொட்டிய மாப்பிள யொன்டேன் தேடிக்கொண்டு வாரத்துக்கு....”

பாத்திமுத்துவின் சத்தத்துக்கு பயந்து, மகள் ஓடிவந்து

காலடியில் விழுந்துவிடவாளென்றுதான் எதிர்பார்த்தாள்.

இதற்கிடையில் வீடுகளுக்குள் அடைந்து கிடந்தவர்கள் ஓடோடிவந்து வேடிக்கை பார்க்கக்கூடிவிட்டனர்.

ஃபர்ஹா வந்து எட்டிப் பார்த்தாள். பக்கத்துணையாக மாமியும்...

"ஏன்ட மாப்பிளூட்டுக்கு நான் வந்தீக்கி. நான் ஒங்களோட வாரல்ல.." இப்படிச் சொல்லி விட்டு படாரென்று முன்கதவை அடித்துவிட்டு உள்ளே போய் விட்டாள் அவள்.

பாத்திமுத்து வாயடைத்துப்போனாள்.

தாத்தாவும் தங்கையும் வந்தவழியே திரும்பி நடக்கத் தொடங்கினர்.

❖

# முற்றத்து மல்லிகை

ஊர் இப்பொழுது நாலா பக்கமும் பரந்து விரிந்து ஆங்காங்கே நான்கு குட்டிப் பள்ளிவாசல்கள் தோன்றிவிட்டபோதும், எந்தக் குறையுமின்றி முஹியித்தீன் ஜும்மாப் பள்ளிவாசல் அதே கம்பீரத்தோடு தலைநிமிர்ந்து நின்றது.

கடந்த முப்பது வருடங்களாக பேஷ்இமாமாகக் கடமையாற்றிய ஷாபிது மௌலவி சுகவீனம் காரணமாக ஒதுங்குவதை முன்னிட்டு, புதிதாக ஒருவரை நியமிப்பதற்காக பத்திரிகை மூலம் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

ரம்ஸான் மௌலவி அதே ஊரவர். மிகுந்த எதிர்பார்ப்போடு விண்ணப்பித்திருந்தார். அவர் எதிர்பாராதவிதமாக முப்பதுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. அதிகமானவர்கள் அயலூரவர்கள். அனுராதபுரம், பொலன்னறுவைப் பகுதியிலிருந்தும் இரண்டொருவர் விண்ணப்பிக்கத் தயங்கவில்லை.

நேர்முகப் பரீட்சகர்களாக மத்திச்சம்மார் அரைவட்டமாக அமர்ந்திருந்தனர். கலகலப்பாகவும் மகிழ்ச்சியான மனோநிலையிலும் காணப்பட்டனர்.

ரம்ஸான் மௌலவியை ஸலாம் சொல்லி வர வேற்று அமரச் செய்தனர். ஊரவர், அறிமுகமானவர், தங்களுக்கு வேண்டிய ஒருவரின் மகன் என்பதனால்தான் போலும் சகலரது முகத்திலும் புன்னகை பூத்திருந்தது.

பல கேள்விகளைக் கேட்டார்கள். சான்றிதழ்களைப் பார்த்தார்கள்.

"ஊரு மனிசன்தானே.. மிச்சம் சம்பளம் குடுக்கத்தேவில்ல"

உவைஸ் ஹாஜி பகிடியாகச் சொன்னதை ரம்ஸான் மௌலவி சிரித்து வரவேற்றார்.

"சரி அறிவிக்கியோம்" நடுநாயகமாக அமர்ந்திருந்த அத்துரஹ்மான் ஹாஜி சொன்னார்.

ரம்ஸான் மௌலவி விடை பெற்றுக் கொண்டார். வரும் போதிருந்த நம்பிக்கை அப்படியே கருகிப்போய் விட்டது. ஒருவேளை ஊரவர்களைச் சேர்த்துக் கொள்வதில்லை யென்ற தீர்மானமெதுவும் வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

கிதாபு, ஹிஃபுழு இரண்டும் முடித்த சிலரும் அங்கே வருகைதந்திருந்தமையை கலந்து பேசிய வகையில் ரம்ஸான் மௌலவி அறிந்துவைத்துக் கொண்டார். அந்த வகையில் தனக்கு சந்தர்ப்பம் கிட்டாதோவென்று அச்சப்பட்டார்.

காலம் ஓடிக்கொண்டிருந்தது.

ரம்ஸான் மௌலவிக்கு எல்லாமே போதும் போதுமென்றாகிவிட்டது. மௌலவிப் பட்டமளிப்போடு மதரஸாவிலிருந்து வெளியேறி அப்படியும் இப்படியுமாக ஒரு வருடம் கடந்துவிட்டது. அத்தர் கமகமக்க அதே ஸுரத்தோடு திரிவதில் எந்தக் குறைச்சலுமில்லை. ஜமாஅத்தினரின் மரியாதை அந்தமாதிரி.

விசேட பயான்களுக்கு அழைத்தார்கள். மீலாத் விழாக்களில் முதலிடம் கொடுத்தார்கள். பொதுவைப்பவங்களில் முதல்வரிசையில் இடம்பிடித்தார்.

என்னதானிருந்தாலும் இன்னும் எந்தப் பள்ளிவாசலிலும் அவருக்கு இடம் கிடைக்கவில்லை. இத்தோடு எட்டுப் பள்ளி தைக்காக்களுக்கு ஏறி இறங்கிவிட்டார்.

"எனத்தியன் மகன் நடந்த?"

வீட்டுக்கு ஏறும்போதே வாப்பாவின் கேள்வியும் எதிர்பார்ப்புடன்கூடிய உம்மாவின் முகமும் அவரை வர வேற்றன.

"முப்பதுபேருமட்டு வந்தீக்கி.. எனக்கென்டா நம்பிக்கில்ல" தனது அபிப்பிராயத்தை அப்படியே முன்வைத்தார் மௌலவி.

"சரி சரி அல்லா நாடீந்தா நடக்கும். பெய்த்துச் சோத்தத் தின்னுங்கொ மகன்" மகனைச் சமாளித்து உள்ளே அனுப்பிவிட்டாள் ஆபிதா.

சாப்பாட்டு மேசையில் அமர்ந்த ரம்ஸான் மௌலவிக்கு பசிக்கவேயில்லை. என்றாலும் பேருக்குச் சாப்பிட வெண்டியிருந்தது.

பார்க்குமிடமெல்லாம் மௌலவிமாரும் ஊர் ஊராக.. இயக்க, தரீக்கா ரீதியாக மத்ரஸாக்களும் மலிந்து விட்ட நிலையில், மௌலவிமார்களெல்லாம் பள்ளிவாசலில்தான் தொழில் பார்க்கவேண்டுமென்ற மாயையிலிருந்து விடுபடுவது காலத்தின் தேவையாகப்பட்டது மௌலவிக்கு.

முன்வாசலில் குசுகுசுப்பில் ஆரம்பித்த உம்மா வாப்பாவின் குரலின் ஸ்தாயி வரவர உயர்ந்துகொண்டு செல்வது அவர்களுக்கே விளங்கியிருக்காதுதான்.

* * * * * * *

அன்றைய ஜும்ஆ பிரசங்கத்தின்போதுதான் புதிதாக நியமிக்கப்பட்டிருந்த பேஷ்இமாம் எல்லோருக்கும் அறிமுகமானார். மௌலவி மட்டுமல்ல ஹா∴பிஸுூம் கூட என்ற தகவல்கூடவே பரவிக்கொண்டிருந்தது.

ஊர்ஜெம்மி என்ன வகையில் தன்னை மதிக்காத கோபம் ஒரு பக்கம், தன்னைவிடத் தரம்கூடியவர் என்ற காழ்ப்புணர்ச்சி இன்னொரு பக்கம்.. இப்படி எல்லாம் சேர்ந்து ரம்ஸான் மௌலவியை அரித்துக்கொண்டிருந்தது.

“சி.. அத்துரமான் ஹாஜிக்கிட்ட மகனப்பத்தி நான் சென்ன. ஆள் போட்டும் சென்ன.. இப்பிடி மோசமான மனிசனென்டு நானென்டா மனாவிலயாலும் நெனக்கல்ல ஆபிதா” ஜு்ம்ஆ தொழுதுவிட்டு வந்ததும் வராததுமாக அத்துவாஹிது நானா தனது ஆத்திரத்தைக் கொட்டினார்.

வெளியே எறித்த வெய்யிலைவிட அந்த வார்த்தைகளின் காங்கை உச்சத்திலிருந்தது.

ஆபிதா ஃபேனை நன்றாக முடுக்கிவிட்டாள்.

“காலம் நேரம் பாக்காம.. ஊடு வாசல்ல நிக்காமா ஹாஜிமாரட பின்னால திரிஞ்சது வெளங்கினா இப்ப.. அவங்கட வேலவெட்டிக்கி ஒங்கள வெச்சிக்கொண்டீந்த.. சொரசொரென்டு ஏழு வரிஷம் ஓதீட்டு வந்த புள்ளய கணக்கெடுக்கல்லேன்” எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பதுபோல் அவளும் ஆவேஷத்தைக் கக்கினாள்.

ரம்ஸான் மௌலவி நாளும் பொழுதும் அவமானத்தின் சின்னமாக மாறிக்கொண்டிருந்தார். நான்கு சுவர்களோ கட்டில் மெத்தையோ அவருக்கு ஆறுதலைக் கொடுக்கவில்லை.

அத்துவாஹிது நானா பெரும் வசதி வாய்க்கப்பெற்றவரல்ல. நடுத்தர வயதிலேயே அவருக்கு ஏற்பட்ட ஒருவித ஆன்மீக நாட்டம் அவரது வாழ்க்கைப் போக்கையே மாற்றிவிட்டது.

அதிக நேரத்தை பள்ளிவாசலிலே கழித்தார். ஜமாஅத் வேலைகளில் ஈடுபட்டார். ஊர் ஊராகத் திரிந்தார். அதில் ஈடுபடும் வசதிமான்களின் நிழலாக இயங்கினார். சிலபோது அவர்களின் 'உதவி ஒத்தாசையையும் பெற்றார். அனுதாபத்தின்பேரில் அளிக்கப்படும் உதவிகளுக்கெல்லாம்

அல்லாஹ்வின் நேரடி உதவியென்று வியாக்கியானம் செய்தார்.

இந்த மனோநிலையில்தான் ஒருநாள் "ஸ்கூல் படிப்பால வேலில்ல. எல்லம் துணியாப் படிப்பு. மகன நான் மத்ரஸாக்கு உடப்போற" என்று செயலில் இறங்கிவிட்டார்.

உற்றார் உறவினர், அதிபர், ஆசிரியர் சொன்ன எதனையும் அத்துவாஹிது நானா காதில் போட்டுக்கொள்ளவில்லை.

பத்தாம் தரத்தில் படித்துக்கொண்டிருந்த ரம்ஸான் தந்தை சொல் மந்திர மென்று எதுவும் பேசப்பயந்து வாப்பாவின் பின்னால் போய்விட்டான்.

வகுப்பில் நான்காம் ஐந்தாம் பிள்ளையாக வந்துகொண்டிருந்தவன் அவன். தன்னோடு படித்தவர்களை சற்றே நினைவூட்டிப் பார்த்தான்.

ஜுனைது, கஸ்ஸாலி, சம்ரினா மூன்றுபேரும் பல்கலைக் கழகம் போய்வந்து பட்டதாரி ஆசிரியர்களாக படிப்பித்துக் கொண்டிருந்தார்கள். ராஜிதும் ஃபர்ஸானாவும் கல்விக் கல்லூரி முடித்து ஆசிரிய நியமனம் பெற்றிருந்தார்கள். தரம் ஒன்பதில் படித்த நிஸ்மினாகூட ஆங்கில ஆசிரியர் நியமனம் பெற்றிருந்தாள்.

நேற்றுக் கிடைத்த தகவலின்படி மௌலவி ஆசிரியர் நியமனம் வழங்கப் போவதாகவும் அதற்கும் ஏஎல் சித்தியடைந்திருக்கவேண்டுமென்றும் தெரியவந்தது. குறைந்த பட்சம் ஓஎல் எழுதிவிட்டென்றாலும் ஓதப்போயிருக்கலாமே யென்று ரம்ஸான் மௌலவி இப்பொழுது கவலைப்பட்டு என்னதான் பயன்?

"இதுக்குப் பொறகு நான் பள்ளியள நம்பி நிக்கியல்ல.. நான் எனத்தசரி தொழில் செய்யோணும்.. ஓதினென்டு வேற

தொழில் செய்யவானான்டு அல்லா செல்லில்ல”

வாஹிது நானா அதற்கு எதிர்வாதம் செய்யாமல் வாயடைத்து நின்றார். அவரது யோசனை வேறுபக்கமாகச் சுழல ஆரம்பித்திருந்தது.

* * * * * * *

அத்துவாஹிது, ஆபிதா தம்பதியின் முகத்தில் வெள்ளிநிலா பூத்திருந்தது.

காதர் காக்கா காதில் போட்ட செய்திதான்.

“உனைஸ் ஹாஜி மகளுக்கு நல்லோரு மாப்பிள பாக்கச் செல்லீட்டாரு... ம்.. ஓங்கட மகன்ட விஷயத்தப் போடவா?”

இது காதர் காக்காவின் தனிப்பட்ட யோசனையா அல்லது ஹாஜி சொல்லித்தான் கேட்கிறாரா என்பதை அத்துவதூத் நானாவால் தீர்மானம்கட்ட முடியவில்லை.

“உனைஸ் ஹாஜி ஏன்ட ஹைபிரகட்.. மகன ஓதவெக்கச் செல்லி ஐடியா தந்த அவருதான். எனக்கு இப்பமாதிரி நெனவு”

“அப்ப அவருதான் செல்லியனுப்பீக்கிய.. அல்லா ஓங்கள கையுடுகியல்ல.. அந்த மனிசன்ட யாவாரம் தொழில.. சொத்துப் பத்தியள பாத்துக்கொள அதுபோலொரு மரு மகன் ஒணுமேன்..” ஆபிதா அடித்துச் சொன்னாள்.

அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஹாஜி வீட்டுக்குச் சென்ற காதர் காக்கா எப்போது வருவாரென்று அடிக்கடி ரோட்டைப் பார்த்தவண்ணமிருந்தார்.

“ம் அந்தக் குட்டிக்கும் மிச்சம் மிஞ்சினா பதினாறு பதினேழு வயஸீக்கும். எங்கடவனுக்கு இப்பதான் இருவத்தினாலு பொறந்தீக்கி..”

“ஓ.. வாக்கான மெல்லிய குட்டி.. ஜாதி விஷயம்.”

ஒருவருக்கொருவர் சொல்லிப் பெருமித மடைந்துகொண்டனர்.

ரெடிமேட் வியாபாரம் பண்ணப் போவதாகவும் தனக்கு எப்படியாவது இருபத்தையாயிரம் தேடித்தருமாறு நேற்றுத்தான் சொல்லிக்கொண்டிருந்தான். அதற்கு எங்கே போவதென்று தவித்துக் கொண்டிருக்கையில்தான் இந்தச் செய்தி வந்துதட்டியது.

காதர் காக்கா நேற்றுப்போல் இனி மஃரிபு தொழுதுவிட்டுத்தான் வருவார் போலிருந்தது. அதுவரை ஆபிதாவுக்குப் பொறுமையில்லை.

எதிர்பாராத விதமாக வாஹிது நானா காதர் காக்காவைப் பள்ளியில் சந்தித்தார்.

ஸலாம் கொடுத்த கையோடு எழுந்தவருக்கு ஆபிதாவைக் கண்டு சொல்லும்வரை ஒருவித வேகம்.

“இன்னேம் வரல்ல காதர் காக்கா” இது ஆபிதா.

“அவர நான் பள்ளீல கண்ட”

“மெய்யா எனத்தியன் சென்ன?” என்ற வாறு கதைகேட்க வசதியாக அமர்ந்துகொண்டாள்.

வாஹிது நானாவின் தொண்டையை ஏதோ இறுக்குவதுபோலிருந்தது. செருமிச் சரிசெய்துகொண்டு ஆரம்பித்தார்.

“அது சரிவாரல்லயாம் ஆபிதா” வார்த்தைகளில் ஏமாற்றம் வழிந்தது.

“ஏன்ட கத்தேம்.. சும்மீக்கிய மனிசர சொரண்டிப் பாக்கிய வேலயேன் இது”

“ஹாஜியார் ஒன்டும் செல்லில்ல. காதர் காக்கதான் எங்கட விஷயத்தப் போட்டுப் பாத்தீக்கி... ம்.. ஒவ்வொரு மனிசரடேம் ஜாதி இப்பிப்பதான் வெளங்கிய.. அவனுக்கு நல்லோரு கடயொன்டயாலும் பேசிக்குடுக்கோணும்”

மீண்டும் வீட்டுக்குள் இருள் கவிய ஆரம்பித்தது.

அன்று கொஞ்சம் காற்று வீசிக்கொண்டிருந்ததால் வெக்கை அவ்வளவாகத் தாக்கவில்லை. வெட்கப்பட்டும் பிரயோசனமில்லை. கொஞ்ச நாளைக்கென்றாலும் மகனை ஒரு கடையில் நிற்பாட்டினால் நல்லதென்று முடிவுசெய்தார் அத்துவாஹிது நானா.

“ஆ வாஹிது நானா வாங்கொ வாங்கொ.. டேய் அந்த புட்டுவத்த இங்களபோடு”

ஆஸிம் பொஸ் மகிழ்ச்சியோடு வரவேற்றார். கடையில் சனம் மந்தமான நேரம் பார்த்துத்தான் போயிருந்தார்.

“ஒங்களப் பாக்கத்தான் வந்த.. எப்பிடியன் சொகமா?”

“இருக்கியோம்.. ம்... இப்ப மகனுக்குப் பட்டம் கெடச்சீக்கி.. வாசிதான்.. எனத்தியன் யோசின?” பொஸ் கேட்டார்.

“ஒ... எத்தினயோ பள்ளிகள்ள கூப்பிட்டுக் கூப்பிட்டு வார.. அவருக்கு அப்பிடிப்பொகப் புரியமில்ல.. யாவாரம் பண்ணத்தான் யோசின..”

“நல்லந்தான்.. ஹலாலான மொறக்கி எதச் செஞ்சாலும் சரிதான்..”

“யாவாரத்தப் பழகிக்கொளங்காட்டீம் கொஞ்சநாளக்கி ஒங்களுக்கிட்ட நின்டா நல்லமென்ட எனக்குப் படுகிய.. அதத்தான் கேட்டுப் பாக்கோணுமென்டு வந்த”

“கோச்சிக்கொளவான.. இப்ப யாவாரமியள் மிச்சம்

மோசம். நீங்க சென்னத்துக்கு எனக்கு சும்ம நிபட்டிக் கொளேலவேன்... அந்தப் புள்ளேட தராதரத்துக் கேத்தமாதிரி கவனிக்கோணுமேன்.. நிக்கியவங்களுக்கே சம்பளம் குடுத்துக் கொளேலாத நெலபரம். சரி நான் செல்லியனுப்பியனே"

"ஓ.. நல்லம் அவசரமில்லதானே.." விடைபெற்றுக் கொண்டபோதும், காரியம் நடக்காதென்பது அவருக்கு உறுதியாகிவிட்டது.

வாஹிது நானா மகன் விடயமாக எடுத்த முயற்சிகளெல்லாமே சறுக்கிக் கொண்டுபோவது ஏனென்று புரியவில்லை.

ஆனால் அவர் நம்பிக்கை வைத்துப் பழகியவர்களெல்லாமே நம்பிக்கையானவர்களல்ல என்ற பேருண்மை அவருக்கு சந்தேகமில்லாமல் தெளிவாகியது.

இதைப்போய் மனைவியிடம் எப்படிச் சொல்வது.. இந்தச் சின்ன விஷயமே சாத்தியப்படவில்லை யென்றால் அதை எப்படி அவள் தாங்கிக்கொள்வாள்.

மகனுக்கும் என்னபதில் சொல்வதென்று தெரியவில்லை அவருக்கு.

* * * * * * *

அடுத்த நாள் சுபஹு தொழுகையைத் தொடர்ந்து...

ரம்ஸான் மௌலவியும் அவரது நண்பர்களும் வீட்டுக்கு வந்திருந்தார்கள். பாதையோடு ஒட்டிய முற்றத்தின் ஒரு பகுதியை மறைத்து.. தடிகளை நட்டி ஒரு கடையமைப்பை உருவாக்கிக்கொண்ருந்தார்கள்.

பழைய தகரங்கள், கிடுகு என்பனவும் வந்துசேர்ந்தன.

வாஹிது நானாவும் மனைவியும் புதினப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"எனத்தியன் பாக்கிய மகன் கடபோடப் போற.. தேத்தண்ணிக் கட" யாரோ ஒருவன் கிண்டலாகச் சொல்ல வில்லை.

"ஸுப்ஹானல்லா.." என்றவாறு வாசல்படியில் அமர்ந்துவிட்டார் வாஹிதுநானா.

"கட்லிஸ்.. பெடிஸ்.. வீச்சரொட்டி... ஆப்ப... இடியாப்பம் வேண்டிய ஜாதீயீக்கி.. இவடத்தில கிட்ட நட்ட ஒரு கடயாலுமில்ல.. நல்லோரு யாவாரம் பாக்கேலும்.." இது இன்னொருவன்.

"அல்லா புரிச்சமாதிரி" ஆபிதா புறுபுறுத்துக்கொண்டாள்.

சேட், ஜுப்பா வெல்லாம் கழற்றிவைத்துவிட்டு வேர்க்க விறுவிறுக்க வேலை செய்துகொண்டிருந்தார்கள்.

நாளை கடைதிறக்கும் போது பெயர்ப்பலகை எதுவும் தொங்காது. ஆனால் ஹஸ்ரத் கடை யென்றோ மௌலவிக் கடையென்றோ ஊர் ஒரு பெயரை வைத்துக்கொள்ளத்தான் போகிறது.

❖

# ஆணிமான்மியம்

நேரம்கெட்ட நேரத்தில் இப்படி இரண்டுக்குப் போகவேண்டிய தேவை ஏற்படுமென்று எதிர்பார்க்கவேயில்லை. இருந்திருந்துவிட்டு இப்படியொருதேவை, ஒருநாளில் ஏற்படுவது எவருக்கும் சகஜம்தான்.

எழுபத்தி நான்கு பேர் வேலை செய்யும் எங்கள் கந்தோரில் கழிப்பறைகளுக்குப் பஞ்சமில்லை. குளிப்பறையும் இரு கழிப்பறையுமாக ஒரு தொகுதி, மூன்று கழிப்பறை கொண்ட இன்னொரு தொகுதி, இரட்டைக் கழிப்பறை, தனித்தொன்று... இப்படியிப்படி பிரச்சினையே இல்லை. அன்றாடம் தேவைகளுக்காக சனம் வந்துபோய்க் கொண்டிருந்தாலும் போதாக்குறையென்ற பேச்சுக்கே இடமில்லை.

வருடாந்த திருத்த ஓதுக்கீட்டில் புதுப் பித்தல், பழுதுபார்த்தல் வேலைகளுக்கும் வாய்ப்புண்டு. நீர் வசதி இருந்தும் என்ன, பாவனைக்குறைபாடு சொல்ல வேண்டியதுதான்.

பிழை சொல்லக்கூடாது பெண்மணிகள் போய்வரும்போது எவருக்கும் முகம்சுழிக்க இடம்வைக்க மாட்டார்கள். இந்தச் சுவரோவியக் காரர்கள் இருக்கி றார்களே, அவர்களால்தான் பெரிய பிரச்சினை. இன்னும் பலர் போகவேண்டுமென்பதை யோசிக்கவே மாட்டார்கள்.

பலபேர் போனவேகத்தில் மூக்கைப் பொத்திக் கொண்டு திரும்பி அடுத்தடுத்ததற்கு ஓடிக்கொண்டிருப்பார்கள். சிலபேர் புண்ணியம் கருதி ஒரிருவாளித் தண்ணீர் அடித்துவிட்டு தமது காரியத்தைப் பார்ப்பார்கள்.

கந்தோர் உடையோடு இரண்டுக்குப் போவதிலுள்ள கஷ்டம் அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். இந்தக் களிசானை எங்கே வைப்பது? கக்கத்திலடித்துக் கொண்டு காரியம் பார்க்க முடியுமா? ஊப்புக்கு மேல் வைக்க அது எந்தப் பக்கம் விழவென்று பார்த்தது. தளத்தின் ஒரு மூலையில் வைக்கலாமென்று பார்த்தால் எல்லாப் பக்கமுமே ஈரமாகக் கிடந்தது.

மேலே ஒரு பக்கத்தில் காற்று வீச்சுக்காக போதுமானதொரு இடைவெட்டு வைக்கப்பட்டிருந்தது. அதில் களிசானை வைத்தால் என்னவென்று யோசித்தேன்.

இந்தப் பக்கம் குரங்குகள் இல்லாவிட்டாலும் குரங்குச் சேட்டை விடுவோர்க்குப் பஞ்சமிருக்கவில்லை. விளையாட்டு வாக்கில் இழுத்து வெளியே எறிந்துவிட்டார்களென்றால் என்பாடு அதோகதிதான். அந்த யோசனையை அப்படியே அமுக்கி விட்டேன்.

வேறென்ன செய்ய...! ஈரப்பற்றுக் குறைந்த இடமாகப் பார்த்து அந்த நேரத்துக்கு வைப்பதென்ற முடிவோடு கையிலேயே வைத்துக்கொண்டேன்.

ஐம்பதுக்கு மேல் ஆம்பிளைகள் வேலை செய்யும் இந்தக் கந்தோரில் ஒருவனுக்குக்கூட, இந்த நிலைப்படியில் ஒரு இரண்டு இஞ்சி ஆணியடித்துவிடும் ஐடியா வரவில்லையே! இவர்களெல்லாம் இப்படியான வேளையில் எப்படிச் சமாளிக்கிறார்களோ தெரியவில்லை.

சில நேரம் வேறெங்கும் அடித்துவைத்திருக்கக்கூடும். எவ்வளவு வசதி, கொழுவிவிட்டால் சரி. எதற்கும் ஒட்டு மொத்தமாக ஒரு கண்ணோட்டம் விடத்தான் வேண்டும்.

அடுத்தடுத்த நாட்களில் ஒவ்வொரு இடமாக ஏறிஇறங்கி அவதானித்தேன். இல்லவேயில்லை. சில கழிப்பறைகளில்

வாளிக்கு மேலதிகமாக சிறிய கோப்பை உண்டு. சவர்க்காரத் துண்டுகள் காணப்பட்டன. தீப்பெட்டிகள்கூட கிடந்தன. அது புகைதாசர்களின் ஏற்பாடுபோலும் எங்காவது ஓரிடத்தில் ஒரேயொரு ஆணி அடித்துவிட ஒரு நாய்கூட இல்லாமல் போய்விட்டதே பாருங்கள்.

இந்தக் கந்தோரில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களைத் தவிர, ஏனையவர்கள் "ஸேர்" என்று மரியாதைப் படுத்தும் பதவிநிலையில் இருப்பவன் நான். என்றாலும் கெளரவம் பார்க்காமல் நானாவது இந்தக் காரியத்தைச் செய்தாகவேண்டும்.

* * * * * * *

எனது திட்டத்தை நிறைவேற்ற ஒரு ஆணியும் சுத்தியலுமிருந்தால் காணும். இதனை நான் நேரடியாகச் செய்ய வெளிக்கிட்டால் அது என்னைக் காட்டிக் கொடுத்தவிடும். எவனாவது கண்டுவிட்டானென்றால் அதற்கு விளக்கம் சொல்லவேண்டும். அவன் சும்மா இருப்பானா? தன்பாணியில் அடுத்தவனுக்குச் சொல்வான். அது அப்படியப்படியே போய்க்கொண்டிருக்கும்.

"இங்க வாங்கடாப்பா" என்றால் வரிசையாய் வந்துநிற்க ஏழெட்டுப் பியோன்மார் இருக்கவே இருக்கிறார்கள்.

"இந்த ஆணிய அடிச்சிட்டு வாங்க" என்றால் நிமிஷத்து வேலை. பின்னர் அவர்கள் கூடிக்கதைப்பார்கள். தலை கால் வைப்பார்கள். பகிடிக் கதையாக அது உலாவத் தொடங்கும். அடுத்தடுத்த கந்தோர்களிலும் நுழைந்து பரவும். இதைவிட நானே செய்வதுதான் புத்திசாலித்தனம்.

முதலில் ஒரு அளவான கருங்கல்லை கழிப்பறைக்கு கொண்டுசேர்க்க வேண்டும்.

அடுத்த நாள் போகிற போக்கில் கால்கள் அந்தக் காரியத்தின் முதற்கட்டத்தைச் செய்யத்தவறவில்லை.

பின்நேரம் கல்லைத் தூக்கி அந்தப் பக்கமாக எறிந்துவிட்டேன். எவரும் கண்டிருந்தால் "நாய் படுத்திருந்தது அதுதான்" என்று சொல்லித் தப்பிவிடலாம். ஆனால் எவரும் காணவில்லை. அடுத்த நாளும் கல் அதே இடத்தில் கிடந்தது. திரும்பிப் பார்த்துவிட்டு எடுத்து, உள்ளே காற்றிடை வெளியில் வைத்துவிட்டேன். அப்பாடா ஐம்பது வீதம் சரி.

இனி ஒரேயொரு இரண்டிஞ்சி ஆணி தேடி யெடுத்தால் சரி, எவரிடமும் கேட்கக் கூடிய சாமானாகவும் இது இல்லை. கடையில்போய் ஒரு ஆணி கேட்கவும் முடியாது. அதற்காக நூறுகிராம் வேண்டி சும்மா கறள் பிடிக்கப் போட்டுவைப்பதிலும் அர்த்தமில்லை. கந்தோருக்குள் தேடிக்கிடைக்கப்போவது மில்லை. வீட்டில்தான் தேடவேண்டும்.

வீட்டுக்குப் போனால் வீட்டுத் தேவைகள், பிள்ளைகளின் படிப்பு, அடுத்த வீட்டுத் தொல்லை, உதவிகேட்டு வரும் ஊரவர்கள் இப்படி எல்லாமே மறந்துபோய்விடும். இப்படியிப்படியே நாளும் ஓடிக்கொண்டிருந்தது.

இந்த வார இறுதிக்குள் எப்படியாவது தேடியெடுப்பதென்ற முடிவு ஞாபகமும் மறதியுமாக அல்லாடிக் கொண்டிருந்தது.

"இந்தப் பொடவ காயப்போடிய கொடி பிஞ்சி பிஞ்சி புழுகிய... பொடவ சீலய மறுகமறுக கழுகிக்கழுகீக் கேலுமா.. ரெண்டாணியடிச்சி புழாமக் கெட்டித்தாங்கொளே... லீவு நாளேல ஒரொதவியச் செய்யாட்டி வேறெப்பேக்கன் செய்த.."

கோபமும் வேண்டுகோளும் கலந்த மனைவியின் குரல் அன்று எனக்கு மிகவும் விருப்பமானதாக அமைந்துவிட்டது.

லடாபடா பெட்டிகளைத் தேடித்துருவி ஆணிகளைக் கைப்பற்றிக் கொண்டேன். முதல் வேளையாக அதிலொன்றைப் பேப்பரில் சுற்றி ஓ∴பீஸ் பேக்கினுள் வைத்துவிட மறக்கவில்லை. ஒரு பெரிய நிம்மதி எனக்கு. அந்த மகிழ்ச்சியோடு கொடிகட்டும் படலத்தில் இறங்கினேன்.

திங்கட் கிழமை கந்தோருக்குச் சென்றதும் ஆணியை எடுத்து பொக்கற்றில் போட்டுக் கொண்டேன். ஒன்றுக்குப்போனவேளையில் ஆணியைக் காற்றிடைவெட்டில் வைத்து விட்டேன். இப்பொழுது நூறுவீத தேவை பூர்த்தியாகிவிட்டது. இனி ஆணி அடிக்கும் வேலையொன்றுதான் பாக்கி.

அரை இஞ்சி இறங்குவதற்கு பத்துமுறையாவது அந்தக் கல்லால் அடிக்கவேண்டியிருக்கும். அதற்கிடையில் இதென்னடா தோம் தோமென்ற சத்தமென்று நான்குபேர் ஓடிவந்து விடுவார்கள். இவ்வளவு நாளும் பொறுத்தாயிற்று. பொருத்தமான சந்தர்ப்பம் வரும்வரை இன்னும் கொஞ்சம் அமைதிகாப்பதே நல்லது.

* * * * * * *

அன்று சனிக்கிழமை.

மத்திய அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்ற அவசர உத்தரவுக்கேற்ப துரிதமாக வேலைகளை முடிக்கவேண்டியிருந்தது. ஓவர்டைம்தான்.

அது ஒன்றும் என் மண்டையில் ஓடவில்லை. ஆணியடி படலத்தை எப்படியாவது பாடி முடிக்கவேண்டுமென்பதிலேயே சுற்றிச் சுழன்றது.

அன்றைய மேலதிக வேலைக்காக, முன்னேற்பாட்டின்படி மூன்று கிளாக் பெண்களும் ஒரு பியோனும் வந்திருந்தார்கள்.

"இங்கவா இன்டக்கி கென்டீன் பூட்டி வெளணேச் சப்பாடு எப்பிடியன்?"

"அதுதான் ஸேர்"

"சரி பெய்த்துத் திண்டிட்டு வரச்செல்லே பேப்பரேம் எடுத்துக்கொணுவா.. சீக்கரம் வரோணும் வெளங்கினா"

"ஓ... ஓ"

சிரித்துக்கொண்டே வெளியேறினான். சீக்கிரம் என்றால் எப்படியும் ஒரு மணித்தியாலத்திற்குமேல்தான் வந்துசேர்வான். பரவாயில்லை நேரகாலத்தோடு வந்து முன்னேற்பாடுகளை செய்துவைத்திருந்தவன்தானே.

முக்கிய பிரச்சினை தீர்ந்துவிட்டது. இனி அவன் வருவதற்கிடையில் கதையைக் கொடுத்துவிட்டால் சரி.

பெண்கள் பக்கமாக எட்டிப் பார்த்தேன். மூவரும் ∴ பைல்களை விரித்து வேலையில் மூழ்கியிருந்தார்கள். இனி பேச்சும் சிரிப்புமாய் காரியம் நடந்துகொண்டிருக்கும்.

பத்து மணிக்கெல்லாம்தான் சோம்பல் முறிக்க எழும்புவார்கள்.

இப்பொழுது எனக்கு ரோட் கிளியராகிவிட்டது. ஒன்றுக்குப் போவதுபோல் பின்பக்கமாக நகர்ந்தேன். ஒரு நாய் பூனையைக்கூடக் காணவில்லை. இதைவிடப் பொருத்தமான வாய்ப்பு வேறெப்போது வரப்போகின்றது.

குறிப்பிட்ட கழிப்பறையுள் புகுந்து கதவைப் பூட்டினேன்.


இடைவெட்டில் கல்லும் கடதாசியில் சுத்தப்பட்ட ஆணியும் அப்படியே இருந்தன.

இதென்ன ஆச்சரியம்! மீண்டுமொருமுறை கண்மணிகளைக் கசக்கிக்கொண்டு பார்த்தேன்.

வெள்ளிநிற குடைபோன்ற தலையோடு அதுவும் திருகாணியொன்று கதவுநிலை மூலையில் அழகாக அடிக்கப்பட்டிருந்தது.

'அட என்னப் பாக்க பெரிய மனிசரும் இங்க ஈக்கியாங்களே' என்ற மகிழ்சியோடு வெளியே பாய்ந்தேன்.

❖



இலக்கிய உலகில் திக்குவல்லை கமால் என்ற பெயர் மிகவும் பரிச்சயமானது.

நாவல், நாடகம், சிறுவர் இலக்கியமென்று பல நூல்கள் எழுதியுள்ளார்.

இது இலங்கை கலாசாரத் திணைக்களம், 2007 தேசிய இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு நடாத்திய, சிறுகதைத் தொகுப்பு பிரதியாக்கம் போட்டியில் முதற்பரிசுபெற்ற படைப்பாகும்.

கோடையும் வரம்புகளை உடைக்கும், விடை பிழைத்த கணக்கு, குருட்டு வெளிச்சம், விடுதலை, புதியபாதை, வரண்டு போன மேகதர்கள், ஆகிய தொகுப்புகள் அவ்வப்போது வெளியாகியுள்ளன.

ஒட்டுமொத்தமாக கமாலின் சிறுகதைகள் தனது பிரதேச மக்களின் வாழ்க்கைக் கோலத்தை யதார்த்தமாகவும் முற்போக்காகவும் மண்வாசனை கமழச் சித்தரிப்பனவாகும். அதேவேளை அதனூடாக மேற்கிளம்பும் செய்தி, தேசிய சர்வ தேசிய மனித நேயத்தைத் தொட்டு நிற்கின்றது.

இவரது சிறுகதைகள் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் திக்குவல்லை கமால் தனக்கென்றொரு இடத்தை என்றோ உறுதிப் படுத்திக் கொண்டுள்ளார் என்பதில் இரண்டு கருத்துக்கிடையாது.

**வாழ்க வளர்க இவர்பணி**

கி. உதயகுமார்
ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)
தெற்கு வலயக்கல்வி அலுவலகம்
வவுனியா

150/=

ISBN - 978-955-8377-97-0